கொங்கேழ் சிவதல வரலாறு. வகை (1)

அவிநாசித் திருத்தலச் சிறப்பு



திரு. சி. ஆ. நாராயணசாமி முதலியார்

உ

சிவமயம்

அவிநாசித் திருத்தலச் சிறப்பும்

புக்கொளியூரில்

ஸ்ரீ சுந்தரமூர்த்தி சுவாமிகள்

முதலையுண்ட பாலனை அழைப்பித்த அற்புதமும்.

இது

பழநித் தலமகிமை, திருப்பேரூர்த்தல மான்மியம்,
திருப்பேரூர்த்தலச் சிறப்பு முதலிய நூல்களின்
தோகுப்பாசிரியரான

கோயமுத்தூர்

சி. கு. நாராயணசாமி முதலியார்

தொகுத்தியற்றியது.

சென்னை,
கேசரி அச்சுக்கூடத்தில்
பதிப்பிக்கப்பெற்றது.

பதிவு செய்யப்பெற்றது.] 1936 [விலை அணா 6.

பொருள் அடக்கம்

முன்னுரை iii
மதிப்புரைகள் v
தோற்றுவாய் .... 1—2
1. கொங்கு நாட்டுச் சிறப்பும், பிறவும் .... 3—7
2. தலமும் பெயரும், இடமும் வழியும் .... 7—10
3. மூர்த்தியின் பெயரும், மகிமையும் .... 11—12
4. தீர்த்தங்களும், மேன்மைகளும் .... 13—22
5. ஆலயஞ் சூழ்தலும், வணங்கு முறையும் 23—29
6. ஆலயத்தின் பழைமையும், ஏதுக்களும் 29—30
7. அவிநாசியப்பர் ஆலயக் கல்வெட்டுக்களும், கொங்கு மன்னர் முதலிய அரசர்களும், அவர்களது திருப்பணிகளும். ... 30—42
8. கோயில் கொண்டருளும் மூர்த்திகளும், கோபுரம், கொடிக்கம்பம், தூண்கள், மண்டபங்கள் முதலியவைகளின் விவரங்களும் .... 43—50
9. ஸ்ரீ சுந்தரமூர்த்தி சுவாமிகள் புக்கொளியூர் வருகையும், அவ்வூர்க் குளத்தில் முதலையுண்ட பாலனை அழைப்பித்ததும் .... 51—68
10. பிரம்மோற்சவமும் பிறவுற்சவங்களும், அவை நிகழும் காலங்களும் .... 69—71
11. ஊரமைப்பும், ஜனத்தொகையும் .... 72—73
12. திருமடங்களும், தர்ம சத்திரங்களும் .... 74—77
13. அவிநாசியும் அதனைப் பத்து மைல் சுற்றளவு சூழ்ந்துள்ள சிவதலங்களும் .... 78—81
14. பிரபந்தங்களும், பாடினோர்களும் .... 82—83
15. தேவாரம் திருப்புகழ்களும், பிற நூற்களும் 83—88
16. யாத்ரீகர்கள் பிரார்த்தனைக் காணிக்கைகளும், பிறவும் .... 89—90

முன்னுரை.

சிவாலயங்களே சைவத்தையும், சமயத்தையும் வளர்ப் பதில் சிறந்த சாதனங்களென்று அறிஞர்கள் கூறுகின்றனர். சிவாலயங்களில் அருட்குறியாக விளங்கும் இறைவனை வழி படுதல் அன்பர்கட்கு இன்பம் பயப்பதாகும். இவ்வின்பத் தை மேலும் மிகுதியாக்குவன-திருக்கோவில்களின் இனிய வரலாறு, மூர்த்தி மகிமை, தீர்த்த விசேடம், தலச் சிறப்பு, தேவாரம் திருப்புகழ்ப் பாடல்கள், சிற்பம், சித்திரங்கள் முதலி யனவாம். இவைகளையும், மற்றும் இன்றியமையாத விஷயங் களையும் உடன் சேர்த்துக் கொங்கு நாட்டில் பாடல் பெற்ற சிவதலங்கள் ஏழுக்கும் அழகிய முறையில், இனிய செந்தமிழ் நடையில், எளிய விலையில், தல சம்பந்தமான படங்களுடன் சிறு சிறு புத்தகங்களாக எழுதி வெளியிட வேண்டுமென் பதில் நீண்டநாளாகவே எனக்கு மிகுதியான விருப்பம். இது நான் பிறந்த நாட்டுக்குச் செய்யவேண்டிய கடமைகளில் ஒரு சிறு தொண்டுமாம். ஆயின், "அடுத்து முயன்றாலும் ஆகும் நாளன்றி எடுத்த கருமங்களாகா" என்பது என்னளவில் மெய்யாகவே இருந்தது. இப்பொழுது அதனை முற்றுப் பெறுவித்த முருகப் பெருமானுர்க்குக் கோடிவணக்கம் நாடிச் செலுத்துகின்றேன்.

கொங்குச் சிவதலங்களுள் முதல்வைத்தெண்ணற்குரிய பெருமை வாய்ந்தது திரு அவிநாசியே. ஆனதால், அத்தலச் சிறப்பை முதலில் வெளியிட நினைந்து அதற்குரிய செலவு களுக்குப் பொருள் உதவுமாறு இப்பொழுது புக்கொளியூரில் புது நந்தனவனம் அமைத்துச் சிவத் தொண்டாற்றிவரும் ஸ்ரீமத் அ. சி. சுவாமி கருணாலயமூர்த்திகளை வேண்டினேன். அருங்குணமும், உயர்ந்த தன்மையும், நல்லனவற்றிற்கு உதவுவதில் விருப்பமும் மிக்குடைய அவ்வடிகள், நன்றெனக் கூறிப் பொருட்சகாயம் செய்து நூலையும் முற்றுப் பெறச் செய்வித்தார்கள். அப்பெரியார் பெருங்கருணைக்கு எளியேன் யாது கைம்மாறு புரியவல்லேன்? அவ்வடிகள் இன்னும் நீடுழி இந்நிலவுலகில் நின்று நிலவி, நலம் பலவியற்றி நாயகன் திருவருட்கு உரியராம்படி எல்லாம் வல்ல இறைவர்தம் பொன்னர் திருவடியை மனமார வாழ்த்துதலன்றி நான் செய்யக்கூடிய கைம்மாறு வேறிலது.

இந்நூல், சிறு பகுதி தலபுராணத்தைத் தழுவியும், பெரும் பகுதி தற்கால நாகரிக உலகத்தின் மக்கள் மனநிலைக்கேற்பவும், விரும்பிப் படிப்பதற்குரிய வகையிலும், பிறர் உதவியின்றி யாத்ரீகர்களே தலம் தீர்த்தம் மூர்த்தி விசேடங்களையும், அவைகள் இருக்குமிடங்களையும், அவிநாசி சென்றடைதற்குரிய வழி வகைகளையும், நாட்டின் பருவ நிலை, தங்குமிடம், ஊரமைப்பு முதலியவைகளையும் பற்றியே எழுதப்பட்டுள்ளது. இம்முறை யாத்ரீகர்களுக்கு நன்மையுண்டாக்குமென்றே நம்புகின்றேன்.

இதனை நான் தொகுத்தியற்றுதற்கு எனக்குமுன் அறிஞர்கள் சிலர் அவிநாசித் திருத்தலத்தைப் பற்றி எழுதியுள்ள அரிய இனிய செய்திகளும், சாசனக் குறிப்புகளும் உதவியாயிருந்தன. அவற்றுள் மிகுதியும் எனக்கு நல்லுதவியாயிருந்தவை, எனது அரிய நண்பரும், தமிழ் நூல்கள் சிலவற்றிற்கு ஆசிரியரும், வழக்கறிஞருமாகிய உயர்திரு, ராவ் சாஹேப் C. M. இராமச்சந்திரஞ் செட்டியார் B. A., B. L., அவர்களது சில குறிப்புக்களேயாம்.

இந் நூலுக்கு அன்புகூர்ந்து மதிப்புரை வரைந்துதவிய சைவத் திருவாளர்கள் சி. கே. சுப்பிரமணிய முதலியார் B. A., அவர்கட்கும், வ. சு. செங்கல்வராய பிள்ளை M.A., அவர்கட்கும், திருநெல்வேலி ஆர். பி. சேதுபிள்ளை அவர்கட்கும்; நூலுள் சேர்ப்பதற்குப் போட்டோக்கள் எடுத்துதவிய அவிநாசித் தாலூகா ஆபீஸ் குமாஸ்தா திரு. ஸ்ரீநிவாஸநாயுடு அவர்கட்கும், தலசம்பந்தமான பல விஷயங்களை நேரில் அழைத்துச்சென்று காட்டியும், விவரம் கூறியும் நன்மைசெய்த ஸ்ரீமத் சு. சுப்பிரமணியக் குருக்கள் அவர்கட்கும், நூலின் முகப்படம் அச்சிட்டுக் கொள்வதற்கு ஆப்டோன் பிளாக் அன்புகூர்ந்து உதவிய தென்னிந்தியா சைவ சித்தாந்த நூற்பதிப்புக்கழகத்துச் சென்னைக் காரியஸ்தர் திரு வ. சுப்பையா பிள்ளை அவர்கட்கும், எனது அன்பார்ந்த வணக்கமும், மறவாநன்றியறிதலும் என்றும் உரியதாகுக. நலம்.

கலைமகள் தமிழகம்
கோயமுத்தூர்
25-4-36.

சி. கு. நாராயணசாமி முதலியார்.

மதிப்புரைகள்

1. கோயமுத்தூர் வழக்கறிஞரும், பலசைவநூல்களின் ஆசிரியரும், சர்வகலாசங்கத்து அங்கத்தினருமான

உயர்திரு சி. கே. சுப்பிரமணியமுதலியார், B.A., Avl.

'திரு அவிநாசித்தலச் சிறப்பு' என்ற இந்நூலை நான் பார்த்தேன். இதனை இயற்றிய நண்பர் திரு. சி. கு. நாராயணசாமி முதலியார் மிக அரிதின் ஆராய்ந்து பல அருமையான பொருள்களைத் திரட்டி இதிற் றொகுத்துக் கூறியுள்ளார். கொங்குநாட்டுச்சிறப்பு என்ற பகுதியிலே இந்நாட்டுப் பொது அமைப்புக்களும், தலங்களின் அமைதியும் காட்டப்பட்டுள்ளன. திருநாவலூர் நம்பிகள் இத்திருத்தலத்திற் செய்தருளிய முதலைவாயிற் பிள்ளை அழைத்த அற்புதச் செயலை விரிவாய் எடுத்துக் கூறியுள்ளார். இத்தலத்தின் ஆலயம் மிகப் பழமை வாய்ந்தது. அதிற் காணப்படும் கல்வெட்டு எழுத்துக்களிலிருந்து கி. பி. 1149-ஆம் ஆண்டு முதல் கி. பி. 1756-வரை ஆறு நூற்றுண்டுகளில் கொங்கு நாட்டை ஆண்ட பற்பல அரசமரபினர்களின் சரிதங்களும், அவர்கள் இக்கோயிலிற்செய்த திருப்பணிகளும் ஆராய்ச்சியின்மூலம் நன்கு விளக்கப்பட்டுள்ளன.

இத்தலத்திற்குச் செல்வோர் தெரிந்துகொள்ளவேண்டிய பல செய்திகளும் இச்சிறு நூலிற் றொகுத்துக் கூறப்பெற்றுள்ளன. ஆதலின் இது மிகப் பயனுள்ள நூலேயாம். அன்பர்கள் இதனை ஆதரிப்பார்களாயின், இன்னும் இதுபோன்ற பல நூல்களையும் இவ்வாசிரியர் தொகுத்து வெளியிட உதவியாகும்.

---

2. சென்னை ரிஜிஸ்டிரேஷன் மானேஜரும், ராவ்சாஹிபும், திருப்புகழ்ப் பதிப்பாசிரியருமான,

உயர்திரு வ. சு. செங்கல்வராய பிள்ளை, M. A., Avl.

'அவிநாசித்தலச் சிறப்பு' என்னும் இந்த அரியநூலைச் சைவ உலகுக்கு ஈந்த அன்பர், திருவாளர் சி. கு. நாராயணசாமி முதலியாரவர்களைத் தமிழ் உலகம் நன்கு அறியும். இவர் தமிழ்ப்புலவர்களது சரித்திர ஆராய்ச்சியில் தமது ஊக்கத்தையும், அறிவையும் பலகாலமாகச் செலுத்தித் தாம் பாடுபட்டு

அறிந்த அருமை விஷயங்களை ஒருவழியாகத் தொகுத்து யாவரும் எளிதில் உணரும்வண்ணம் செந்தமிழில் எழுதிப் பல நூல்களை உதவியுள்ள செந்தண்மைபூண்ட செல்வர். சைவத்திலும், தமிழிலும் அசைவிலாப் பற்றுடைய பண்பர். மெய்வருத்தம்பாராது கருமமே கண்ணுகக் கருதும் சீலத்தினர். சைவத்துக்கு இவர் செய்துள்ள இத்தொண்டு இவருக்கு என்றும் புகழையும், பெருமையையும் தரும். அவிநாசித்தலத்தின் அருமைபெருமைகளைப் புராண ஆராய்ச்சி கொண்டு தெளிவுற எழுதியுள்ள இந்நூலில், முதலையுண்ட பாலனை அழைத்த திருவிளையாட்டின் உண்மைநிலை செவ்விதாக எடுத்து விளக்கப்பட்டுள்ளது. அவிநாசியப்பர்புகழே என்றும் விளங்க என்னுங் கருத்துடன் எழுதப்பெற்ற இந்நூலும், இந்நூலை எழுதிய ஆசிரியரும் என்றும் இறைவன் திருவருளால் வாழ்க! வாழ்க! வாழ்க!

"எந்தைபிரான் வீற்றிருக்கும் அவிநாசித் திருத்தலத்தின் எழில்கள் யாவுஞ், செந்தமிழிற் றெகுத்தளித்த சீராளன் தமிழ்ப்புலவர் சீர தெல்லாம், அந்தமுடன் ஆராய்ச்சி செய்துதமிழ் உலகினுக்கே அரிய நூல்கள், தந்ததிற லுறு நாரா யணசாமிச் செல்வனவன் தழைத்து வாழ்க."

---

3. அண்ணுமலை சர்வகலாசாலைத் தமிழ் லெக்ச்சரர்,

உயர்திரு ரா. பி. சேதுப் பிள்ளை, அவர்கள்.

சைவரும், தமிழரும் போற்றும் கொங்கு நாட்டுத் தலங்களுள் மிகச்சிறந்தது அவிநாசியாகும். முதலையுண்ட பாலனைத் தண்டமிழாலழைத்த வன்றெண்டர் தனிப்பெருஞ் சைவத்தின் மாண்பினை விளக்கிப்போந்த தலத்தின் பெருமை அளவிடற்கரிதன்றே! இத்தகைய தலத்தின் பெருமையைக் கற்றேரேயன்றி மற்றேரும் அறிந்துய்யும் வண்ணம், கொங்குநாட்டுத் தமிழறிஞர், திரு. சி. கு. நாராயணசாமி முதலியாரவர்கள் 'அவிநாசித்தலச்சிறப்பு' என்னும் பெயரால் ஓர் இனிய உரைநடை நூல் இயற்றியுள்ளார்கள். நூலாசிரியர் சைவசமய சீலர், செந்தமிழ்ச்செல்வர். அவர்கள் ஆக்கிய நூலை முறையாகக் கற்பவர் சைவப்பற்றும் தமிழ்ப்பற்றும் உடையவராவர் என்பது ஒருதலை.

உ
சிவமயம்.

அவிநாசித் திருத்தலச் சிறப்பும்

புக்கொளியூரில்

ஸ்ரீ சுந்திரமூர்த்தி சுவாமிகள்

முதலையுண்ட பாலனை அழைப்பித்த அற்புதமும்.

தலவிநாயகர் துதி.


நூல்.

"நூபுரச் சேவடியெடுத்து வலியமுயலகன் முறிய
நோன்று ளூன்றி
மீபுரளா தமுதகதிர் வேணிவைத்தற் புதக்கூத்து
வெளி நின்றாடி
மாபுரநீ றெழநகைத்த புக்கொளியார்
மணிசூழ் செம்பொற்
கோபுரவா யிலையமர்ந்த குஞ்சரத்தை நெஞ்சிருத்திக்
குறைக டீர்வாம்."

தோற்றுவாய்

அருமணிக் கடல்புடை சூழ்ந்த இந்நிலவுலகின்கண் திகழும் பல்வேறு நாடுகளில் அழகு மிகுந்த ஆலயங்கள் அபரிமிதமாய் எங்கணும் நிறைந்து, செவ்விய சிறப்புடன் சீர்பலவோங்கித் திகழ்வது நமது செந்தமிழ் நாடு. அந்நாட்டில் அணிபெற விளங்கும் நமது மக்களுக்கு இயல்பாகவே

அமைந்த தெய்வபக்தி மற்றெங்நாட்டினர்க்கும் இல்லை யென்றே குன்றேறி நின்றும் கூசாமல் கூறலாம். இறை யன்புக்கு என்றும் இடர்நேராதவாறு மக்கள் இருக்குமளவும் நமது நாடு நாடாகவே யிருக்கு மென்பதில் எட்டுணை யும் ஐயமில்லை. இவ்வாறு பேரன்பு நம்மவர்க்குப் பெருமா னிடத்தில் மிகுந்திருப்பதினுலேயே தேவாரம், திருவாசகம் பாடிய சமயாசாரியர்கள் நால்வரும், ஏனைத் தனியடியார்களும், திருவாய்மொழி முதலிய பிரபந்தங்களைப் பாடிய பன்னிரு ஆழ்வாராதியர்களும் தண்டமிழ் நாட்டில் தோன்றினர். சிவன், திருமால் முதலிய தேவர்களிடத்தில் மக்களுக்கு அன்பும், ஆர்வமும் மிக்கிருப்பதனுலன்றே! நமது தமிழ் நாடு தவநாடென்று பெயர் சிறப்பதற்காயிற்று. மேலை நாடு களில் களியாட்டுச் சாலைகள் கணக்கிலவாயிருக்கத் தமிழகத் தில் கோயில்கள் கோடிக் கணக்கில் மிகுவதற்காயின. அக் கோயில்களில் ஆன்மாக்கள் உய்யும்பொருட்டு அருட்குறி கொண்டு விளங்கும் எல்லாம் வல்ல இறைவனை, அன்பர்கள் சென்று தரிசித்துப் பக்தி செலுத்திப் பணிந்து கும்பிடவும், திருத் தலங்களைச் சேவித்துத் தீர்த்தமாடிப் பாவங்களைப் போக்கவும், சிற்பம், சித்திரம் முதலிய அற்புத நலங்களையும், ஆண்டவன் அர்ச்சை விக்கிரகங்களில், விழாக்காலங்களில், திவ் யாலங்கார வடிவுகளில் பற்பல வாகனங்களிலூர்ந்து திருப் பவனி கொண்டருள்வதையும், கண்களிக்கக் கண்டு மகிழ வும் முந்துவது, தமிழர்களது இன்றியமையாத கடமை யாகும். இச்சிறப்புகளனைத்தும் தம்முட்கொண்டு திருப் பொலியத் திகழும் நமது திருத்தலங்களில் திருஅவிநாசி சேத்திரமும் ஒன்றுகும். இச்சேத்திரத்தின் சீர், சிறப்பு, மகிமை, முதலியவற்றை அன்பர்கள் அறிந்து இன்புறவே இதன்கீழ் விவரிக்கத் தொடங்குகின்றேம்.



ஸ்ரீமத். அ. சி. சுவாமி கருணாலயமூர்த்திகள்.



திருத்தேர்க் காட்சி.

கொங்கு நாட்டுச் சிறப்பும் — பிறவும்.

பண்டைக் காலத்தில் நமது தமிழ் நாடு, தமிழ் வேந்தர்களால் பல பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டு அவைகள் அவ்வவர்களுக்குரிய எல்லைகளில் அடங்கியிருந்தன. அப்பிரிவுகள் சேரநாடு, சோழநாடு, பாண்டியநாடு, நடுநாடு, தொண்டைநாடு என்பனவாம். இவைகளுள் நமது கோங்குநாடு, கோயமுத்தூர் சில்லாவும், சேலம் சில்லாவின் தென்மேற்குப் பாகமும் திரிசிராப்பள்ளி சில்லாவின் கரூர்த் தாலுகாவும், மதுரை சில்லாவின் பழனித் தாலுகாவும் எல்லைகளாகக்கொண்டு பண்டைக் காலமுதல் நிலவி வருகின்றது.

மற்றும் இந்நாட்டை வடக்கில் [1] பிளிகிரிரங்கன்; ' ஒசூர் ' மலைகளும், கிழக்கில் கோல்லி, ஜவ்வாது மலைகளும், தெற்கில் வராகமலை என்கிற பழநி மலையும், மேற்கில் மேற்குத் தொடர்ச்சி மலையும், அரண்களாகவும், அவிநாசி, திருமுருகன்பூண்டி, பவாநி, திருச்செங்கோடு, கொடுமுடி, கரூர், வெஞ்சமாங்கூடல் எனப்பெயரிய கொங்கேழ் பாடல்பெற்ற சிவதலங்களும், மேலைச்சிதம்பரம் என்னும் திருப்பேரூரும் அணிகளாகவும் அழகுபடுத்திக் கொண்டிருக்கின்றன.

நிலப்பரப்பும், நீர்ப்பெருக்கும், பயிர்ச்செழிப்பும், பரந்த காடுகளும், ஓங்கிய மலைகளும் நிரம்பிய இந்நாடு, ஒரு தனிநாடாக இயற்கையாகவே அமைந்திருந்தும், அவ்வமைப்பின் காரணமாக இந்நாட்டினர், தங்கள் நாட்டை ஒரு தனி

---

1 பிளிகிரி = வெள்ளைமலை.

நாடாகப் பண்டுதொட்டே பாவித்துவந்தும், வெளிநாட்டி னர்க்கு இது 'ஒரு தனிநாடு' என்ற எண்ணம் தோன்ரு மலேயிருந்தது. அவர்கள், பழைமைமிக்கதும், செந்தமிழ் பரவியதுமான நாட்டை "சேர-சோழ-பாண்டிய நாடுகள்" என்று மூன்று பெரும் பிரிவுகளாகவே பிரித்துப் பேரரசு செய்துவந்தனர். இம்முப்பெருநாடுகளும் அக்காலத்தில் அம்மூவர் பேராண்மைக்கும், புகழிற்கும், கொடைக்கும், அறத்திற்கும் உறைவிடமாய் விளங்கியிருந்தன. அப்போது இக் கொங்குநாடு அவைகளின் இடையில் அகப்பட்டிருந்த தால், சுதந்தரம்பெற்றுத் தன் ஆதிக்கத்தை நிலைநிறுத்து வதற்கின்றி, அதிகாரமும், பலமும் மேலோங்கியிருந்தவர் களின் கீழ் அடங்கி யிருக்கவேண்டியதாயிற்று.

சங்கத்தார் காலத்தில், இக் கொங்குநாடு 'சேரர்,' என்ற அரசர்களது ஆட்சிக்குள்ளாயிற்று. அது தொடங்கி இதன் பெருமையும், புகழும் சிறிது சிறிதாகப் பரவவும், மேலோங்கவும் ஆயின. இச்சந்தர்ப்பத்தில்தான் ஸ்ரீ சுந்தர மூர்த்திநாயனரும், சேரர்கோனுகிய சேரமான் பெருமாணுய ஞரும், அவர்கட்குப் பின்னர் முருகன் அடியராய் முந்து சிறப்பெய்திய திருப்புகழ்ப் பேராசிரியர் ஸ்ரீ அருணகிரிநாத ரும், மற்றும் பலரும், கொங்கு நாட்டையும், அதனில் புகழ் பரவியிருந்த அவிநாசித் தலத்தையும் கண்டு களிக்க வந் திருக்கவேண்டும். அவர்களுள், திருப்புகழடிகள் அருணகிரி நாதர், "சேரர் கோங்குவைகாவூர்" என்று பழநியையும்; "கொங்கிற்றெக்கா ரவிநாசி" என்றும்; "அருட்செறிந்த அவிநாசி" என்றும், அவிநாசிப்புராணம், அப்பிரமேய தலபுராணங்களைப் பாடிய வித்துவான் இளையான் கவி ராயரவர்கள், "சேரனெடுஞ் செங்கோன் முறை யென்றுந் திகழ்நாடு" "கேரள கோங்கப்பேர் பிரசங்கங்கிளர்நாடு" என்றும் அவிநாசியையும் பாடியிருப்பதால், அவர்கள் நல்வர

வும் அவர்களது அருமைத் திருவாக்குகளும் அகச்சான்று களாகக் கொள்ளற் குரியன. சேரர்கள் ஆதிக்கம் அக் காலத்தில் கொங்கு நாட்டில் இருந்ததென்பதற்கு, "கோக்கண்டன்ரவி" "ரவிகோடை" என்ற சேர மன்னர்கள் பெயர்களும், "வீரகேரளநல்லூர்" "அமரபுஜங்க சதுர்வேதிமங்கலம்" என்ற சேரர் பெயர்களைக்கொண்ட சிற்றூர்களும், இந்நாட்டில் இருப்பது சிறந்த சான்றும். நாட்டின் எல்லைகளும், பரப்பும், அரண்களும், அணியாயுள்ள திருத்தலங்களும் இவையாக, இனி நாட்டின் சிறப்பைக் கூறு வாம். ஒரு காலத்தில் இக்கொங்கு நாட்டுக்குத் "தலைக்காடு" இராஜதானியாகவும், தேன் சொரியும் "கொல்லிமலை" வளஞ்சிறந்த மலையாகவும் இருந்தன. மற்றும் சிவன்மலை, சென்னிமலை, தென்சேரிமலை, சேர்வராயன்மலை, நயினுமலை கஞ்சமலை, கதித்தமலை, மருதமலை, நாகமலை (திருச்செங் கோடு) குருவிருடிமலை, திருமூர்த்திமலை, பொன்னூதிமலை, குருடிமலை, வெள்ளிமலை முதலிய மலைகள் குமரவேள் கோயில் கொண்டருளும் ஏற்றம் பெற்றும், விரும்பிச் சென்று காணும் அன்பர்கட்கு அவர்கள் துன்பம் துடைத்தும், விரும் பும் பயன்களை வெறுக்க நல்கும் மகிமை வாய்ந்தும், மலை வளத்தில் மாட்சிமை சிறந்தும் பிரகாசிக்கின்றன.

உயரிய இடங்களினின்றும் உதித்து ஆங்குனின்றும் பெருகி, தான் செல்லும் வழிகளிலுள்ள பேரூர், சிற்றூர்களை வளம்படுத்த வல்லதும், தன்னுள் மூழ்குவோர்களது பாவங் களைப் போக்கித் தூய்மையை எய்துவிப்பதும், நோய்களை நீக்கும் திறத்ததுமான பவாநி (வானி) ஆம்பிராவதி, காஞ் சிமாநதி (நொய்யல்) திருநள்ளாறு (சாதரி) (அவிநாசி) காவிரி (பொன்னி) திருமணி முத்தாநதி ஆகிய ஜீவ நதிகளும், உப நதிகளும், வேறு பல சிற்றாறுகளும் சீர்பெறத்திகழ் கின்றன.

கொங்கேழ் சிவ தலங்களும், வைப்புத் தலங்களுள் பிறவாநெறித் தலமாகிய [1] திருப்பேரூர், [2] திருக்குரக்குத்தளி (பெரிய பாளையம்), [3] மாட்டூர் (சேவூர்) மடப்பாச்சிலாச்சிரமம்), [4] மோக்கணீச்சுரம் (குடக்கோட்டூர், திருவாசக வைப்புத்தலம்), [5] களந்தை (ஆதித்தேச்சுரம்), [6] அறப்பள்ளி, [7] ஏழூர், [8] தோழூர், (துறையூருந்துவையூருந்தோழூர்தாமும்), [9] திருக்கரபுரம் (பெரியூர்), [10] கோங்கு குமரி (மோகனூர்) "குருகாவூர் வெள்ளடை குமரி கொங்கு" [11] தகடூர் (தருமபுரி), [12] பூந்துறை, [13] மூலனூர் முதலியவைகளும்; [14] பூந்துறை, [15] தென்கரை, [16] காங்கேயம், [17] ஆறை (வடபரிசாரம்,) [18] வடகரை, [19] குறுப்பு முதலிய கொங்கு இருபத்தினுன்கு நாடுகளும்; தூசூர், சேலம், விமலை முதலிய கிளை நாடுகளும் தன்னுட்கொண்டு விளங்குவது இந்நாடு.

ஸ்ரீ ஞானசம்பந்தப்பிள்ளையார், ஸ்ரீ வன்றொண்டர், ஸ்ரீ அப்பரடிகள் தேவாரங்களும்; திருப்புகழ்ப் பேராசிரியர் ஸ்ரீ அருணகிரிநாதர் திருப்புகழ்ப் பனுவலும்; கருவூர்த் தேவர் திருவிசைப்பாவும் இந்நாட்டின் தலங்கள் பெற்றுள்ளன. மற்றும் ஸ்ரீ சிவப்பிரகாசர் முதலிய சைவப் பேரடியார்

---

1 கோயமுத்தூருக்கு மூன்றுமைல்; 2 கூளிபாளையம் ரயில் நிலயத்திலிருந்து தெற்கு மூன்றுமைல், 3 அவிநாசியிலிருந்து வடக்கில் ஐந்துமைல், 4 சேவூரிலிருந்து நான்குமைல், 5 கிணத்துக்கடவிலிருந்து கிழக்கில் எட்டுமைல், 6 சேலம் சேர்வராயன் மலைமீது 7 இராசிபுரத்திலிருந்து எட்டுமைல், 8 இடந்தெரியவில்லை. 9 சேலத்திலிருந்து தெற்கில் ஏழுமைல், 10 குளித்தலைக்குச் சமீபத்தில், 11 சேலம் ஜில்லாவில், 12 ஈரோட்டுக்கும் பழைய கோட்டைக்கும் இடையில், 13 தாராபுரத்திற்குச் சமீபத்தில் 14 பழைய கோட்டைக்குச் சமீபத்தில் 15 பொங்கலூர்க்குப் பக்கத்தில் 16 திருப்பூருக்குச் சமீபத்தில் 17 அவிநாசிக்குச் சமீபத்தில் 18 இடம்தெரியவில்லை 19 விஜயமங்கலத்திற்குப் பக்கத்தில்.

கள் திருப்பாட்டு ஓதப்பெற்ற தலங்களும் இந்நாட்டில் விளங்குகின்றன.

அடியார்க்குநல்லார், சேங்குன்றூர்க்கிழார், கோங்கு வேள் மாக்கதை பாடிய நல்லாசிரியர், நன்னூல் இயற்றிய பவணந்திமுனிவரும்; வேதாந்ததேசிகர், உரிச்சொல் நிகண் டாசிரியர் காங்கேயர், காழிப்புலவர், கார்மேகக்கவிஞர், (கொங்குமண்டலசதகம் பாடியவர்), இடைஞானியர், மசக் காளிமன்றாடியார், பூங்கோதையார் முதலிய புலவர் பெரு மக்களும் தோன்றித் தம் புகழ் நிறுவியதும் இந்நாடேயாம். ஆனதனால் இது பெருமைப்பட விளங்கிச் சீரோங்கியிருந்தது.

இக்காலத்தில்தான், நாவலூர் நம்பிகளாகிய ஸ்ரீ சுந்தர மூர்த்திநாயனர், கொங்குவடபரிசாரத் திருநாட்டிலுள்ள புக் கொளியூர்-அவிநாசியென்னும் திருத்தலத்திற்கு எழுந்தருளி அவ்வூர்த் தடாகத்தில் மூன்றாண்டுகட்கு முன்னர், முதலை விழுங்கிய பார்ப்பனப் பாலகனைத் திருப்பதிகம்பாடி அழைப் பித்து அற்புதம் விளைவித்தது. அவ்வற்புதம் கொங்குநாட் டுக்கே ஒரு தனிச்சிறப்பையும்; திருவருட் பெருஞ்செல்வம் பெற்ற எல்லோராலும் மிகமிகப் பாராட்டிப் போற்றப் பெறும் மகிமையையும் விளைப்பதாகும். ஆரூராடிகள் கொங்கு நாட்டுக்கு எழுந்தருளியகாலம் கி. பி. ஒன்பதாம் நூற்றாண் டென்று ஆராய்ச்சியாளர் அறுதியிட்டு உரைக்கின்றனர்.

தலமும் பெயரும், இடமும் வழியும்.

இவ்வவிநாசித் திருத்தலம் திருவிளங்கும் செவ்வியும், அழியாப்புகழும் தங்கும் அருந்தலமாம். இத்திருத்தலத் திற்கு அவிநாசி என்று பெயர். அவிநாசி என்னும் சொல் லுக்கு முன்னர், திரு என்ற அடை கூட்டி, திருஅவிநாசி

என்றும் பெயர் வழங்கப்பட்டு வருகிறது. அவிநாசியென்ருல், விநாசம் இல்லாததென்பது பொருள். விநாசம் — கேடு. மற்றும் புக்கொளியூரென்பது திருத்தலமாகவும், இத் திருத்தலத்தில் எழுந்தருளியுள்ள சிவபெருமான் திருநாமம் அவிநாசியப்பர் என்பதும், அதனுல், சுந்தரமூர்த்தி சுவாமிகள், 'புக்கொளியூரவிநாசியே கரைக்கான் முதலையைத் தரச்சொல்லு காலனையே' என்பவற்ருலும் இனிது புலனுகும். அவிநாசிப்பெயர் தேவாரத் திருப்பதிகத்தின் பல பாசுரங்களிலும் பயிலப்பட்டுள்ளதால், இறைவனது பெயராகிய அவிநாசி, அவன் ஆலயங்கொண்டுவிளங்கும் திருத்தலத்திற்கும் ஆயிற்று.

இனி, இடத்தையும், வழிகளையும் கூறுவாம். திக்கெட்டினும் புகழ் சிறந்து விளங்கும் திருஅவிநாசி, நாண்மலர் விரிந்து நறுமணம் கமழும் கொங்குமண்டலத்தில் "வடபரிசாரநாட்டில்' ஓர் பகுதியில் உள்ளது. கொங்கேழ் சிவதலங்களில் (ஓர் எண்ணைக்கொண்டு) சிறப்புறவிளங்கும் திருவுடையது; நாவலூர் நம்பி ஆரூரரது தேவாரப் பாடல் பெற்ற திருப்பதிகளில் ஒன்ருய், தெய்வத் தமிழ் மணக்கும் அவர்தம் திருவாயால் முதலையுண்ட பாலனை மூவாண்டிற்குப்பின் திருப்பதிகம் பாடி அழைப்பித்த அற்புதம் வாய்ந்தது; முத்தி நகரங்கள் எழினுள் ஒன்ருகிய காசிமா நகருக்கு நிகரானது; புண்ணிய மிக்க திருப்புனலாகிய கங்கையைத் தன்னிடத்தே கொண்ட தனிப்பெருமை வாய்ந்தது. மற்றுமுள்ள ஏற்றங்களெல்லாம் இனிது எய்தப்பெற்று, மக்கள் விரும்பித் தரிசிக்கும் மகிமை மிக்க இத்திருப்பதியைத் தரிசிக்க வரும் யாத்ரீகர்களுக்கு நான்கு வழிகளிருக்கின்றன. அவை :—சென்னை முதல் ஈரோடு வரையிலும், நாகை முதல் வரும் வழியாக ஈரோடு வரையிலும் வரவுள்ள அன்பர்கள் ஈரோட்டில் ரயில்விட்டிறங்கி மோட்டார் பஸ்ஸில் எட்டு



புக்கொளியூர் புதுநந்தனவனமும், ஸ்ரீ திருநாவுக்கரசு
மடாலயமும்.

சார்ஜ் கொடுத்தேறினல், நாழிகையளவில் அவிநாசித் திருத் தேரடியில் வந்து இறங்கலாம்.

ஈரோட்டினின்று புகைவண்டியிலேயே வருவதானல் திருப்பூர், வஞ்சிபாளையம் (அவிநாசி ரோட்) என்ற ரயில் நிலயங்களில் இறங்கவேண்டும். அவ்விடங்களில் ஒத்தை மாட்டு வண்டியும், ஜட்கா வண்டியும் எப்பொழுதும் குறைந்த வாடகைக்குக் கிடைக்கும். இனம் ஒன்றிற்கு அணு இரண்டு. தனி வண்டி 6, 8-அணுக்களுக்கு வரும். திருப்பூர் ஸ்டேஷனில் இறங்கினல், வடமேற்கு எட்டு நாழிகையும், வஞ்சிபாளையத்தில் இறங்கினல், வடக்கு ஐந்து நாழிகையும் கடத்தல் வேண்டும். திருநெல்வேலி, மதுரை, திண்டுக்கல் முதலிய இடங்களிலிருந்து வரும் யாத்ரீகர்கள், பழநியூரடைந்து அங்கிருந்து மோட்டார் பஸ்ஸில் தாராபுரம் மார்க்கத்தில் பல்லடம், திருப்பூர் வழியில் அவிநாசியைச் சேரலாம்; மங்களூர் முதல் பாலக்காடு வரையிலுள்ளவர்கள் போத்தனூர் சேர்ந்து பின் கோயமுத்தூரடைந்து அங்கிருந்து மோட்டார் பஸ் மூலம் எட்டணு செலவிலாவது அல்லது போத்தனூரில் ரயிலேறி வஞ்சிபாளையத்தில் இறங்கி அவிநாசி எய்தலாம்; நீலகிரி, கூனூர், கோத்தகிரி முதலிய ஊர்களிலுள்ளவர்கள் மேட்டுப்பாளையம்சேர்ந்து அங்கிருந்து மோட்டார் பஸ் மூலம் எட்டணு சார்ஜிலும், மைசூர், கோள்ளேகாலம் முதலிய இட வாசிகள் சத்தியமங்கலம் சேர்ந்து அன்னூர்வழியில் மோர்ட்டார் பஸ்ஸில் அவிநாசியைச் சென்றடையலாம்.

இவ் அவிநாசி பாடல்பெற்ற பழம்பதிகளில் ஒன்றென்றும், கொங்குநாட்டின் இருபத்திநன்கு உட்பிரிவுகளில் ஒன்ருகிய வடபரிசார நாட்டின்கண் உள்ளதென்றும் முன்னரே கூறியுள்ளோம். இவ்வுட்பிரிவு பண்டைக்காலத்திலிருந்தே இந்நாட்டில் இருந்துவருகிறது. வடபரிசாரநாடு, நெடுகாளாகவேபல ஊர்களைத் தன்னுட்கொண்ட சிறந்ததோர்நாடு.

இது, அவிநாசித் தலபுராணத்தில், "திடநிலை குன்ரு வட பரிசாரத் திருநாடு" என்று சிறப்பித்துக் கூறப்பட்டிருக் கிறது. மண்டலசதகங்களில் ஒன்ருய கோங்குமண்டலசத கத்தின் ஊர்த்தொகையுள், 'ஆறை நாட்டைச்சார்ந்தது அவி நாசி' யென்று விளக்கி, விவரக்குறிப்பில், அவிநாசி முதலிய சில ஊர்களைச் சேர்த்து 'வடபரிசாரநாடு என்று வழங்கின தும்உண்டு' என்று விவரிக்கப்பட்டிருப்பதனுலும், அவிநாசி வடபரிசார நாட்டின்கண்ணேயுள்ள சிறந்ததொரு சிவஸ்தல மென்பது தெளிவாம். இதனை மேலும் உறுதிப்படுத்துதற்குக் கொங்குநாட்டுச் சிவாலயங்களில் வெட்டப்பட்டுள்ள பழை மையான கல் வெட்டுகளில், பன்னிரண்டு ஊர்களும், மூன்று சிறு நாடுகளும், வடபரிசாரநாட்டுக்குச் சுமார் எட்டு நூற் ருண்டுகளுக்கு முன்னரேயே சேர்க்கப்பட்டுள்ளதெனக் காணும் சாசனச் சொற்ருெடர்களே சிறந்த சான்ருகும். பின் னும் அக்கல்வெட்டுகளில், 'வடபரிசாரநாடு' நள்ளாற்றின் இருகரைகளிலுமுள்ள பிரதேசங்களைக் கொண்டிருந்ததென் றும்; கி. பி. 1161-ஆம் ஆண்டு கல்வெட்டில் வடபரிசாரநாட் டுள்ள வெள்ளலூர் சேர்ந்திருந்ததென்றும் காணப்படுவதால், அவிநாசி இடம்பெற்றுள்ள தலத்திற்கு "வடபரிசாரநாடு" என்ற பெயரிருந்ததென்பதும், போத்தனூர்க்குச் சமீபத்தி லுள்ள 'வெள்ளலூர்' வடபரிசாரநாட்டைச் சார்ந்ததென் பதும் மேலும் தெளிவாம்.

இத்தலத்திற்கு புக்கொளியூர் அவிநாசியென்ற பெயரே யன்றி, மற்றும், "தென்காசி", "வாரணவாசி", "தென்பிர யாகை" என்றபெயர்களும் உண்டு.

"பொய்க்கலி போமாறு மெய்க்கருள் சீரான
புக்கொளியூர் மேவு பெருமாளே"

என்பது திருப்புகழ்.

மூர்த்தியின் பெயரும் மகிமையும்.

மூர்த்தியின் பெயரே தலத்திற்கும் வழங்கப்பட்டு வருகிற தென்பதை முன்னரே கூறியுள்ளோம். இத்தலைப்பிலும் கூறவேண்டிய அவசியம் நேர்ந்ததால் மேலும் விவரிக்கத் துணிந்தோம். மூர்த்தியின் பெயரே தலத்திற்கும் வழங்கப் பட்டு வருவதற்குத் தேவாரம், திருவாசகம், தலபுராணம் முதலியவைகளில் ஆதாரங்கள் உள்ளன. அவை :—"புந்தி யுறைவாய் புக்கொளியூ ரவிநாசியே!" "பூணரவப்புக் கொளியூ ரவிநாசியே!","பூத்தாழ் சடையாய் புக்கொளியூ ரவி நாசியே!" "புற்றுடரவாபுக்கொளியூ ரவிநாசியே!", "புரங் கெடவெய்தாய் புக்கொளியூ ரவிநாசியே!" என்பன ஸ்ரீசுந்தர மூர்த்தி சுவாமிகள் குறிஞ்சிப்பண். "அரியபொருளே! அவி நாசியப்பா! பாண்டி வெள்ளமே" என்பது, மணிவாசகனார் ஆனந்தமாலை 10-ஆம் பாசுரம். திருவவிநாசிப்பரமர் செங் கமலப் பொற்பாதஞ் சென்னி சேர்ப்பாம்", "அரகராசல முரித்த புக்கொளியாய்!" என்பன அவிநாசித்தல புராணம்.

இங்ஙனம் தேவாரத் தமிழ்மறையாலும், திருவாசகம் பாடிய மணிவாசகனார் திருவாக்காலும் விதந்தோதப் பெற்ற வர் அவிநாசியப்பரென்றால், அவர்தம் அரும்பெரும் மகி மையை அளவிட்டியம்புதல் கூடுமோ? இத்திருத்தலத்தை அடைந்து, இறைவரை மெய்யன்புடன் வணங்கி, இஷ்ட சித்திகளையும் முத்திப் பேற்றையும் அடைந்த தேவர், முனி வர், அடியர், அரசர், மக்கள், மாக்கள், பறவை முதலியவர்க ளின் இனிய செய்திகளால், இறைவரது அளப்பரிய கருணைச் செயலும், மகிமைத் திறனும் எத்துணை சிறப்பாகப் பாராட் டற்குரியனவாக விருக்கின்றன என்பதறியலாம். புராண

வாயிலாக புக்கொளியூரனைப் போற்றிப் பேறுபெற்றவராக அறியப்படுகின்றவர்கள், உலகின் தனிப் பெரும் தலைவியாக விளங்கும் பெருங்கருணாலயச்செல்வி, பிரமன், இந்திரன், ஆதிசேடன் புதல்வி நாக கன்னிகை, அரித்துவசன் என்ற அரசன், மாளவ தேசத்து வேடுவர் தலைவன் வியாதன், சங்க கன்னன் என்ற வழிப்பறி கள்வன், தேவ கணிகையாகிய அரம்பை, அரக்கி தாடகை, ஓர் காகம், எஞ்ஞகுத்தன் என்னும் வணிகன், தருமசேனன் என்னும் வேந்தன், நாவலூர் நம்பி என்போராவர்.

புக்கொளியூர் அவிநாசியில் கோயில்கொண்டருளும் இறைவரின் அருள்வடிவம் சுயம்புவாய்த்தானாகவே தோன்றியதென்று ஆன்றோர் கூறுகின்றனர். இது இலிங்காகாரமாய் ஆவுடையாருடன்கூடி ஆலயத்தின் மூலத்தானத்தில் விளங்குகிறது. இத்திருவடிவம் சிற்பாச்சாரியின் சிற்றுளிபடாமலே தானே தோன்றியதென்பதற்குச் சைவப் பெரியாரும், இறைவன்பால் பேரன்புடையாரும், மாபெரும் புலவருமாக விளங்கிய 'இளையான்கவிராயர்' என்பார், தாம்பாடிய "அவிநாசிதலபுராணம்" தலவுற்பத்திச் சருக்கத்தில் 28-ஆம் கவியில் அடியில்வரும் காரணத்தைக் கூறியிருக்கின்றனர். அது—

"சீலத்தான் மிக்க பெருங் கருணைப்பாவை
சிலகாலந் தவமுயன்ற செல்வங்காணத்,
தாலத்தா ருயிர்க் குயிராங் காசிமூலத்
தனிவிசுவ சிவலிங்க சயம்பு மேரு,
மூலத்தானத் தொருவேர் தென்பா லோடி
முடிவினுனி தனிற்கிளைத்து முளைத்துத் தோன்றிக்,
கோலத்தா லழகிய வாரணவாசிப் பூங்
கொழுந்தெனவந் தெழுந்து நிலை கொண்டதன்றே.'

என்பது.

இச்செய்யுளின் திரண்டபொருள், தென்காசி, வாரணவாசி என்றபெயர்களைத் தன் சிறப்புப் பெயர்களாகக் கொண்ட அவிநாசித்தலத்தில் திருவாலயத்தின் மூலலிங்கப் பெருமான், காசி விசுவநாதமூர்த்தியின் ஒருவேரிற் கிளைத்த மூர்த்தியென்பது.

இப்பொருளால், காசி சேத்திரத்து மூல லிங்கமாக விளங்கும் விஸ்வநாத மூர்த்தியின் அமிசமே காசியில் வாசியான அவிநாசியில் மூலலிங்கமாக விளங்கும் முதல்வனென்றும், காசியில் கங்கையில் மூழ்கி விஸ்வேஸ்வரனைத் தரிசித்து வணங்கித் தொழுதெழுவோர் அடையும் பயனைத் தென்காசியான அவிநாசியின் கங்கை தீர்த்தத்துள் மூழ்கி மூலலிங்கத்தை முறைப்படித் தரிசித்து வணங்கியோர் அடைவரென்பதும் தெளிவாகின்றது.

இக்கருத்தைக் கொண்டே இந்நாட்டு மக்களுள் பெரும்பாலோர், "**காசியில்வாசி அவிநாசி**" என்று கூறி, தொலை தூரத்திலுள்ள காசித்தலத்திற்குச் செல்லக்கூடாதவர்கள் அவிநாசித் திருத்தலத்தைச் சேவித்து இன்புறுகின்றனர்.

"பேணு தொழிந்தேன் உன்னைய லாற்பிற தேவரைக்
காணு தொழிந்தேன் காட்டுதி யேலின்னங் காண்பனுன்
பூணு ணரவா புக்கொளி யூரவி நாசியே!
காணுத கண்கள் காட்ட வல்லகறைக் கண்டனே."

—சுந்தரர் - **அவிநாசித் திருப்பதிகம்.**

தீர்த்தங்களும் மேன்மைகளும்

திருஅவிநாசி யென்னும் திருத்தலத்தில் புனிதத் தன்மை வாய்ந்து மேன்மையுடன் விளங்கும் தீர்த்தங்களுள் முதன்மையானவை மூன்று. அவை, கூவம் (கிணறு) வடிவி லுள்ள 'காசிக்கங்கைத் தீர்த்தம்; நதி உருவத்திலுள்ள 'திருநள்ளாறு'; தடாகத் தோற்றத்திலுள்ள 'திருக்குளம்' என்பன. இம் மூன்றிலும் தலைமைத் தானம்பெற்று யாவ ரானும் விரும்பி மூழ்கப்படுவது காசிக்கங்கைத் தீர்த்தமே யாம். இது அவிநாசியப்பர் ஆலயத்துச் சுயம்புலிங்கத்திற்கு ஈசான திக்கில் ஏழுவில்லடியளவில் நாற் சதுரவடிவில் சிறு கிணருக விளங்குகிறது. முதலில், ஆலயத்திற்கு வெளியே யுள்ள திருக்குளத்தில் யாத்ரீகர்கள் மூழ்கிய பின்னரே கங்கை தீர்த்தத்தில் முழுகவேண்டுமென்பது நீண்டநாளா கவே மக்கள் கைக்கொண்டிருக்கும் ஓர் சம்பிரதாயம். கங்கை யில் முழுக விரும்புவோர், இரண்டு அல்லது மூன்று முழத் தாம்புக்கயிரைச் செப்புத்தோண்டி, பித்தளைச் சொம்புகளில் பிணித்து மொண்டுதான் முழுகவேண்டும். நீர் சான்றோர் மனம்போல் தெளிந்து, இளநீலவர்ணத்துடன், முழுகி னோரைத் தூய்மையாக்கும் தெய்வீகத்தோடு திகழ்கின்றது. இது வற்றாத ஜீவநதிபோல் என்றும் குறைவின்றி நிறைவு பெற்றேயிருக்கிறது. மேல் விழுந்து கழிந்த நீர் நிலத்தில் தங்கித் தேங்காமல் சரேலென்றோடுவதற்குத் தக்கவாறு எற்பாடு செய்யப்பெற்றிருக்கிறது. தீர்த்தம் நிரம்பிய கங் கைக் கிணற்றைச் சுற்றிலும் கருங்கற்களால் தளவரிசை செய்யப்பெற்றிருப்பதால், சகதிமுதலியனவின்றிச் சுத்த

மாகவேயிருக்கின்றது. இப்புண்ணிய தீர்த்தத்தை யாத்ரீகர்கள் காசிக்கங்கையாகவே பாவித்து நாடோறும் மூழ்கி வருகின்றனர். அதற்கு அடியில் வருவது சான்றாகக் கொள்ளற் குரியது. அது—' அவிநாசித் திருத்தலத்தைச் சூழ்ந்த சுமார் 10, 15 மைல்களிலுள்ள கிராமத்து வேளாளர் பெருமக்கள் 100-க் கணக்காக ஒவ்வோர் மாத அமாவாசை புண்ணிய நாட்களிலும்; பங்குனி மாதம் யுகாதிப்பண்டிகை, அதாவது தெலுங்கு வருடப்பிறப்பிற்குமுன் மூன்று நாள்களிலும் 1000-க் கணக்கானவர்கள், தம்பட்டம், துத்தாரி உடுக்கை முதலான வாத்தியங்களுடன் காவடி கொணர்ந்து கங்கையில் மூழ்கி, கங்கை நீரைக் கலசங்களில் முத்தரித்து எடுத்துக்கொண்டு காது செவிடுபடும்படியான பறைக்கொட்டு வாத்தியத்துடன் காவடிகளைத் தோள்களில் சுமந்து ஆவேசசன்னதத்தால் ஆனந்தக் களிப்பு மேலோங்க ஆடிப்பாடிக் கொண்டு சுற்றத்தார் பின் தொடர, தத்தம் ஊர்களுக்குச் சென்று தங்கள் கிராமத்துத் தெய்வங்களுக்கு விசேட அபிஷேகம் செய்து கொண்டாடி மகிழ்வர்' என்பது. இக்கங்கை தீர்த்தம் இவ்வாலயத்தில் மக்கள் நலத்தின் பொருட்டுத் தோற்றுவித்தவர், அவிநாயசியப்பரே யென்று வடமொழியிலுள்ள 'பிரமாண்டபுராணம்' அறுபத்தி ஐந்தாம் அத்தியாயத்தில் விவரம் கூறப்பட்டிருக்கிறது. அதாவது, 'கிருதமாலை' என்னும் ஒரு வனத்தில் '**வைதர்ப்பன்**' என்ற ஓர் அரசன், அவன் பட்டத்துத் தேவி '**சந்திரிகை**' யுடன்கூடி யிருக்கும்போது, அவர்கள் பிள்ளைப்பேறு இல்லாக் குறையால் சித்தம் நொந்து மெத்த வருந்தி யிருந்தனர். அப்போது அங்குத் தோன்றிய நாரதமுனிவர், அவர்களுக்கு, 'அவநாசியை அடைந்து நாடோறும் மூழ்கி, அவிநாசியப்பரை மனம் வாக்குக் காயங்கள் ஒன்றுபட, சிரத்தையுடன் வழிபட்டு வந்தால், 'பிள்ளைப்பேறு

வாய்க்கும்' என்று கூறி மறைந்தனர். அவர்கள் முனிவர் மொழிந்தவாறே அவிநாசியைச் சேர்ந்து நீண்டகாலம் இறைவனை வழிபட்டும், அவர் உறையும் ஆலயத்திற்குக் கோபுரம் அமைத்தும், திருப்பணிப் பல செய்தும் வந்தனர். இந்நிலையில் ஒருநாள் அவிநாசியப்பர், அவ்வரசனது வழிபாட்டுக்கு உவந்து, முனிவர் வடிவில் தரிசனம் தந்து புத்திரப் பேறளித்தும், ஓர் தீர்த்தத்தை யுண்டாக்கியும் இதுவே 'காசிக்கங்கை' யென்றும், இத்தலமே 'காசிக்குச் சமான'மான தென்றும் கூறி அரிதில் மறைந்தனர்' என்பது.

இப் புராணக்கதையை மெய்ப்பிப்பதற்கு மற்றொரு செய்தியும் அதே புராணத்தில் வேறோர் பகுதியுள் காணப்படுகிறது. அது தவநலஞ்சிறந்த முனிவர் ஒருவர், அவிநாசியை அடைந்து கங்கையில்மூழ்கி அருட்குறியாக விளங்கும் இறைவனைப்பணிந்து வெளிவரும்போது எதிரேவந்த பதஞ்சலிமுனிவரைக் (பதஞ்சலி = கூப்பியகரத்தர்) கண்டு வணங்கி நலம் விசாரித்தபின், அம்முனிவர் பதஞ்சலியாரிடம், 'நாம் காசிக்குச்சென்று விசுவேச்சுரனைத் தரிசித்துவந்தேம்' என்றனர். அதுகேட்ட பதஞ்சலியார், அம்முனிவரிடம் 'இத்தலமே' காசி; 'இத்தீர்த்தமே கங்கை' என்று பலபடவுரைத்தும் அம்முனிவர் நம்பாமல் ஐயமே மேற்கொண்டனர். அவரது ஐயத்தை அகற்றி உண்மையை நிலைநாட்ட எண்ணங்கொண்ட பதஞ்சலியார், அம்முனிவரோடு, தாமும் அவிநாசியப்பர் ஆலயத்துள்ள கங்கையுள் அவர் கண்காண ஓர் தண்டத்தையெறிந்து இருவரும்மூழ்கி, பின் இருவருமே காசியை அடைந்து கங்கையில்மூழ்கினர். அவர்களுக்குஎதிரே அவிநாசிக் கங்கையுள் எறிந்த தண்டம் மிதப்பதைப் பதஞ்சலியார், தம்முடன் வந்துள்ள முனிவர்க்குக் காட்டி இப்பொழுதேனும் நாம் கூறியதை நம்புகின்றீரா? என்று வினவ, அவர் 'இப்பொழுது பூர்ணமாக நம்புகின்றோம்' என்றனரென்பது.

இவ்விருவகைச் செய்திகளால் அவிநாசிக் கங்கைதீர்த்தம், காசிக் கங்கைத் தீர்த்தமேயாமென்று உறுதிபெறுகின்றது.

இரண்டாவது நதி உருவத்திலுள்ள திருநள்ளாறு

இப்பெயருடைய நதி அருள்வடிவாய் விளங்கும் அவிநாசியப்பர் ஆலயத்து வடமதிற் சுவற்றையொட்டி ஓர் சிற்ருருகக் கிழக்குநோக்கி ஓடுகின்றது. மழைமிகுதியால் ஆறுகளில் பிரவாகம் பெருக்கெடுத்து ஓடுகின்ற ஆனி, ஆடிமாதங்களில் நள்ளாற்றில் நீர்பெருகி இருகரைகளிலும் அலைமோதுவதுண்டு. இச்சிற்ருறு மேற்குத்தொடர்ச்சி மலையினின்றும் உற்பத்தியாகி, பல ஊர்களைக்கடந்து, பல்லடம் தாலுகாவிலுள்ள திருப்பூருக்கு மூன்று மைலிலிருப்பதும், கொங்கு வைப்புத் தலங்களில் ஒன்றுயதும், குரக்குத்தளி, (பெரிய பாளையம்) என்ற பெயரையுடையதுமான திருத்தலத்தின் வழியாக, தன்னைப்போன்றே பிறவா நெறித்தலமாகிய பேரூர்க்கு மேற்கேயுள்ள வெள்ளிமலையினின்றும் உதித்துத் திருப்பேரூர் இறைஞ்சிவரும் காஞ்சிமாநதியோடு கூடி உறவுகொண்டு, பின்னர், பொன்னியாகிய காவிரிநதியுடன் கலந்து சிவதலம் பல பணிந்து செல்லும் சிறப்பினையுடையது.

வேறு சிலர் "இத்திரு நள்ளாறு, குருவிருடிமலையின் முடியிலுள்ள 'போன்னூற்று' என்னும் இடத்தில் தோன்றி துடியலூருக்குப் பக்கத்தேயுள்ள வடமதுரைச் சிவாலயத்தின் வழியாக அன்னூர், கானூர் முதலிய ஊர்களின் மார்க்கமாகப் பெருகித் தனது நீரைப் பல ஏரி, குளங்களுக்கும் பகிர்ந்தளித்து, அவிநாசியடைந்து பெருமாநல்லூர் முதலான ஊர்களை யொட்டிப் பின் காஞ்சிமாநதியோடு கலக்கின்றது" என்று கூறுகின்றனர்.

இனி இத்திரு நதியின் பேருயர்வு, புனிதத்தன்மை, வெள்ளத்தின் சிறப்பு, அதன் தெய்வீகம் முதலியவைகளைப் பற்றித் தேவாரம், 'அவநாசித் தலபுராணம்' 'பெருங்கருணை அம்மையார் பிள்ளைத்தமிழ்,' ஆகியவற்றில் விதந்தோதப் பெற்றுள்ளன. அவைகளுள் சிலவே அடியில் குறிக்கப்படுகின்றன. அவை :—

"நள்ளாறு தெள்ளா றரத்துறைவா யெங்க ணம்பனே"
"காவிய மைந்திணை சேரவி னம்பெறு கவியேற
நாவியல் விஞ்ஞையர் பாடனிகர்த்தது நள்ளாறு"
"வாரிய கண்கயல் கொண்டயேர் புக்கொளி மணிவீதி
நாரியர் பந்தி நடப்பன வொத்தது நள்ளாறு"

என்பனவற்றாலும் ;

"திக்குநிலாவிச் சொற்றிடு புகழார் நளினத் திருநதி" (10)
"பொருளார் நளினத்துறை" (7)
"போகம் பெருக்கும் நளினத்துறை" (6)
"புக்கொளியின், மூர்த்திநின்ற னருட்டீர்த்தம்"
"வீசுபொற் கொங்கினவி நாசியிற் றங்குமயில்" (2)

(தங்குமயில் பெருங்கருணாலயச் செல்வி)

என இறைவியை விளித்து,

"விண்ணின்ற நல்லாறு முறவாடு நள்ளாற்று
வெள்ள *நீராடி யருளே*" (1)
"விந்தைபெறு விண்ணாறு நட்புறு நள்ளாற்று
வெள்ள *நீராடி யருளே*" (4)

—பெருங்கருணாம்பிகை பிள்ளைத்தமிழ்

என்று இறைஞ்சி ஆசிரியர் வேண்டுவதனாலும் ;

"ஒப்பற்ற ஒரு தனிமுதல்வனாகிய பரமசிவத்தின்பால் வைக்கும் நட்பு, ஏனைய எல்லா நட்புக்களையும்விட விசேட

மானது என்பதைக் காட்ட 'நள்ளாறு' அவிநாசித் திருத் தலத்தை அடுத்ததனுல், உலகிலே எல்லா நதிகளும் உயர்ந்த காலத்திலே நட்புக்கொள்ள விரும்பும் தன்மை வாய்ந்த கங்கையும், தன்னிடம் வந்து நட்புக்கொள்ள இருக் கின்றது" என்று "[1] பெருங் கருணையம்மை பிள்ளைத்தமிழ், நீராடற் பருவம்" மூன்றும் கவியின் பொருளாலும், "சிவனடி மறவாச் சிந்தையர் தமது சிவபூசையிலே, அருக் கியம் அமைத்து, (அருக்கியம் = மந்திரநீ ரிறைப்பது) சந்த னம், அகில், கற்பூரம், முத்து முதலிய மணிகள், அருகு, பச்சிலைகள், பூக்கள் இவற்றையிடுவர். அதுபோலவே நள் ளாற்றின் புதுநீரும் அத்துணைப் பொருள்களைத் தாங்கி வருதலாலே புனிதத் தன்மை வாய்ந்துள்ளது" என்ற நான்காம் செய்யுளின் கருத்தாலும்,

"சூரியனுல் குற்றம் நீங்கிய கடல், வான் போய் மலையி னின்றும் மணி, சந்தனம், பச்சிலை, அரிசி, பொன் முதலிய வற்றைக் கொண்டு உலகிற்கு போகம் கொடுக்க வெள்ள மாகப் பெருக்கெடுத்துச் செல்கின்றது. இந்நீத்தம் உலகி லெய்துமுன் உம்மைப் பணிந்து நின்றது. இந்நன்னீர் எல்லா உயிர்க்கும் கைம்மாறு கருதாது உதவுதலால், இதன் நன்மை கடலினும் பெரிதாம்" என்ற ஏழாம் பாடலின் விளக்கத் தாலும், நள்ளாற்றின் திருப்பெருந்தன்மை ஒருவாறு அறி யப்பெற்றது.

இந்நதிக்கு வடமொழியில் 'சாதரி' என்று பெயர். கங் கைக்குச் சமானமான இப்புண்ணிய நதியில் பிரதி மாதமும்

---

[1] பெருங்கருணம்பிகை பிள்ளைத்தமிழ், கோயமுத்தூர் வழக் கறிஞரும், சைவப் பெரியாரும், தம் மனையைச் சேக்கிழார் நன் மனையாக்கிய திருவினரும், மாபெரும் புலவருமாகிய உயர்திரு வாளர் C. K. சுப்பிரமணிய முதலியார், B. A., அவர்களால் இயற்றப்பெற்றது.

யாத்ரீகர்கள் மூழ்கிச் சிவார்ச்சனை செய்து, மகாதானங்களைச் செய்தால், பாவங்களினின்றும் விடுபட்டுப் புண்ணியம் அடைவரென்றும், இறுதியில் இம்மை இன்பத்தையும் எய்துவரென்றும் தலபுராணம் கூறுகிறது. ஆயின், இந்நதி இத் தலத்தில் இப்போது மக்களால் கவனித்துப் போற்றிப் பாராட்டப் பெறாமல், பல அசுத்தங்கள் செய்யப்பெற்று வருவது விசனிக்கத்தக்கது.

மூன்றாவது தடாக வடிவுடைய திருக்குளம்

இத்திருக்குளம் அவிநாசியப்பர் ஆலயத்தின் வெளி முற்றத்துக் கொடிகம்பத்துக்குச் சுமார் பத்து முழத்துக்கு நேரெதிரில் இருக்கிறது. சதுரவடிவமான இது, கீழ்மேல் நீளம் 171 அடிகளும், தென்வடல் அகலம் 169 அடிகளும் இருக்கின்றன. நான்கு புறங்களிலும் மூழ்குவோர் இறங்கிச் செல்வதற்கு மூன்று பக்கங்களிலும் வாயிற்படிகள் திறக்கப்பட்டிருக்கின்றன; கருங்கல்லால் படிக்கட்டுகள் ஒழுங்காய் நாற்புறமும் சமைக்கப்பட்டுள்ளன. திருக்குளத்தின் மேற்கு வாயிலில் இறங்குபடி மேல்விதானத்தின்மீது நந்தி வடிவமொன்று பருமனும் அழகுமாய்ச் செங்கல்லால் சித்தரித்துச் சுண்ணச்சாந்து செய்யப்பட்டிருக்கிறது. நாற்புறமும் கைப்பிடிச் சுவர்கள் கட்டப்பட்டிருக்கின்றன. திருக்குளத்தின் நடுவில் மைய மண்டபம் ஒன்று திருக்குளத்தை அலங்கரித்துக் கொண்டிருக்கிறது. திருக்குளத்தைச் சுற்றிலும் நான்கு பக்கங்களிலும் ஓங்கி வளர்ந்துள்ள தென்னை மரங்கள், 'தீர்த்தத்தை அசுத்தம் செய்யாதீர்கள்' என்று எச்சரித்துக் காவல் காப்பாரைப்போ லிருக்கின்றன. திருக்குளத்தின் வடகரையில் யானைமுகப் பிள்ளையார்க்கோர் சிற்றாலயமுள்ளது. இத்தகைய திருத்தடாகத்தின் பெயர் "செல்லங்க சமுத்திரம்" என்றும்; இதனை விஜயநகர மன்னர்களில் "அச்சுத

ராயன்' எனப் பெயரிய அரசன் கி. பி. 1530—1542-ஆம் ஆண்டுக்குச் சகம் 1466-ல் வெட்டுவித்தானென்றும் கற்காசனத்தில் கூறப்பெற்றிருக்கின்றன.

ஸ்ரீ சுந்தரமூர்த்திசுவாமிகள் திருப்பதிகம் கேட்டு முதலை தானுண்டபாலனைக் கரையில் உமிழ்ந்ததற்கு தாமரைக்குளம் நல்லிடமாயிருந்து பெயர் சிறந்தது போலவே, இச் செல்லங்க சமுத்திரம் என்ற திருக்குளமும், மீன்விழுங்கிய சிவலிங்கத்தை அடியார் உறுதிபெற்ற மனத்துணிபிற்கு உவந்து கரையில் அம்மீனைக்கொண்டே உமிழ்விக்கச் செய்த சிறப்பையுடையது. சிவலிங்கத்தை மீன் உமிழ்ந்த வரலாறு அடியில் வருமாறு:—

“ குருநாதபண்டாரம் என்ற ஓர் அருந்தவப்பெரியார் நாடோறும் ஆன்மார்த்தமாக வைத்துப் பூசித்துக்கொண்டிருந்த சிவலிங்கத்தை அவிநாசியில் அப்போது அதிகாரியாயிருந்த ஒருவர், அகந்தையால் பெரியாரென்று மதியாமல் அவர் பூசித்துக்கொண்டிருந்த சிவலிங்கத்தை வலிதில் கைப்பற்றி அதை அங்குள்ள திருக்குளத்தில் எறிந்துவிட்டு, தாமரைக்குளம் வெள்ளப்பெருக்கால் உடைப்பெடுத்து அபாயத்தை விளைவிக்கவிருப்பதைத் தடுப்பதற்குப் பல ஆட்களுடன் அவரையும் கூலியாளாக அமர்த்தி உடைப்பை அடைக்க ஏவினர். அப்பெரியார் அதிகாரியின் ஆணையைத் தடுப்பதற் காற்றாது ஏவிய பணியை முடித்துவிட்டு, தமது சிவலிங்கம் எறியப்பட்ட திருக்குளத்தைநாடி விரைந்து சென்று கரையிலிருந்தபடி அவநாசியப்பரை உளத்தால் உள்ளுறச்சிந்தித்து, 'ஐயனே! யான் ஆன்மார்த்தமாகப் பூசித்துக்கொண்டிருந்த சிவலிங்கம் தானுகக்கரையில் ஒதுங்கி என்கைசேர்ந்தாலன்றி உயிர்வாழேன்; இஃது உறுதி' என்று கூறி தமது உயிரைவிடத்துணிந்தனர். அன்பர்தம் உறுதியையும், சிவபூசையைத் தம்முயிரினும் மேலாக மதித்திருப்

பதையும் உணர்ந்த தீனசரண்யனாகிய அவிநாசியப்பர், ஓர் மீன்வாயிலாக அச் சிவலிங்கத்தைக் கரையில் கொணர்ந்து அடியார் கண்காண உமிழுமாறு கருணைபாலித்தனர். மீன் அங்ஙனம் கரையில் உமிழ்ந்த தமது சிவலிங்கத்தை அடியார் கண்டு அதிசயித்து, ஆண்டவனின் அருட்டகைமைக்கு ஆனந்தமடைந்து அவர்தம் பொன்னார் திருவடியைப் பெரிதும் வாழ்த்தித் தம் இருக்கை சேர்ந்தனர்" என்பது.

இவ்வரலாறு அச்சாகாத அவிநாசிபுராணம் ஓலைச்சுவடியில் "மீன்வாயில் **சிவலிங்கம் அழைப்பித்த சருக்கம்**" என்ற ஓர் பகுதியில் காணப்படுகிறது.

இச்சம்பவம் உண்மையென்பதற்குச் சான்றாகத் திருநள்ளாற்றுக் கற்பாலத்தின் தென்கரைக்கும், உபநயன மடத்து வடபக்கத்துச்சுவர் அருகிற்கும் இடையிலுள்ள சிறுகோயில் ஒன்றில் 'மீன் சிவலிங்கத்தை உமிழும் சித்திர வடிவிலுள்ள கற்சிலையும்; குருநாத பண்டாரம் என்ற பெரியார் அச் சிவலிங்கத்தைத் தமது கையகத்து வைத்துக்கொண்டிருக்கும் திருவுருவிலுள்ள கற்சிலையும்' சித்தரித்து வைக்கப் பெற்றிருக்கின்றன.

இங்ஙனம் மூர்த்தி, தலம், தீர்த்தம் எனும் மும்மையானும், மிகத் தொன்மையானும் உயர்ந்த இத்திருத்தலத்து ஆலயத்தையும்; ஆங்கு அருட்டிருமேனி கொண்டுறையும் இறைவரையும்; வழிபட்டு உய்யவேண்டுவது மக்களாய்ப் பிறந்த ஒவ்வொருவருடையவும் இன்றியமையாதகடமையாம். அக்கடமையைக் கைக்கொள்ளுமுன், ஆலயம் வலம் வருதலையும்; வணங்கும் முறையையும் அன்பர்கள் தெரிந்துகொள்ளுவது நலம். அவற்றைச் சுருக்கமாகக் கூறி மேற்செல்வாம்.

ஆலயஞ் சூழ்தலும், வணங்கும் முறையும்.

புனல்சூழ்ந்த பூவுலகில், பெறுதற்கரிய மானிடப்பிறவியைப்பெற்ற மக்களுக்குப் பெறுதற்கரிய பயன்களுள் முதன்மையானது எவ்வுயிர்களிலும் இலங்கி எங்கும் வியாபித்து, ஒப்புயர்வற்று, கருணைக்கடலாய்த் தம்மை மெய்யன்புடன் வணங்கினோர்களுக்கு அவரவர்கள் விரும்பிய பயனை விரைந்தளிக்கும் இறைவனது பொன்னார் திருவடிகளை அன்புறவணங்கி இன்புறுதலாம். இதனை, உலகில் பரவியுள்ள பல சமயங்களும் ஒப்புக்கொண்டுள்ளன. இம்மையில் உயிர்கள் அநுபவிக்கும் இன்பமுற்றும் நிலையுடையனவல்ல. ஒருபோது இன்பமாகத்தோன்றும் அதுவே, மறுசமயத்தில் துன்பமாகத்தோன்றும். இதனாலன்றோ! ஆன்றோர்கள் அதனை இன்பமாகக் கருதாது ஒதுக்கி மறுமை இன்பமாகிய வீடுபேற்றையே அடையவிரும்பினர். ஆயின், அதனை ஏனையோர் அத்துணை எளிதாக அடைதல் சாத்தியமன்று. பெருமுயற்சியும், நல்வழியில் பயிற்சியும் சிறந்த சிவபுண்ணியத்துணிபும் பயனும் மிக்குடையார்க்கே அது கைகூடும். அத்தகையோர்கள் இறைவனை வடிவுடையவனாகக்கருதி வழிபட்டுவருதல் முதன்மையானது. இது முதற்படி யெனப்படும். இதுகொண் டன்றோ! நமது முந்தைப்பெரியோர் மானிடர் சார்ந்து உய்யும்பொருட்டுத் திருக்கோயில்களைக் கட்டுவித்து அவ்வாலயங்களிற் சென்று இன்பவடிவாய் எழுந்தருளியிருக்கும் இறைவனை வழிபடும் முறைமையினைத் தெளிவாக வெளியிட்டுச் சென்றனர். அன்பும், அறிவும், சைவ ஒழுக்கமும் நிரம்பிய மக்களுக்கே அத்திருக்கோயில்கள், வீட்டின்பத்தை அளிக்கவல்லன.

பிறப்பு இறப்பு என்னும் இருவிதவாதனைகளில் கட்டுண்டு உழல்கின்ற உயிர்களுக்குச் சிறிது அமைதியை அளித்து இன்புறச்செய்வன அத்திருக்கோயில்களேயாம். மனம் அமைதியற்று நிலைதிரிந்து எப்பொழுதுமே உழன்று கொண்டிருக்கும் இயல்பினையுடையது; தீயவழிகளிலே பெரிதும் முனைந்து புகுந்து விளையாட்டயர்வது. இத்தகைய செயல்கள் கேடுதரும் தன்மையுடையதாகலின், அதனை அமைதியுறச்செய்வது இன்றியமையாததாகின்றது. மனம் அமைதியுற்றுத் தூய்மை அடைவதற்குத் திருக்கோயில்கள் சென்று வலம்வந்து திருவருள் வடிவங்களாக விளங்கும் ஆண்டவனைத் தொழுதெழுதல் சிறந்தது. "ஆலயம்தொழுவது சாலவும் நன்று" என்ற அவ்வையார் திருவாக்கும் இதற்குச் சிறந்த உதாரணமாம். அங்ஙனம் வழிபட்டால் ஆங்கு அமைந்து விளங்கும் ஈச்சுரவடிவில் மனம்சென்றழுங்கித் தூய்மைபெற்று விரும்புகின்ற நலம் அத்துணையும் எய்தப்பெற்று நன்மை பல வாய்க்கின்றன. இத்துணைச் சிறப்புடைய இவ்வழிபாட்டின் ஏற்றத்தைச் சுருங்கிய மொழியில் விவரித்தல் நம்மால் இயன்றதோ?

மனம் ஓரிடத்தில் நிலைப்படாவிடின், பக்திநிலைபெறாது. ஆகலின், மனம் ஓரிடத்தில் நிலைபெறுதற்கென்றே ஆன்றோர்கள் சில நியமங்களைச் செய்துள்ளனர். அன்பு நிறைந்து இறைவர்பால் காதல்பெருகியுள்ள மக்கள் ஆலயத்துட்புகுவாராயின், அவர்கள் மனம், உலகவிஷயங்களினின்றும் சிறிதுநீங்கி அமைதியடைகின்றது. அப்பொழுது மூர்த்திவடிவில் எழுந்தருளியுள்ள முதல்வனுக்குக் கண்களிக்கும்படி செய்துள்ள திவ்யாலங்காரம் திருவிளக்கேற்றிச் சுற்றுதல், மணியோசை, சங்கோலி ஆர்ப்பெழுமுரசம், வாத்திய முழக்கம், தேவாரப்பண்ணொலி, பேரடியார்கள் வாழ்த்தொலி, அரகர சம்போ! மகாதேவா! என்ற அன்புவயப்பட்ட

இனியவோசை ஆகியவற்றுடன் பிரணவத்தோனியும் கலந்து நிகரிலா ஆனந்தத்தை யூட்டுகின்றன. இந்நிலையில் அர்ச்சகர், கர்ப்பூரங்கொளுத்தி இறைவன் சோதிநிறத்தன் யாவருங் கண்டு இன்புறுங்கள் என்று காட்ட, யாவரும் மனங்கரைந்து இன்ப மயமான அவ்விறைவன் திருவடியில் ஈடுபட்டுவிடுகின்றனர். அப்போது அவர்கள் மனமும் அடங்கி உலக வியாபாரங்களினின்றும் சிறிது நீங்கி அமைதி யடைகின்றது. இதுகொண்டே நம்முன்னோர்கள், திருவாலயங்களில் மேற்கூறிய மணியோசை, வாத்திய முழக்கம் முதலியன திருக்கோயில்களுக்கு இன்றியமையாதன என்று ஏற்படுத்தினர். மணியோசையின் தத்துவம், மக்களை, 'இறைவனை வழிபட்டு உய்ய வாருங்கள்! உய்ய வாருங்கள்!!' என்று அழைப்பது போன்றது.

இக்காரணங்களால், தெய்வபக்தியுள்ளவர்கள் திருக்கோயில்களுக்குச் சென்று ஆங்கு அருட்குறியாக விளங்கும் இறைவனை வழிபட்டுய்தலே நன்மார்க்கமும் சன்மார்க்கமும் ஆகும். இந்நலத்தினை நமக்கு அறிவுறுத்தியவர்களே நலம் வாய்ந்தவர்களும், நாம் வணங்குதற்குத் தகுதியுடையோர்களும் ஆவர்.

இனி, ஆலயத்துட் சென்று முறையாகத் தெய்வங்களை வழிபடும் விதத்தை அன்பர்கள் உணரும்படி தெளிவாக இதன்கீழ் விளக்குவாம் :—

(1) திருத்தல யாத்திரைகளில் திருக்கோயில்களுக்குச் செல்லும் அன்பர்கள், மல மூத்திராதிகளைக் கழித்து கை கால்களை அலம்பி, திருக்குளத்திலேனும், நதியிலேனும், வேறு சுத்தமான நீரிலேனும் மூழ்கி, தோய்த்து உலர்ந்த சுத்தமான ஆடைகளை யுடுத்தி, திருநீறு பூசி, உருத்திராக்கம் அணிந்து, கற்பூரம், தேங்காய், பழம், வெற்றிலை பாக்கு,

மலர் முதலியவற்றில் இயன்றனவற்றை எடுத்துக்கொண்டு சிவாலயத்தை அடைதல்வேண்டும்.

(2) ஆலயத்துள் நுழையுமுன் ஸ்தூல லிங்கமாகிய கோபுரத்தை வணங்கி உள்ளே புகுதல் வேண்டும்.

(3) வெளிப்பிரகாரத்தின்முன், பலிபீடத்தில் வளர்ந்தோங்கிநிற்கும் கொடிக்கம்பத்தின் எதிரில் வணங்கவேண்டும்.

(4) வணக்கம் மூன்றங்கம், ஐந்தங்கம், எட்டங்கம் என மூவகைப்படும். மூன்றங்கமாவது - சிரசின்மேல் இருகைகளையும் குவித்தல்; ஐந்தங்கமாவது - தலை இருகைகள் இரண்டு முழங்கால்கள், ஆகிய ஐந்தும் நிலத்திற்படியும்படி வணங்குதல்; எட்டங்கமாவது - சிரம், மோவாய், இருகை, இருகாது, தோளிரண்டு ஆகிய எட்டும் பூமியில் நன்ருகப் படும்படி வணங்குதல்; முடிந்தளவு ஆண்மக்கள் அட்டாங்கமும், பெண்மக்கள் பஞ்சங்கமுமாக வணங்குதல் வேண்டும். கிழக்கு மேற்குச் சந்நிதிகளில் வடக்குமுகமாகவும்; வடக்குத் தெற்குச் சந்நிதிகளில் கிழக்கு முகமாகவும் இருந்து குறைந்தது மூன்று முறையாவது வணங்குதல் வேண்டும்.

(5) கொடிக்கம்பத்தின் எதிரில் வணங்கியபின், காளை வடிவிலுள்ள திருநந்திதேவரை வணங்கி விடைபெற்று, கீழ்க் குறிக்கும் சந்நிதிகளில் கிரமமாக வலம்வந்து வணக்கம், துதி முதலியன செய்தல் வேண்டும்.

(6) பிரதக்ஷிணம் என்பது ஆலயத்தை வலமாகச்சுற்றி வருதல். மோட்சத்தைமட்டும் விரும்புவோர் ஆலயத்தை இடமாகச் சுற்றிவருவர்; யானைமுகப்பிள்ளையாரை ஒரு முறையும்; சிவபெருமானை ஐந்து, ஏழு, ஒன்பது, பதினைந்து அல்லது இருபத்தொருமுறையும்; பார்வதிதேவியரை நான்குமுறையும், முருகபிரான் முதலிய மற்ற மூர்த்திகளைக் குறைந்தது மூன்றுமுறையும் வலம்வருதல் வேண்டும்.

சுற்றுமதில் இல்லாத கோயில்களில் தன்னைத்தானேவலமாகச் சுற்றுதல் வேண்டும். இதனை 'ஆத்ம பிரதட்சிணம்' என்பர்.

(7) முதல் விநாயகரையும், பின்னர் சிவபெருமானையும், அதன்பின்னர் நடராஜர், தக்ஷிணுமூர்த்தி, சோமாஸ்கந்தர், சந்திரசேகரர், சுப்பிரமணியர், சமயாசாரியர் நால்வர்; தனியடியார் அறுபத்துமூவர் முதலியோரையும், அதன் பிறகு பார்ப்பதியாரையும், ஒழுங்காக வலம்வந்து வணக்கம், தரிசனம், தோத்திரம் செய்தல்வேண்டும். கற்பூரம் கொளுத்துதல், திருவிளக்கேற்றி வைத்தல், அர்ச்சனை செய்வித்தல் முதலியனவும் செய்தற்குரியன.

(8) ஒவ்வொரு திருவாலயத்தின் முன்னரும் வலம் வணக்கம், தரிசனம் தோத்திராதிகளைச் செய்யும்போது மனதை அந்த மூர்த்தியின்மீதே பதியவைத்து, அம்மூர்த்தியின் திருவருள் வடிவத்தையும், எல்லாம்வல்ல அவ்விறைவனது மிகப்பெருந்தகவினையும், சென்றடையாத திருவுடைமையையும்; வேண்டுவார் வேண்டுவதை விரைந்தளித்து அருளும் திருவருட்பெருக்கையும் சிந்தித்து, நம்மைப் பீடித்து இடையருது வருத்தும் துன்பத்தினையும், சிறுமையையும் எண்ணி, அச்சிறுமையும் துன்பமும்நீங்க எந்தையே! திருவருள்பாலிக்க என வேண்டுதல்வேண்டும். அங்நிலையில் தேவாரம், திருவாசகம், திருப்புகழ் முதலிய தமிழ்மறைகளை உள்ளன்புடனும், உவகைபொங்கவும் பிழைபாடின்றி இன்னிசையுடன் ஓதின், இறைவன் இன்னருள், உள்ளத்தின் உள்ளே தோன்றுத்துணையாக நின்று எங்குமில்லாததொரு பேரின்பத்தை விளைவிக்கும்.

(9) இறுதியாகச் சண்டேச்சுரதேவரை யடைந்து மும்முறை தாளமிட்டு, சிவதரிசனபலனைத் தரும்படி வேண்டுதல்.

(10) பின்னர் ஆலயத்தினின்றும் வெளியேறுதற்கு முன்னர், கொடிக்கம்பத்தருகில் மீண்டும் வணங்கி வடக்கு முகமாக வீற்றிருந்து, திருவைந்தெழுத்தை, அதாவது "நமசிவாய" என்ற பஞ்சாட்சரத்தை நூற்றெட்டுமுறை செபித்தல் வேண்டும்.

இதன் பிறகு எழுந்து வணங்கி வைரவ மூர்த்தியை வணங்கிக் கைகளைத் தட்டி, சிவசொத்து ஒன்றையும் எடுத்துச் செல்லவில்லையென்று உறுதிசொல்லி வெளியே வருதல் வேண்டும். இவைகளே தெய்வங்களை ஆலயங்களில் வழிபடும் முறைகளாம்.

இனி, திருக்கோயில்களில் செய்யத்தகாத குற்றங்களையும் தெளிவுபெறக் கூறி இத்தலைப்பை முடிப்பாம்.

ஆலயங்களிலும், ஆலயங்களுக்கு அண்மையிலுள்ள திருக்குளம், புண்ணியநதி, திருநந்தனவனம், பசுத்தொழு முதலியவிடங்களிலும் மலசலங்கழித்தலும்; மூக்குச்சிந்தி எறிதலும்; காரி எச்சில் உமிழ்தலும்; வெற்றிலைப்பாக்குப் போடுதலும்; உணவு உண்ணுதலும்; பானம் பருகுதலும்; சூதாடுதலும்; இரைஞ்சிப் பேசுதலும்; வீண்வார்த்தையாடுதலும்; சிரித்தலும்; எக்களித்தலும்; ஆசாரமில்லாதிருத்தலும்; பெண்களைக் காமத்தோடு நோக்குதலும்; தொடுதலும்; தழுவுதலும்; நந்தி தேவருக்கும், சிவபெருமானுக்கும் குறுக்கே செல்லுதலும்; விரைவாக வலம் வருதலும்; அவசரமாக வணங்குதலும்; வணங்கவேண்டிய இடங்களை அறியாமல் திருவருள் மூர்த்தங்களுக்குப் பின்காட்டி வணங்குதலும் கூடா.

இக் குற்றங்களை அறிந்தும் வேண்டுமென்றே செய்பவர்கள், இச்சிவாலய வழிபாட்டால் எய்தும் பயனை இழந்து போதலேயன்றிப் பெரும்பாவம்செய்த சிவ அபசாரத்தையும் பெற்றுத் துன்பத்திற்கு ஆளாகுவர்.

இவ்வளவு உண்மைகளையும், தன்னுள் அடக்கிக்கொண்டிருப்பதால்தான், கோயிலுக்கு ஆலயம் என்று பெயர் வழங்குவதாயிற்று. (ஆ + லயம் = எல்லாம் அடங்கியுள்ள இடம்.)

ஆலயத்தின் பழைமையும் ஏதுக்களும்

கொங்குமண்டலத்தில் திடநிலை குன்று வடபரிசார நாட்டின்கண்ணுள்ள சிவாலயங்களில் முதன்மையுடையதும், பெயர் சிறந்து புகழ்பெருகியதும், தேவாரத் திருப்பதிகம் பெற்ற தொன்மையுள்ளதும் அவிநாசியப்பர் ஆலயம். இவ்வாலயம் மிகவும் தொன்மையுள்ளதென்பதற்கு கி. பி. ஒன்பதாம் நூற்றாண்டில் அதாவது இற்றைக்கு தொள்ளாயிரம் ஆண்டுகளுக்குமுன், தமிழகம் புகழ விளங்கியிருந்தவரும், சைவ சமயாசாரியர்களுள் ஒருவரும், சிவபெருமான் பேரன்பிற்குரியருமான **ஸ்ரீ சுந்தரமூர்த்தி சுவாமிகள்** இவ்வாலயத்திற்கு எழுந்தருளி அவிநாசியப்பரை வணங்கிய தொன்றே சிறந்த சான்றும். ஸ்ரீ சுந்தரர் காலத்திற்குப் பிந்தினவரும், சமய குரவர் நால்வருள் ஒருவரும், திருவாசகம் அருளிய மணிவாசகரும், இவ்வாலயத்திறைவரை, "அரியபொருளே! அவிநாசியப்பா! பாண்டிவெள்ளமே!" என்று பாடியதும் பழைமைக்கு மற்றோர் சான்றும்.

இச்சைவ பெரியார்களிருவரும் குறித்த பழைமையேயன்றி, இவர்கட்கு முன்னரும் பின்னரும் இவ்வாலயத்தைப் புதுக்கித் திருப்பணிகள் செய்வித்த அரசர் முதலானோர்களால், இவ்வாலயக் கற்சுவர்களில் பொறிக்கப்பட்டுள்ள சாசனங்களும் பழைமையைக் குறிப்பிடுகின்றன. மற்றும், அக்

கல்வெட்டுகள் இவ்வாலயத்தின் வரலாற்றையும் திருப்பணிகள் செய்தோர்கள்; செய்வித்தோர்கள்; செப்பனிட்டோர்; திருவமுதுக்குத் தானம் வழங்கியோர், நந்தா விளக்கேற்றத் தருமம் தந்தோர், அம்மையப்பர் எண்ணெய் முழுக்கிற்குத் தைலம் வார்த்தோர், நந்தனவனம் வைத்தோர் முதலினோர்களது பெயர்களும், அளவு, தான விவரம் முதலியவற்றையும் வேறு பல செய்திகளையும் விளக்குகின்றன. மொத்தம் முப்பத்தைந்து கல்வெட்டுக்கள் இவ்வாலயத்தின் நாற்புறத்துமுள்ளன. மேலும், இவ்வாலயத்தின் பெயரைக் குறிப்பிடுகிற வேறு ஆலயங்களில் கல்வெட்டுகளும் சில இருக்கின்றன. அவைகளுள் ஒன்று, பேரூர் நாட்டு "வெள்ளலூர்ச் சாசனம்."

அவிநாசியப்பர் ஆலயக் கல்வெட்டுக்களும்—கொங்கு மன்னர் முதலிய அரசர்களும், அவர்களது திருப்பணிகளும்.

ஆத்திமாலையணிந்து புலிக்கொடியேந்திய சோழ மன்னர்கள், தங்கள் பேரரசு பலப்பட்டிருந்த காலத்தில் தங்கள் சோழநாட்டுக்கு வடமேற்குத் திக்கிலுள்ள கொங்குமண்டலத்தின்மீது தங்கள் அதிகாரத்தைச் செலுத்தத் தொடங்கினார்கள். இம்மண்டலம் வடக்கே கங்கர் இராச்சியமும் மேற்கே சேரர்நாடும், தெற்கே பாண்டிய மண்டலமும்; தென்கிழக்கே சோழமண்டலமும், கிழக்கே தொண்டைமண்டலமும் உடைய ஒரு நிலப்பரப்பு. இது, இக்காலத்திய மைசூர் சீமையின் தென்பகுதியும்; சேலம் கோயமுத்தூர் ஜில்லாக்களும் அடங்கிய ஒரு பீடபூமி. இதனைப் பண்டைக்

காலத்தில் 'அதிகமான்' என்ற குறுநிலமன்னர் குடும்பத்தோரால் பரிபாலிக்கப்பட்டது. ஆதித்தசோழன் காலத்தில், அதன்கீழ்ப்பகுதி 'நோளம்பர்' ஆதீனத்தில் இருந்திருக்க வேண்டுமென்பது தர்மபுரியில் கிடைத்த நோளம்பர் கல்வெட்டுக்களால் புலப்படுகிறது. இக்கொங்குமண்டலத்தை சோழன் "ஆதித்தன்" தன் புயபலத்தால் கவர்ந்து தன் அதிகாரத்தில்வைத்துக் கொண்டானென்று "கோங்குதேச ராஜரக்கள்" என்ற நூல் கூறுகிறது. அந்நூற்கூற்றை இதன்கீழ்க் காண்க. அது "சோழவமிசத்திலே விசயாடராயன் மகன் ஆதித்தவர்மராயன்" சோழதேசம் தஞ்சாவூரிலே பட்டங் கட்டிக்கொண்டு கொங்கதேசத்துக்கு ராசாவேடர்களைச் செயம்பண்ணித் தலைக்காடு என்ற பட்டணங்கட்டிக்கொண்டு இந்த ராச்சியங்களிலே அநேக அக்கிரகாரம் சர்வமானியமாய்த் தருமம்பண்ணி அந்த அரசை அரசாண்டான்" என்பது. இப்பொழுது கொங்குநாட்டில் காணப்படும் முதலாம் பராந்தகச் சோழனுடைய கல்வெட்டுக்களும் இதையே மேலும் வலியுறுத்தும். பராந்தகன் தானே கொங்குநாட்டைக்கொண்டதாக யாதொரு சான்றும் இதுகாறும் கிடைத்திலது. ஆகையால், அங்கு அவன் கல்வெட்டுக்கள் அகப்படும் போது அந்நாடு அவன் ஆட்சிக்கு முன்னரேயே சோழர்வசம் வந்திருக்கவேண்டு மென்பது எளிதில் விளங்கும். ஆதித்தன் காலமுதல் சுமார் 250-ஆண்டுகள் சோழர்கள் ஆதீனத்திலேயே கொங்குநாடிருந்தது. அப்போது இம்மண்டலத்திற்கு, "அதிராஜ மண்டலம்" "சோழகேரள மண்டலம்" என்ற பெயர்கள் வழங்கப்பட்டு வந்தன. சோழரது பலம் நாளும் சிறிது சிறிதாகக் குன்றி வரும்போது, அக்கால சந்தர்ப்பத்திற்கேற்ப அரசு மாற்றம் ஆகவேண்டியிருந்ததால், அச்சோழர்களுள் ஒருவன், கொங்குமண்டலத்தின் இராஜாதிகாரத்தைத் தனது வமிசத்தானை ஒருவனைத்

தமது பிரதிநிதியாக்கி, அவன்வசம் ஒப்புவித்துத் தான், விலகிக்கொண்டான். அவனும் அவன்பின் சந்ததியார்களும், அதிகாரத்தை நடத்திக்கொண்டேவந்து நாட்கள் செல்லச் செல்லப் பிரதிநிதி ஸ்தானத்தை யொழித்துச் சுதந்தரத்தை நிலைநாட்டினர். அங்ஙனம் நிலைநாட்டிய சோழராசப் பிரதிநிதிகளுக்குக் "கோங்குச் சோழர்கள்" என்று பெயர் வழங்கப்பட்டதென்று ஆராய்ச்சியாளர் கூறுகின்றனர். கொங்குநாட்டுக் கல்வெட்டுக்களும், அவிநாசியப்பர் ஆலயத்துள்ள பல கல்வெட்டுக்களும் கொங்குச் சோழர்களின் அதிகாரங்களையும், அவர்கள் அவ்வாலயத்துப் பெருமானுக்குச் செய்த திருப்பணிகளையும், செவ்வனம் விவரிக்கின்றன.

புக்கொளியூர் அவிநாசி ஆலயத்தில் வெட்டப்பட்டுள்ள கல்வெட்டுகள் அனைத்தினும் பழைமையானது "குலோத்துங்கன்" எனப் பெயரிய கோங்குச் சோழன் காலத்தது. அவன் காலம் கி. பி. 1149-1183-ஆம் ஆண்டு.

குலோத்துங்கக் கொங்கச் சோழனுடைய நாலாம் ஆண்டில் அதாவது கி. பி. 1153-ல் அவனது சாமந்தனான "மருதன் மலையன்" என்னும் "குலோத்துங்கச் சோழ விக்கிரமாதித்தப்" பெயரினன், அவிநாசியப்பர் திருவாலயத்தில் நந்தா விளக்கொன்று எரிவதற்குப் பொருள் தானம் செய்தான் என்று குறித்திருப்பதுதான் முதல் கல்வெட்டு.

மற்றும், இக் குலோத்துங்கனது பன்னிரண்டாம் ஆண்டு அரசாட்சியில் அதாவது எட்டாண்டுக்குப் பின்னர் கி. பி. 1161-ல் வடபரிசார நாட்டு வேள்ளலூர் கிராமத்தார் "குடிக்கரணம்" என்ற வரியை (அளக்கின்றபடியினால் வரும் வருவாயை) பெருங்கருணைச் செல்வியார் திருவாலயத்துக்குத் தானமாகக் கொடுத்ததைக் குறிப்பிடும் கல்வெட்டு. அத்தானம் ஆண்டு ஒன்றுக்கு பன்னிரண்டு படி தானியம்

கொண்ட அளவுடையது. காணம் என்பது தானியம் அளக்கும்படி. மலையாளத்திலும் இப் படியின் அளவை, "காணம்" என்றே வழங்குகின்றனர். பதினைந்தாம் ஆண்டிலும் (ஆட்சியின் 11-ஆம் ஆண்டுக்கு கி. பி. 1164-ல்) அவிநாசியப்பருக்கு ஓர் தானம் செய்ததாக மற்றோர் கல்வெட்டுக் கூறுகிறது.

இவ்வளவே, குலோத்துங்கக் கொங்குச் சோழன் கல்வெட்டுகள்.

இவ்வரசனுக்குப் பின்னர் அதிகாரத்தைக் கைக்கொண்ட மன்னனது பெயர், 'வீரசோழன்' என்பது. இவன் கி. பி. 1183-ஆம் ஆண்டுமுதல் 1206-ஆம் ஆண்டுவரை அதாவது இருபத்திமூன்றாண்டுகள் அரசு செய்தான். இவ்வரசன் காலத்தில் இரண்டு தானங்கள் செய்யப்பட்டதாகச் சாசனங்கள் கூறுகின்றன. அவை ஒன்று பூமிதானமும், மற்றொன்று பொருள் கொடையுமாம்.

இவனுக்குப் பிறகு ஆட்சிக்கு வந்தவன், "வீரராஜேந்திர" ப் பெயரினன். இவ்வரசன், அரசு புரிந்த காலம். கி. பி. 1207-ஆம் ஆண்டுமுதல் 1225-ஆம் ஆண்டுவரை அதாவது பதினெட்டாண்டுகள். இவன் காலத்துக் கல்வெட்டுகள் அவிநாசியப்பர் ஆலயத்தில் ஐந்துள்ளன. இம்மன்னன் கொங்குச் சோழர்களில் மிக்க வீரமும், போரில் வல்லமையும் படைத்து இருபிரிவாக விருந்த கொங்கு நாட்டை ஒன்றாகச் சேர்த்துப் பேராண்மையுடன் அரசுசெய்தான். இவ்வரசன் காலத்திலேதான் கொங்கு நாடனைத்திலும் பல சாசனங்கள் பொறிக்கப்பட்டன. அவற்றுள் முதன்மையானவை இக்கொங்கு மன்னனது பதினைந்தாம் ஆண்டில் அவிநாசி என்ற **"சீர்காழியான்" "ஏராளபுரத்து வணிகன்" "ஆற்றலுடையான்" "திருப்புறம்பிய முடையான்"** என்பவர்களதும்;

இவனது இருபத்தியொராம் ஆண்டில் இவன் காரியஸ்தன் பிள்ளை எனப்படும் "வீரப்பெருமாள் எதிரிலி" என்பவனதும்; 29-ஆம் ஆண்டில், பேரூர்நாட்டு முட்டத்து 'மருதன்முதலி' என்னும் வணிக சக்கரவர்த்தி என்பவனதுமாம். இவர்கள் பல்வகைத் தானங்களைப் பரமனுக்குச் செய்ததாக அறியப்படுகின்றது.

இச்சாசனங்களால், அக்காலத்திய வியாபாரிகளுக்கு இருந்த நன்னிலையும், வைசப் பற்றும், தரும சிந்தனையும், கடவுளிடத்துப்பேரன்பும், அவர்களது பெயர்களும் இனிது விளக்கமாகின்றன.

மேலும், இவ்வரசனது 28-ஆம் ஆண்டு கல் வெட்டில் இவனது குமாரன் 'நச்சினார்க்கினியார்' என்ற கண்டியதேவசுவாமி, அவிநாசியப்பரும், பெருங்கருணைச் செல்வியும் சனிக்கிழமைகளில் எண்ணெய்யிட்டு மூழ்குதற்கு எண்ணெய்த் தானம் செய்தாகக் கூறப்பட்டுள்ளது. இவ் வெண்ணெய்த்தானத்தை வீரராஜேந்திர சோழனே செய்த தாக வேரூர் சாசனம் கூறுகிறது. இக்கல்வெட்டில் குறிக் கப்பட்டுள்ள பெயர் தமிழ்ப்பேருரையாசிரியர் 'நச்சினார்க் கினியர்' திருப்பெயரை மக்கள் வைத்து வழங்கும் வழக்கத் தைக் காட்டுகிறது. நச்சினார்க்கினியர் என்று இறைவனுக்கு ஒரு பேர் உண்டு.

மேற்காட்டிய வீரசோழனும், வீரராஜேந்திர சோழனும் 'கோனேரின்மைகோண்டான்' என்ற விருதுப்பெயரைப்புனைந்துகொண் டிருந்தனர். அரசனது சிறப்புப் பெயரின்றி விருதுப்பெயர்மட்டுமுள்ள கல்வெட்டுக்கள் ஐந்து அவிநாசியப்பர் ஆலயத்தில் இருக்கின்றன. அவற்றில் "பார்ப்பார்பூண்டி" என்கிற "வீரராஜேந்திர நல்லூரும்" வனவாசி என்கிற "வீரசோழநல்லூரும்" "கல்மடை" என்

கிற கிராமத்தின் பெயரும் குறிக்கப்பட்டுள்ளன. இக்குறிப்புக்களால் அரசனது பெயர்களால் ஊர்ப்பெயர்கள் வழங்குவதை அக்காலத்தில் மக்கள் வழக்கத்தில் கொண்டிருந்ததாகத்தெரிகிறது.

மற்றும் இவ்வவிநாசி ஆலயத்தில் "அவனிகோண்டராமன்சந்தி" என்ற ஒரு அரசனது பெயரால் ஒரு திருவிழா நடந்ததாகவும் அறியப்படுகின்றது.

இம்மன்னர்கள், கொங்குமண்டலத்தில் அரசு செய்த காலம், எழுபத்தியாறு ஆண்டுகள் என்று அவிநாசியப்பர் ஆலயத்துக் கல்வெட்டுக்களால் அறியப்படுகின்றது.

இவ்வளவே, கொங்குச்சோழ மன்னர்களது ஆட்சியில் அவிநாசியப்பர் ஆலயத்துள் வெட்டப்பட்டுள்ள கல்வெட்டுகள்.

கோங்குப்பாண்டியர்களும், அவர்கள் திருக்கோயிலுக்குச் செய்த திருப்பணிகளும்.

கொங்குச்சோழ அரசர்களுக்குப் பின்னர் இக்கொங்கு நாட்டை, 'கோங்குப்பாண்டியர்' என்ற மன்னர்கள் அரசு செய்யத் தொடங்கினர். இவர்கள், தென்பாண்டி மதுரை, கோற்கைப்பாண்டியர்களினும் வேறுவர். இக்கொங்குப் பாண்டியர், தங்கட்கு முன்னர் அரசுபுரிந்த அரசர்களது அறத்தையும், வழக்கத்தையும் பின்பற்றி அவிநாசியப்பர் ஆலயத்துக்குப் பல்வகைத் தானங்களும் திருப்பணிகளும் செய்திருப்பதாக ஆலயத்திலுள்ள அவர்களது கல்வெட்டுக்களால் அறியப்படுகிறது. கொங்குப்பாண்டியர்களில் முதன்மையாக விளங்கிய அரசன்பெயர் 'வீரபாண்டியன்' என்பது. இவன் 1265-ஆம் ஆண்டுமுதல் 1285-ஆம் ஆண்டு வரை அதாவது இருபதாண்டுகள் அரசுசெய்தான். இம்மன்

னன் காலத்தில் வெட்டப்பட்ட நான்கு கல்வெட்டுக்கள் அவி நாசியப்பர் ஆலயத்தில் இருக்கின்றன. அவைகள், அவிநாசிக்கு வடக்கில் ஐந்துமைலிலுள்ள 'மாட்டூர்' (சேவூர்) "செம்பியன்கிழானடிநல்லூர்" என்ற பெயருடன் தேவதான கிராமமாயிருந்ததென்றும்; அந்நல்லூரை அவிநாசியப்பர் ஆலயத்து உபயோகத்துக்குத் தானமூாக வழங்கப்பட்ட தென்றும்; இது போலவே வனவாசி யெனப்படும் "வீரசோழநல்லூரை" பெருங்கருணாம்பிகையாரின் திருப்பணிக்குத் தருமம் கொடுக்கப்பட்ட தென்றும் விவரிக்கின்றன. இவ்விருதானங்களும் வீரபாண்டியன் அரியாசனத்தமர்ந்து திருமுடிபுனைந்து கொண்டகாலத்தில் செய்யப்பட்டன. மற்றும் அவ்வரசனது ஏழாம் ஆண்டுக் கல்வெட்டு அவிநாசியில், "விக்கிரம சோழன் திருவீதி" என்ற பெயரில் ஒரு தெருவிருந்ததையும்; எட்டாம் ஆண்டுக் கல்வெட்டு மாட்டூரிலுள்ள வாலீச்சுரர் கோயில் ஊழியர்கள் கோயிலுக்குச் செலுத்தவேண்டிய வரிகளையும்; ஒன்பதாம் ஆண்டுக் கல்வெட்டு அம்மாட்டூரில் குடிமக்களுக்குச் சிலவரிகளை நீக்கியதில் வடபரிசார நாட்டு உட்பிரிவுகளான "வெள்ளாநாடு; பூளுவநாடு"களின் குடிகள் ஒத்துச் சம்மதித்ததையும்; பதினன்காம் ஆண்டுக் கல்வெட்டு தேன்போங்கலூர் நாட்டைச்சார்ந்த தேன்பள்ளியில் சுந்தர நாயனர்கோயில் ஒன்றிருந்ததையும் குறிப்பிட்டுள்ளன. இறுதியில் கூறிய கொங்குப்பாண்டியனது பதினன்காம் ஆண்டுக் கல்வெட்டினல், திரு அவிநாசியில் ஸ்ரீ சுந்தரமூர்த்தி சுவாமிகட்கு ஓர் சிற்றாலயம் இருப்பதைப்போலவே, தென்பள்ளியிலும் ஸ்ரீ சுந்தரர்க்கு ஓர் சிற்றாலயம் இருப்பதை நாம் அறிவதற்காயிற்று.

வீரபாண்டியன் அரசுக்குப்பின், 'சுந்தர பாண்டியன்' 'குலசேகர பாண்டியன்' என்கிற இரு பாண்டிய மன்னர்கள் பெயர்கள் மட்டும் கல்வெட்டுகளில் இங்கு காணப்படுகின்றன.

ஆயின், அவர்கள் அரசு செய்த காலம்; அவர்களது விசேடமான திருப்பணிகள்; வேறு செய்திகள் முதலியன இன்னதென விளங்குமாறில்லை. இவ்விரு மன்னர்களுள், சுந்தர பாண்டியன் செய்த திருப்பணி ஒன்றுமட்டும் விவரமாகத் தெரிகிறது. அது புக்கொளியூர் ஏரியில் முதலையுண்ட பாலனைத் தேவாரம் பாடி அழைப்பித்த ஸ்ரீ சுந்தரமூர்த்தி சுவாமிகட்கு அவர் நிகழ்த்திய அற்புதச் செய்தி யாவர் நினைவிலும் மறையாது நிலைபெற்றிருத்தல் கருதி, சிறு கற்றளியொன்று புதுக்கினனென்பது. அச் சிற்றாலயம் இன்றும் நல்ல நிலையில் புக்கொளியூர் ஏரிக்கரையில் விளங்குகிறது. அவ்வாலயத்தில் மூர்த்தங்கொண்டருளும் ஸ்ரீ சுந்தரமூர்த்தி சுவாமிகளின் நித்திய நைமித்தியங்கட்குச் சுந்தரபாண்டியன் முப்பத்தியோராம் ஆண்டில் 'அரணையூர்' வியாபாரி யொருவர் நெல் தானம் செய்திருக்கின்றனர்.

இவ்வளவே, கொங்குப் பாண்டியர் அரசுக் காலத்தில் அவிநாசியப்பர் ஆலயத்தில் பொறிக்கப்பட்ட கற்சாசனங்கள். மேற்குறித்த பாண்டியர்கள் அரசுக்காலம், மிகவும் குறுகிய அளவுடைய ஏழாண்டுகளேயாம்.

கன்னட ஹொய்சள வேந்தர்களும்—அவர்கள் அவிநாசியப்பருக்குச் செய்த தர்மங்களும்.

கொங்குப் பாண்டியர்களுக்குப் பின்னர், மைசூர் நாட்டுத் "துவார சமுத்திரம்" ஹொய்சள வேந்தர்கள் கொங்கு நாட்டின்மீது படையெடுத்துவந்து பாண்டியர்களை வென்று அதிகாரத்தைத் தமதாக்கிக் கொண்டனர். இவர்கள் அதிகாரத்தைத் தமதாக்கிக் கொண்டு அரசு செய்த காலம் கி. பி. 1292-ஆம் ஆண்டு முதல் 1351-ஆம் ஆண்டுவரை. அதாவது ஐம்பத்தோர் ஆண்டுகள். இவ் ஐம்பத்தோராண்டுகளில், "வீரவல்லாள தேவன்" என்ற ஓர் அரசன் பெயர் மட்டும்

சாசனங்களில் காணப்படுகின்றது. அக்கற் சாசனங்கள் அவிநாசியப்பர் ஆலயத்தில் மூன்றே காணப்படுகின்றன. அவை—அவிநாசியில் ஆலயங் கொண்டருளும் அவிநாசியப் பருக்கு, "காகுத்தராயன் சந்தி" என்றதொரு திருவிழா நிகழ்ந்ததையும்; அத்திருவிழாச் செலவுகளுக்கு வீரவல்லாள தேவனது சாமந்தனுன (சாமந்தன் = சிற்றரசன்) பெருமாள் டணுய்க்கன் மகன், "மாதப்படணுய்க்கன்" என்பவன், தென்பள்ளிக் கிராமத்தைத் தானம் செய்ததையுமே குறிப் பிட்டுள்ளன. இம்மாதப்படணுய்க்கன் தந்தை, 'பெருமாள் டணுய்க்கன்' தான் பவாநிநதி வட கரையில் இப்பொழுது ஜீர்ண தசையிலுள்ள "டணுய்க்கன் கோட்டையை"க் கட்டியவன். இவன் முன்னேர்கள் அக்காலத்தில் மிகுந்த செல்வாக்குடன் அரசு செய்திருந்ததாக வரலாறு கூறுகின் றது.

இவ்வளவே, துவார சமுத்திரத்து ஹொய்சள அரசர் களது செய்திகள் அவிநாசியப்பர் ஆலயத்துக் கல்வெட்டு களில் காண்பன.

உம்மத்தூர் மன்னர்கள்

துவார சமுத்திரத்து ஹொய்சள அரசர்கள் மகம்மதிய மன்னர்களது போருக்கு ஆற்ருது பின்னிடவே, பேரரசும் பெரும் புகழும் கொண்டு விளங்கிய விஜய நகரத்து ஆந்திர அரசர்கள் முன் வந்தனர். அவர்கள் காலத்தில் மைசூர் நாட்டு 'உம்மத்தூர்' "தேக்கணும்பி" என்ற ஊர் மன்னர் கள் சுதந்தர அரசர்களாகிப் போரில் கொங்கு நாட்டைக் கைப்பற்றிக் கொண்டனர். அவர்களில் "நந்தராய உடை யார்" என்பவர் கி. பி. 1477-ஆம் ஆண்டு முதல் 1499-ஆம் ஆண்டு வரையிலும்; "வீர சிக்குராய உடையார்" கி. பி. 1508-ஆம் ஆண்டிலும் அரசு செய்தனர். இவர்களது கல்

வெட்டுகள் அவிநாசியப்பர் ஆலயத்தில் இருக்கின்றன. நந்த ராய உடையாரது அமைச்சர் பெயர், "ஒன்னக்கன செட்டியார்" என்பது. இவ்வளவே உம்மத்தூர் மன்னர்களது செய்திகள்.

விஜயநகரத்து வேந்தர்கள்.

தெக்கணும்பி நந்தஉடையார் காலத்திற்குப் பிறகு கொங்குநாட்டைக் கைப்பற்றி அரசுசெய்த வேந்தர்கள் விஜயநகரத்து மன்னர்களாவர். இவர்கள் கி. பி. 1470-ஆம் ஆண்டுமுதல் 1542-ஆம் ஆண்டுவரை அதாவது எழுபத்திரண்டு ஆண்டுகள் அரசுசெய்தனர். இவர்களில் "அச்சுதராயன்" என்ற அரசன் பெயர் மட்டும் கல்வெட்டில் காணப்படுகிறது. அக்கற் சாசனம், அவ்வரசன், அவிநாசியப்பர் தெப்பத்திருவிழாக் கொண்டருளுதற்குச் "செல்லங்கசமுத்திரம்" என்ற திருக்குளம் ஒன்று வெட்டுவித்தான் என்பதை மட்டும் விவரிக்கின்றது. இதனை முன்னரே நாம் பிரிதோரிடத்தில் குறிப்பிட்டிருக்கின்றோம்.

மற்றும், இவ்வச்சுதராயன் காலத்தில் சகம் 1419-க்கு கி. பி. 1469-ஆம் ஆண்டில் ஏம்மாக்கல் செட்டி என்ற பெயருடைய சிவபக்தரொருவர், தட்சிண காசியாகிய அவிநாசித்தலத்து இறைவருக்கு உச்சிக்காலபூசைக்கு உபயோகமாதற்பொருட்டுப் பூமிதானமும், சகம் 1421-க்கு கி. பி. 1371-ஆம் ஆண்டில் அச்சிவபக்த செட்டியாரே அவிநாசியப்பர் சிவநிவேதனத்திற்கு ஆயிரம் தென்னைமரங்கள் நட்டுப் பயிராய் விளைவதற்குவேண்டிய பொருள்கொடையும் செய்ததாகக் கல்வெட்டுகள் விவரிக்கின்றன.

இவ்வளவே, விஜயநகர மன்னர்களது ஆட்சியில் அவிநாசியப்பருக்குச் செய்வித்ததாய்க் கல்வெட்டுக்களிற் காணும் சிவதிருப்பணிகள்.

மைசூர் அரச வம்சத்தினர்.

விஜயநகர மன்னருக்குப்பின், மைசூர் அரசவமிசம், அதிகாரம்படைத்துக் கொங்குநாட்டைக் கைப்பற்றி அரசாளத் தொடங்கியது. அவர்களுள், சிக்குதேவராய உடையாரது கி. பி. 1695-ஆம் ஆண்டுக்கல்வெட்டும், ஸ்ரீ கிருஷ்ண தேவராயரது கி. பி. 1756-ஆம் ஆண்டுக்கல்வெட்டும் அவிநாசியப்பர் ஆலயத்து கற்சுவற்றில் வெட்டப்பட்டிருக்கின்றன. அவைகள், சிக்குதேவராயரது அமைச்சர், சூரிகார மல்லையன் என்னும் பெயரினர் என்பதும், ஸ்ரீ கிருஷ்ண தேவர் ஆட்சிக்காலத்தில் அவிநாசியப்பர் ஆலயத்தை ஜீர்ணோத்தாரணம் செய்வித்தும், தன்பெயராகிய சங்கரய்யன் என்ற பெயரால், அதாவது "சங்கரேச்சுரன்" என்ற திருப்பெயரில், அவிநாசியப்பர் ஆலயத்துக்குத் தென்கிழக்கில் சிறு கோயிலொன்றைக் கட்டுவித்து அதில் சிவலிங்கம் ஒன்றைப் பிரதிஷ்டை செய்ததும் அவிநாசியப்பர் ஆலயத்தைப் புதுப்பித்ததுமான செய்திகளேயாம்.


மேலும், அவிநாசியப்பர் ஆலயத்திலுள்ள ஒருகல் வெட்டில், அவிநாசியப்பர் ஆலயத்துக்கு "தசக்கிரியை" எனப்படும் செய்கைகளைச் செய்வதற்கு இரண்டு தச்சு ஆசாரிகளுக்குத் "தச்சு ஆசாரிக்காணி" என்ற தர்மம் ஒன்றை நிலமாக வழங்கப்பட்ட தென்பதையும் விவரித்துள்ளது. (தசம்=பத்து, கிரியை=செய்கை.)

இதுகாறுங் கூறிவந்த செய்திகளால், கொங்கு நாட்டை வேறு வேறு அரசர்கள், சுமார் அறுநூறு ஆண்டுகளாக அதாவது கி. பி. 1149-முதல் 1756-வரை அரசுசெய்த மன்னர்களின் பெயர்களும்; அவர்கள் அரசுசெய்த காலங்களும், அவர்களும், அவர்கள் சாமந்தர்களும், குடிகளும், வியாபாரிகளும் அவிநாசியப்பருக்குச் செய்த சிவதிருப்பணிகளும், திருப்

பணிகளின் விவரங்களும், தெளிவாக அறியலாகும். இவ்வோர் ஆலயமே மிகப் பழைமையும் இனிமையும் அரியதுமான செய்திகளை நமக்கு விளக்குமானல், மற்றும் கொங்கு நாட்டுள்ள பல ஆலயங்களை ஆராய்ந்து பார்ப்பின், இன்னும் தொன்மையுடையதும் அறிதற்கு அரிதானதுமான பல்வேறு இனிய செய்திகளை நாம் அறிந்து மகிழக்கூடும். நமது மூதாதைகள், பின்னோர் உணருமாறு சரித்திரம் வரைந்து வைக்காமல் வாளா சென்றனரென்று இக்காலத்துச் சிலர் குறைகூறிவருவது ஆராய்ந்து பாராமல் பிறர்மேற் சுமத்தும் போலிக் குற்றமேயாம்.

இனி இக்கோயில் சிற்பங்களாலும், சில செய்திகள் அறியலாகும். அவை அவிநாசியப்பர் ரௌரங்க மண்டபத்துள்ள கற்றூண்களிலும் பெருங் கருணம்பிகை திருச்சந்நிதானத்திலும் கோயிற்றிருப்பணிகளைச் செய்தவர்களையும், செய்வித்தவர்களையும், புதுப்பித்தவர்களையும் பிறர்கண்டு மகிழும்படி அவர்கள் திருவுருவங்களைக் கற்சிலைகளில் சிற்றுளிகளைக் கொண்டு சித்தரித்து வைக்கப்பெற்றுள்ளன. இச்சித்திரச் சிலைகள் அக்காலத்தில் அதாவது சுமார் 800-ஆண்டுகளுக்குமுன் மக்கள் எவ்வித அணிகளையும், பணிகளையும், ஆடைகளையும் அணிந்து கொண்டிருந்தார்களென்பதை நமக்கு அறிவித்துக் கொண்டிருக்கின்றன. மேலைச்சிதம்பரம் என்னும்திருப்பேரூர் திருக்கோயிலில் அற்புதாலங்கார விசித்திர சிற்பநுட்பங்கள் செறிந்ததும், விளக்கத்தக்க சிற்றுளித் திறமைகள் நிரம்பியதுமான சிற்பத் தூண்களைப்போல் இக்கோயிலில் இல்லாவிடினும், சாதாரணத்தூண்களையும், வேலை முடிவு பெறுமல் ஆலயத்துக்கு வெளி முற்றத்தில் கிடக்கும் மாபெரும் கல்லுத்திரங்களையும் காண்பார்க்கு மலைகள் சமீபத்தில் இல்லாத இவ் வடபரிசார நாட்டுப் பிரதேசத்தில் எவ்வளவு சிரமத்துடனும், பொருட் செலவுடனும், நுட்பத்துட

னும், இப் பேராலயத்தைக் கட்டி முடித்திருக்க வேண்டு மென்ற எண்ணத்தைத் தோன்றச் செய்யும். மேலும் இத் திருத்தலத்தில் யாத்ரீகர்கள் கண்டு அதிசயிக்கக்கூடியதும், பழங்காலத்துச் சின்னங்கள் அழிந்து போகாமல் நிலைபெற் றிருப்பதுமான கற்பாலம் ஒன்றிருக்கிறது. அது மிகவும் புராதனமானது. இது தற்கால ஆங்கில நவீன நாகரீகத்தைப் பின்பற்றிக் கட்டப்படும் வளைவுப் பாலங்களைப் போலின்றி, பருமனுன கற்றூண்களைப் பூமியில் ஆழப்பதியுமாறு நிறுத்தி அவைகளின்மீது சந்தில்லாமல் கருங்கல்களைத் தளவரிசை செய்து அதன்மீது சிறு சல்லி, மணற்கலந்த சுண்ணும்பைச் சேர்த்து நன்ருகப் பதியும்படி மரப் பலகைகளைக் கொண்டு தட்டி கெட்டிப்படுத்திக் கட்டப்பெற்றது. இவ்வகையில்தான் நமது தமிழகத்துத் தொன்மை அரசர்கள் கட்டிவைத்த பாலங்களின் அமைப்பு இருந்தது. இக் கற்பாலத்தைப் போலவே வேறு பாலங்கள் சோழ நாடு, தொண்டை நாடு களில் பல விருக்கின்றன. இப் பாலம் அவிநாசியப்பர் ஆலயத்துக்கும், ஊருக்கும் இடையிலேயுள்ள நள்ளாற்றின் மீது கட்டப்பட்டிருக்கிறது. பாலத்தின்மீது நடப்போர்க்கு அபாயம் நேராமலிருக்க இரு பக்கங்களிலும் பருமனும் கன மும் உயரமுமான கைப்பிடிச் சுவர்கள் எழுப்பப் பெற் றுள்ளன.



அவிநாசியப்பர் ஆலய முன்மண்டபத் தோற்றம்.



திருக்குளத் தோற்றம்.

கோயில் கொண்டருளும் மூர்த்திகளும்—கோபுரம், கொடிக் கம்பம், தூண்கள், மண்டபங்கள் முதலியவைகளின் விவரங்களும்.

திருப்பெருங் கருணையச் செல்வியை வலப் பாகத்தில் கொண்டு ஆன்மாக்கள் உய்யும்பொருட்டு ஆலயங் கொண்டருளும் அவிநாசியப்பருக்கு முதன்முதல் திருவாலயம் உண்டாக்கி அவரை அவ்வாலயத்தில் உருவவடிவில் எழுந்தருள்வித்த பெரியார் இன்னுரென அறியக்கூடாமல் அந்தகாரப்பட்டிருக்கிறது. ஆனதனுல், அவற்றைத் தெளிவாக உணரக்கூடவில்லை. ஆயின், பழைமைமிக்க இவ்வாலயத்தைப் பழுது பார்த்தும், புதிய திருப்பணிகள் செய்தும், அம்மையப்பர்கள் பூசை நிவேதனங்களுக்குப் பூமியளித்தும், பொருட்கொடை உதவியும், நன்மைகள் செய்த அரசர்கள், அறன் அடியார்கள் செய்திகள் தெளிவாகத் தெரிவதால், அவைகளை அன்பர்கள் அறிந்து மகிழும்பொருட்டு மேலைப் பகுதியில் விளக்கலானேம்.

இனி, சிவாலயத்தின் அமைப்பையும், அங்குக் கோயில் கொண்டருளும் சிவமூர்த்தங்களையும், கலியாண மண்டபம், தூண்கள் முதலியவைகளையும் இப் பகுதியில் யாத்ரீகள் தெரிந்துகொள்ளும்பொருட்டு விவரப்படக் கூறுவாம் :—

இது மிகவும் பழைமையான திருக்கோயில் என்பதற்கு அதன் அமைப்பும் தோற்றமும் நன்ருக நிரூபிக்கின்றன. சோழ நாடு, பாண்டிய நாடு, தொண்டை நாடு. நடு நாடுகளிலுள்ள வானளாவ வளர்ந்து பொற்கலசங்களிட்ட பெருங்

கோபுரங்களையும், நீண்டுயர்ந்த பெரு மதில்களையும், அகன்று பரவிய பேராலயங்களையும்போல் இவ்வாலயமின்றி சிற்றுருவைக் கொண்டுள்ளது. கொங்கேழ் தலங்களிலுள்ள சிவாலயங்கள் அனைத்தும் சிறு வடிவினவேயாம். இச் சிற்றாலயம் சிறந்த சிற்பங்களாலும், சித்திரங்களாலும் அலங்கரிக்கப்பட்டதாயில்லை. அதனுடன் முதற்பெரும் வாயிலில் ஸ்தூல லிங்கமாகிய கோபுரமின்றி முதல் நிலை மட்டுமுள்ளது. திருவாலயத்து நாற்புறத்துத் திருமதில்கள் கருங்கல்லும் செங்கற்கல்லும் கலந்து கட்டப்பட்டிருக்கின்றன. சுமார் பத்தடி உயரமிருக்கும். ஆலயத்து முன் மண்டபம் அவ்வளவு பெரிதல்ல. காண்போர் கண்களுக்குக் களிப்பூட்டுவதுமாயில்லை. மேல்விதானமும், உத்திரங்களும், தூண்களும் சாமான்யமானவை. இம் மண்டபத்தை முப்பது தூண்கள் சுமந்துகொண்டிருக்கின்றன. முன்மண்டபத்தின் தென்பாகத்தில் யானைமுகப் பிள்ளையார் வடதிசை நோக்கி அமர்ந்துள்ளனர். அப்பிள்ளையார் முன்திருவாயிற்படியில் நன்றாகச் சதுரிக்கப்பட்டு 6-அடி உயரமும், 3-அடி அகலமுமுள்ள கருங்கல்லில் நீண்டதொரு கற்சாசனம்கன்னட மொழியில் அம்மொழிப் பயிற்சியுடையார் எளிதிலறியும்படி வெட்டப்பட்டுள்ளது. இச்சிறு மண்டபமும், முன் மண்டபமும், "வாணராய வடமலையப்பர்" என்ற பிரபுவால்தெய்வ காரியத்திற்குத் திருப்பணி செய்வித்தாகக் கல்வெட்டொன்று கூறுகிறது. இப்பிரபுவின் பெயரைக் கவனித்தால் திருநெல்வேலி "தளவாய்களையும்" "மச்சபுராண" ஆசிரியர் பெயரையும் நினைப்பூட்டுகின்றன. இம் முன்மண்டபத்தின் வெளிமுற்றத்தில் சந்நிதிக்கு நேர் எதிரில் நான்கடி சதுரத்திலும், உருளை வடிவிலும் சித்தரிக்கப்பட்ட சுமார் 60 அல்லது 70 அடி உயரமுள்ள கொடிக்கம்பமொன்று நாற்கால் மண்டபத்துடன் சேர்த்து நிறுத்தப்பட்டிருக்கின்றன. கொடிக் கம்பத்தில்

சதுரிக்கப்பட்ட நாற்புறங்களில், கிழக்கில் விநாயகரும், மேற்கில் ஸ்ரீ சுந்தரமூர்த்தி சுவாமிகளும், வடக்குத் தெற்கு பாகங்களில் முதலை பிள்ளை உமிழும் வடிவி லமைந்த உருவங்களும் நன்றாகச் சித்தரித்து வைக்கப்பட்டுள்ளன. கொடிக் கம்பத்துச் சிறு மண்டபத்தின் தளத்தின்மீது சந்நிதிக்கு எதிர் பாகத்தில் நந்தி உருவமும், பலிபீடமும், முதலை பாலனை உமிழும் உருவில் கற்சிலைகளும், வரிசையாக வைக்கப்பட்டிருக்கின்றன. கொடிக் கம்பத்துக்குத் தென்றிசையில் சுமார் 30-அடி தூரத்தில் பெருங்கருணைச் செல்வியார் தவம் புரிந்த நல்லிடம் சிறு கோவிலாகச் சமைக்கப்பட்டிருக்கிறது. கர்ப்பக் கிரகத்தில் தேவியார் பாதிரி மரத்தை யொட்டி நின்ற திருக்கோலத்தில் சேவை சாதிக்கின்றனர். இச்சிற்றாலய வெளி முற்றத்தில் பன்னீர் மரம் நறுமணத்தை வீசிக் கொண்டிருக்கிறது. இதற்கடுத்து வடபக்கத்தில் அகோர வீரபத்திரர் சிறு கோயில் ஒன்றிருக்கிறது. முன் மண்டபத்தின் வடமேற்கிலுள்ள சிறு மண்டபத்தில் புலவிச்சி மண்டபமும், அதற்கு அண்மையில் இறங்கு கிணறொன்றும் இருக்கிறது. இவ்வளவே முன் மண்டபத்திலும் மண்டபத்தை யொட்டியுள்ள இடங்களிலும் அமைந்துள்ளவை.

திருக்கோபுரம் இறக்கப்பட்ட முன் பெரும் வாயிலிலுள்ள விநாயக மூர்த்தியை வணங்கி உட்சென்றால், முதலில் நமக்குத் தென்படுவது "நவரங்க மண்டபம்," இம்மண்டபம் பதினறு தூண்களால் சமைக்கப் பட்டுள்ளது. இவைகளில் ஆறு தூண்கள் சித்திரத் தூண்கள். வடபக்கம் கீழ் மேல் வரிசையிலுள்ள சித்திரங்களில் "நடனசபாபதி" தமது வலதுகாலைச் சிரசிற்கு மேல்தூக்கிச்செய்யும் **ஊர்த்துவத்தாண்டவம்**; இரண்டாவது, **கங்காளர்** அல்லது **அகோரவீரபத்திரர்** திருவுருவம்; மூன்றாவது சிவநேயர் திருவுருவம். தென்பாகம் கீழ் மேல் வரிசையிலுள்ள சித்தி

ரங்களில் திருவாலங்காட்டுக்காளியம்மையார் திருநடனமும்; இரண்டாவது இருகைகூப்பி வணங்கி நிற்கும் திருவுருவங்களும் இருக்கின்றன. இத்திருவுருவங்களனைத்தும் ஆறடி உயரத்தில் அழகாகச் சித்தரிக்கப்பெற்றுள்ளன. அவிநாசியப்பர் சந்நிதியின் இரண்டாந் திருவாயில் கருங்கல் சித்திரவேலை மிக்கத் திறமைவாய்ந்தது. திருநிலைக்குமேல் அமைக்கப்பட்டிருக்கும் விதானம் அழகிய கொடுங்கைகளால் அலங்கரிக்கப் பெற்றிருக்கின்றன. இதில் சிற்றுளித்திறமையும், சிற்பாச்சாரியின் ஓவியக்கைவன்மையுந் வியந்து பாராட்டற் குரியனவாக விளங்குகின்றன. திருநிலையின் இருபுறத்திலும் துவாரபாலகர்கள் திருவுருவங்கள் சிறுவடிவங்களாக இலங்குகின்றன. இம்மண்டபத்தை யொட்டித் தென்பாவிருப்பது பூத்தோடேக்குமண்டபம். இவ்வகையமைந்த நவரங்கமண்டபத்தில்தான் சிவதெரிசனம் செய்யவரும் அன்பர்கள், அங்கு வீற்றிருக்கும் அந்தண அர்ச்சகர்களிடம் தாங்கள் கொண்டுவந்திருக்கும் தேங்காய், பழம், கற்பூரம், சந்தனம், குங்குமம், மலர்மாலைகள் முதலியவைகளைக் கொடுத்துப் பூசை செய்யச்சொல்வதும்; பூசைமுடிந்தபின், அவர்களிடமிருந்து பிரசாதங்களைப் பெற்றுக்கொள்வதும். நவரங்கமண்டபத்திற்குத் தெற்கில் சிறிது தூரமிருப்பது கலியாணமண்டபம். இம்மண்டபமும் அழகுடையதாயில்லை. சாமானியமாகப் பதினன்கு கருங்கற்றூண்களையும்; கீழ்மேல் அறுபதுஅடி நீளத்தையும்; தென்வடல் 32-அடி அகலத்தையும் கொண்டிருக்கிறது. இவ்வறுபதடி நீளத்திற்கு அப்பால் சற்றுயரத்தில் சமைக்கப்பட்டுள்ள மேல்மண்டபத்தில் சோமாஸ்கந்தமூர்த்தி எழுந்தருளியிருக்கின்றனர். கலியாணமண்டபத்திற்கு நேர் எதிரில் போக்கிஷ அறையும்; அவ்வறைக்கு வடபால் சூரியன்கோயிலும், தென்பால் வாகனமண்டபமும் இருக்கின்றன. வாகன மண்டபத்தையொட்டி திருவமுதுமாளி



ஸ்ரீ பெருங்கருணையச் செல்வியார் ஆலய
முன்மண்டபத் தோற்றம்.



ஸ்ரீ அவிநாசியப்பர் ஆலய உள்தோற்றம்.

கையும் சமைந்திருக்கிறது. திருவமுதுமாளிகைக்கு நேர் மேற்கிலிருப்பது **பெருங்கருணைச் செல்வியார் திருக்கோயில்.** சிவாலயங்களில் எங்கணும் தேவியார் திருக்கோயில், சிவபெருமான் கோயிலுக்கு இடப்பாகத்தில்தானிருப்பது வழக்கம். இத்திருத்தலத்தில் மட்டும் தேவியார் திருவாலயம் இறைவருறையும் திருவாலயத்திற்கு வடபாகத்தில் அமைந்திருக்கிறது. இங்ஙனம் இவ்வாலயம் அமைந்ததற்குக் காரணம், அவிநாசித் தலபுராணத்தில், தலவுற்பத்திச் சருக்கத்தில் தெளிவாக விவரிக்கப்பட்டிருக்கிறது. அது—‘சிவபெருமான் ஒரு காலத்தில் அக்கினிதாண்டவம் செய்தருளியபோது, பிராட்டியார் பிரணவ சொரூபங்கொண்டு இறைவரிடத் தொடுங்கினர். அது காரணமாகச் சிலகாலம் இறைவி சிவபெருமானைப் பிரிந்திருக்க நேரிட்டது. அத்தோஷ நிவர்த்தியின் பொருட்டு அம்மையார் அவிநாசியில் தவம் செய்தனர். அவரது தவத்திற்குவந்த சிவபெருமான், காசி விசுவநாத மூலலிங்கத்தினின்றும் வேர் வடிவில் அவிநாசித்தலத்தில் சிவக்கொழுந்தாய்த் தரிசனம் தந்தனர். அம்பிகையார் ஆனந்தமடைந்து பத்திரம் முதலியவைகளால் பூசித்து வழிபட்டனர். சிவபெருமான் பெருமகிழ்வடைந்து ‘சத்தியே! உனக்கு எப்பொழுதும் உரித்தானது வாமபாகம். (வாமபாகம் - இடப்பாகம்) அப்பாகத்தை உன்மீதுண்டாகிய ஆனந்தந்தால், அப்பாகத்தை நாம் கொண்டோம்; நமது பாகத்தை நீ கொள்வாய், என்று தமது வலப்பாகத்தைக் கொடுத்தருளின ரென்பது’. அதுமுதல் இத்தலத்தில் தேவியார்க்கு வலப்பாகத்தில் ஆலயம் அமைந்து திகழ்கிறது. இவ்வாலயத்தின் கர்ப்பக்கிருகத்தில் பெருங்கருணைத் தேவியார் சிலாரூபத்தில் நான்கு திருப்புயங்களோடு சேவை தந்தருள்கின்றனர். **‘பள்ளியறை’** அர்த்தமண்டபத்தையொட்டியிருக்கிறது. **மகாமண்டபம்** பதினாறு தூண்களால் சமைந்திருக்கிறது. இவைகளில் எட்டுத்தூண்கள் **சித்திரத்**

தூண்கள். தென்வரிசைத் தூண்களில் கிழக்கிருந்து மேற்கி லிருப்பன; 1 விஜயநகரத்து மன்னர் அச்சுதராயர், அவர் தம் மனைவியருடன் கூப்பிய கரத்துடன் நின்றிருப்பது; 2 மோகி னிவடிவம்; 3 நீண்ட நேதார் பிரம்பேந்தி இடதுகாலைவளைத்து ஓர்வகைக் கூத்தாடும் ஆண் உருவம்; சிற்பாச்சாரி ஆகிய நான்கு சித்திரவடிவங்கள்; வடபுற வரிசைத்தூண்களில் மேற்கிலிருந்து கிழக்கிலிருப்பன. 1 ஓர் அடியார்; 2 ஓர் பெண் தன்னிருகைகளிலும் பிள்ளையேந்திக்கொண்டு இடை வளைத்துக் குளிர்ந்த பார்வையில் ஓர்வகை நடனம்புரிவது; 3 கோதண்டமேந்தி நின்றிருக்கும் ஓர் திருவுருவம்; 4 நாக கன்னிகை கூப்பிய கரத்தோடு நிற்பது ஆகிய நான்கு சித்திர வடிவங்கள். இம்மண்டபத்தின் முன்வாயிலின் இருபக்கங் களிலும் பக்தகோடிகள் ஏறிச்சென்று இறைவியைத் தரிசிப் பதற்கு இரு திருவாயிற்படிகள் அமைக்கப்பட்டுள்ளன. அப்படிகளின் இருபக்கங்களிலும் யானை உருவங்கள் நிறுத் தப்பட்டிருக்கின்றன. சந்நிதிக்கெதிரில் பலிபீடத்தைச் சேர்த்துச் செப்புத்தகடுபோர்த்த நெடுங் கோடிக்கம்பம் ஒன்று நிறுத்தப்பட்டிருக்கிறது. இம்மண்டபத்தின் வட சுவற்றிற்கு வெளியில் வடக்குச் சுற்றுப்பிரகாரத்தின் வழி யிருக்கிறது. அவ்வழிக்குவடபால் அறுபத்துமூவர்கற்சிலைகள், இரும்புக்கம்பிகள்போட்ட ஓர் மண்டபத்தில் பிரதிஷ்டிக்கப் பெற்றுள்ளன. பெருங்கருணைச்செல்வியார்கோயில் கர்ப்பக் கிரகத்தின் பின்பாகத்தின் நடுவில் சாமுண்டி ஈஸ்வரி சிம்மா வாகனத்தில் அமர்ந்து மகிடாசூரனைச் சங்கரிக்கும் கற்சிலை சித்தரித்து வைக்கப்பெற்றிருக்கிறது. இச் சிற்பச்சிலை மைசூர் வமிசத்து உடையார்கள், கொங்குநாட்டை அரசு செய்தபோது இவ்வாலயத் திருப்பணியைச் செய்திருக்கக் கூடுமென நம்மைக் கருதச்செய்கின்றது. கர்ப்பக்கிரகத்தின் வெளிப்பாகத்தில் தெற்கு வடக்குப் பக்கங்களின் சுவர்களில்

யானைமுகப்பிள்ளையார் திருவுருவங்கள் மிக நன்றாகச் சித்தரித்து வைக்கப்பெற்றிருக்கின்றன. பழைய வரலாற்றை அறிவிக்கும் கல்வெட்டுக்கள் பல கர்ப்பக்கிரகத்தின் சுவர்களில் மிகுதியாகக் காணப்படுகின்றன. கர்ப்பக்கிரகத்திற்கு மேல் திருக்கோபுரமொன்று அமைக்கப்பெற்று அழகாக விளங்குகிறது. பிரகாரத்தின் தென்வடல் அகலம் 154-அடிகளும், கீழ்மேல் நீளம் 160-அடிகளும் இருக்கின்றன. சுவாமி கோவில் கர்ப்பக்கிரகத்தின்மீதும் தங்கக்கலசமிட்ட கோபுரம் ஒன்று அமைந்து திகழ்கின்றது. பிரகாரத்தின் வடபாகத்தில் கோவில் அர்ச்சகர்களுக்குத் தனித்தனி 'விடுதிகள்' கட்டப்பட்டிருக்கின்றன. இவ்விடுதிகளையொட்டி மண்டபமொன்றிருக்கிறது; அது பன்னிரண்டு தூண்களைக் கொண்டது. அவற்றில் நான்கு சித்திரத்தூண்கள் ஆகும். இவ்வழகிய மண்டபத்தில் சிற்சபாநாதர் சிவகாமவல்லியாருடன் அமர்ந்து திருநடனம் செய்தருள்கின்றனர். இம்மண்டபத்தை அடுத்துள்ளது 'யாகசாலை'. நவரங்க மண்டபத்தின் இரண்டாம் திருவாயிலின் வடபாகத்தில் ஆறுதூண்களால் சமைந்த சிறியமண்டபத்தில் பதினொரு சிவலிங்கங்கள் ஆவுடையாருடன் கிழக்குநோக்கிப் பிரதிஷ்டிக்கப் பெற்றிருக்கின்றன. இவைகளுடன் தென்றிசை நோக்கி இரண்டு விநாயகமூர்த்தங்களும்; நாகாசனத்தில் அமர்ந்த இருசிவலிங்க உருவங்களும் விளங்குகின்றன.

இரண்டாவது திருவாயிலைக் கடந்தால் நமக்குத் தென்படுவது பூஜாத்திரவியம் வைக்கும் திருமண்டபமாகும். அம்மண்டபம் இருபத்தாறு தூண்களால் அமைக்கப்பட்டுள்ளது. இம்மண்டபத்தின் நடுவில் கோடிக்கம்பமும், நந்தி உருவமும் இருக்கின்றன. மூன்றும் திருவாயிலின் முன்னர் இரண்டு துவாரபாலகர்களுடைய கற்சிலை உருவங்கள் 8½-அடி உயரங்களில் பேரழகுபொலியவும், சிற்பநலங்கள் திகழவும் நேத்

திரானந்தமாக நிறுத்தப்பட்டிருக்கின்றன. இம்மகா மண்டபத்தின் வலப்பாகத்தின் கீழ்க்கோடியில் தண்டபாணிக்கு மலைவடிவில் ஒருபீடம் அழகுபெற எடுப்பித்து அப்பீடத்தின் மீது அவர் திருவுருவம் பிரதிஷ்டிக்கப் பெற்றிருக்கிறது. வடபுறத்து நீண்ட மண்டபத்தில் சமயகுரவர்கள் திருவுருவம் கற்சிலைகளிலும், பாதாளகணபதியும் வைக்கப் பெற்றுள்ளன. மேற்புறம் நீண்ட மண்டபத்தில் கிழக்குநோக்கிச் சகஸ்ர (ஆயிரம்) லிங்கமும், பஞ்சலிங்கங்களும், சப்த மாதர்களும், குழந்தைக்குமரனும்; வடக்குமண்டபத்தின் கீழ்க்கோடியில் ஆறுமுகவேலர் வள்ளியம்மை தெய்வயானையருடனும் ஆலயங்கொண் டருள்கின்றனர். கர்ப்பக்கிரகத்தின் வடபாகத்துப் பிரகாரத்தில் சண்டீச்சுரருக்கு ஒரு சிற்றாலயமும், கர்ப்பக்கிரகத்தின் சுற்றுப்புறங்க ளனைத்திலும் பழைமையான கல்வெட்டுக்களும் உள. மேற்குக்கோடியில் காலபைரவருக்கு ஒரு சிற்றாலயம் உண்டு. இவர் நினைப்போர் அபீஷ்டங்களை நிறைவேற்றும் வரப்பிரசாத மூர்த்தியாக விளங்குவதால், அன்பர்கள், இம்மூர்த்திக்கு விருப்பமான "வடைமாலை" சாத்திப் போற்றி வணங்கி வருகின்றனர். இப்பைரவர் கோயிலுக்கு எதிரில்தான், இந்நூலில், "தீர்த்தங்களும் மேன்மைகளும்" என்ற தலைப்பில் விளக்கிய காசிக்கங்கைத் தீர்த்தம் கூவம் வடிவிலிருக்கின்றது.

அவிநாசியப்பரது மூன்றும் திருவாயிலைக்கடந்து உள்ளே சென்றால், முதலில் காணப்படுவது நான்கு தூண்களுடைய சிறு மண்டபமாகும். இம்மண்டபத்தில் ஸ்ரீவல்லிநாயகர் சந்திரசேகரர் சோக்கநாதர் முதலிய தெய்வங்களின் உற்சவ மூர்த்தங்கள் முறையாக வைக்கப்பெற்றிருக்கின்றன. இம்மண்டபத்திற்கு அப்பாலிருப்பதே அவிநாசியப்பர் "கர்ப்பக்கிரகம்" அதாவது மூலஸ் தானம். இதில்தான் அவ்விறை

வர் இலிங்காகாரமாக ஆவுடையாருடன் கூடி ஆலயங் கொண்டருள்கின்றனர்.

ஆலயத்தின் முதற் பெருவாயிலின் மத்திய பாகத்தின் நிலையினை யொட்டி வடபாகத்தில் வன்றொண்டராகிய ஸ்ரீ சுந்தரமூர்த்தி சுவாமிகளும், திருவாசகம் ஓதிய மணிவாசகரும் பதிகம் பாடியருள்வதுபோல் கருங்கல்லில் சித்தரித்து வைக்கப்பெற்றுள்ளனர்.

காத்தற் கடவுளாகிய திருமாலுக்கு இத்தலத்தில் திருநள்ளாற்று வடகரையில் திருக்கோயிலொன்றுளது. இக்கோயிலில் விளங்கும் திருமாலின் திருப்பெயர், ஸ்ரீ கரிவரத ராஜர் என்பது.

இவ்வளவே, அவிநாசியப்பர் ஆலயத்திலுள்ள மண்டபங்கள், பரிவார தெய்வங்கள், சித்திரங்கள், சிற்பங்கள், தீர்த்தங்கள் முதலியன.

ஸ்ரீ சுந்தரமூர்த்தி சுவாமிகள் புக்கொளியூர் வருகையும்—அவ்வூர்க் குளத்தில் முதலையுண்ட பாலனை அழைப்பித்ததும்.

ஸ்ரீ சுந்தரமூர்த்தி சுவாமிகள் சமயாசாரியர் நால்வருளுள் ஒருவர் ஆவர். இவர் திருமுனைப்பாடி நாட்டின் கண்ணுள்ள திருநாவலூரைப் பிறப்பிடமாகக் கொண்டவர்; செந்தண்மை பூண்ட அந்தண மரபினர்; சடையனார் - இசை ஞானியார் என்னும் தாய் தந்தையர்கட்குத் தவப்புதல்வராகத் தோன்றியவர்; 'நம்பியாரூரர்' என்னும் பிள்ளைத் திருநாமம் வாய்ந்தவர்; திருமுனைப்பாடி நாட்டு அரசராகிய நரசிங்கமுனையரையரது அபிமானப் புதல்வராக வளர்ந்து

பெருகியவர்; திருவெண்ணெய்நல்லூர் 'திருவருட்டுறை' ஆலயத்து இறைவரால் மணவினை காலத்தில் தொடு வழக்கிட்டுத் தடுத்தாட்கொள்ளப்பெற்ற பேறு பெற்றவர். இறைவர்பால் எதிருரையாடி அவரால் வன்றொண்டரென்று பெயர் வழங்கப்பெற்றவர்; சிவபெருமானால் "பித்தா" என்று முதலடி யெடுத்துக்கொடுக்கத் தமிழ் மறையாகிய தேவாரம் பாடியவர்; மற்றும் புகழிற்கும் பெருமைக்கும் சிறப்பிற்கும் உறைவிடமாக விளங்கும் உத்தம மெய்ப்பத்த சிவஞானியர்.

இப்பெரியார் கி. பி. 825-ஆம் ஆண்டில் இப்பேருலகில் சோழநாட்டில் விளங்கியிருந்தபோது, மலைநாட்டின் மன்னரும், 'கோடுங்கோளூர்'ச் சிவநேசச் செல்வருமாகிய சேரமான் பெருமாணாயனாருடன் பெரு நட்புக்கொண்டு பின் அவர் நாட்டுக்குச் செல்ல நினைந்த அடிகள், சோழ நாடு நீங்கி, கொங்கு நாட்டுள் புகுந்து புக்கொளியூர் வாழ் அந்தணர்கள் தெருவழியே சென்றுகொண்டிருந்தார். புக்கொளியூர், இப்பொழுதுபோல் வெற்றிடமும் பாழுமின்றி, அப்பொழுது மக்கள் நிரம்பி மங்கலம் பல விளங்கும் பெரும் பதியாகவும், 'பொழிலாரும் சோலை', 'புரைக்காடு சோலை', 'குரங்காடு சோலை' 'புள்ளேறு சோலை' என்னும் வருணனைகளுக்குத் தகுதிவாய்ந்ததாகவும்; தண்ணிய சோலை, மலர்க்கா, குளிர்ந்த நீர் நிலைகளால் நிறைந்ததாகவும்; வேத வொலியும், ஆகுதி விளக்கமும், அறவோர் கூட்டமும் மிகுதியாக உடையதாகவும் விளங்கியது. புக்கொளியூரென்பதற்குப் பிரளய காலத்தில் தேவர் மக்கள் முதலியோர் அடைக்கலம் எனப் புகுந்து மறைந்துகொள்ளும் நல்லிடம் என்பது பொருள். இப் புக்கொளியூர், அக்காலமுதல் இன்றளவும் கொங்கு மண்டலத்தில் 'வட பரிசார நாடு' என்ற ஒருபகுதியுள் அடங்கியிருந்து வருகிறது. இப்பொழுது அது

அவிநாசித் தாலூகா பல்லடம் தாலூகாக்களின் வடமேற்குப் பாகத்தைச் சார்ந்திருக்கிறது. அங்ஙனம் ஆலாலசுந்தரர், அந்தணர் வீதிவழியாகச் சென்றுகொண்டிருக்கையில், அவிநாசியப்பர், தம் மெய்யடியாரிடத்துப் பேரன்பு சுரந்து அவரது மெய்ப் பத்தியையும், பாவீறு கொண்ட பண்பையும், பண்கெழுமிய அவரது திருப்பதிகங்கட்குச் சென்ற உயிரை மீட்கும் பேராற்றல் உண்டென்பதையும், செயற்கரிய செய்வார் பெரியாரென்பதை மெய்ப்பிக்கவும்; மக்கள் நினைக்கவும், செய்யவும், பிறர் நம்பவும் முடியாததுமான அதிசய மொன்றை அவரைக் கொண்டு இத்தலத்தில் நடாத்தவும்; அதனைச் சிறப்பாக மக்கள் உலகுள்ளளவும் மதித்து வியந்து மகிழ்ந்து கொண்டாடவும், வன்றொண்டர் மெய்ப்புகழ் முன்னினும் பன்மடங்கு பெருகிச் சிறப்பெய்தவும் நினைந்து, அவர் திருச்செவிகட்கு ஏககாலத்தில் எதிரெதிர் வீடுகளில் ஒன்றில் மங்கல ஒலியும், மற்றொன்றில் அழுகை யொலியும் கேட்குமாறு செய்தனர். அடிகள் இவ் விருவகை யொலிகளையும் திடுமெனக் கேட்டு யாதும் பேசாது வாளா தம் வழியே செல்லாமல், இறைவர் தம்மூலம் நிகழ்த்த விருக்கும் அற்புத சம்பவத்திற்குத் தாம் ஒரு கருவியாக விருக்கவேண்டியகாரணத்தைக் கொண்டு, அங்கே சற்று நின்று அவ்விருவகை யொலிகளுக்குமுள்ள ஏதுவை அறியவேண்டுமென்ற ஆவல்தோன்றி அங்கிருந்தாரை அருகிலழைத்து, "ஐயா! இஃதென்னை"? என்று மெதுவாக வினவினர். அங்ஙனம் வினவிய அடிகளுக்கு அவருள் ஒருவர், "சுவாமீ! ஐந்தாண்டுச் சிறுவர்கள் இருவர் புக்கொளியூர்க் குளத்தில் நீராடச் சென்றனர். அவர்கள் நீராடிக் கொண்டிருக்கும்போது ஒருவனை வன்முதலை யொன்று வாய்ப்பற்றிக் கவ்விச் சென்று விழுங்கியது. அது கண்ட மற்றவன் விரைந்து கரையேறி வீடு சேர்ந்தான். வீடு சேர்ந்த புதல்வனுக்கு முந்நூல் அணியும் சடங்கு நடப்பதால்

இம்மனையில் மங்கல ஒலியும்; இறந்த பிள்ளையின் பிரிவிற் காற்றாது நொந்தழும் பெற்றோர், சுற்றத்தார் தம் அழுகையொலி அம்மனையிலும் எழுந்தது என்றனர். அதுகேட்ட அடிகட்கு இறந்த பிள்ளையின்பால் பேரிரக்கந் தோன்றிற்று. இந்நிலையில் வீட்டினுள்ளிருந்த பெற்றோர்களுக்கு ஆரூரர் வருகை அறிவிக்கப்பட, அவர்கள் அழுகையை நிறுத்தி விரைந்துவந்து அவரை அடிதொழுதனர். சுந்தரப் பெருந்தகை அவர்களை நோக்கி, 'இன்பமைந்தனை இழந்தவர் நீவிரோ?' என்று வினவினர். அவர்கள் ஆம். 'அது முன்னே நிகழ்ந்தது. தேவரது திருச்சிறப்பைப் பல்லோராலும் பன்முறையுரைக்கக் கேட்டுப் பரமானந்தமடைந்து, சுவாமிகளைக் கண்டு களிக்கவும், கடிகமழ் திருவடியை வாழ்த்தி வணங்கவும் திருவருள் கூட்டுமா? என்று ஏங்கியிருந்த எங்களுக்கு அஃது இன்று நிறைவேறியது' என்றனர். அவர் தமது விநயமொழிகளைச் செவிமடுத்த தம்பிரான்றோழர், இம்மறையவர் இழந்தபிள்ளைக்கு அழுததை மறந்து நாம் இங்கு எழுந்தது குறித்து மகிழ்கின்றார்கள்; 'நான் முதலையுண்ட அப்பிள்ளையை அம்முதலை வாயினின்றும் அழைப்பித்து அவர்கட்கு அளித்தபின்னரே அவிநாசிக்குச் சென்று இறைவனை வணங்குவேன்' என்று தம்முள் சங்கற்பித்துக்கொண்டு, வெளிப்படையாக "வருந்துதலொழிமின், நுமது பாலனை நாம் முதலை வாயினின்றும் மீட்டுத் தருகின்றோம். பிள்ளை நீராடிய குளமும், முதலை பிள்ளையை வாரியுண்ட இடத்தையும் எமக்குக் காட்டுதற்கு நீவிர் எம்முடன் வம்மின்" என்று அழைத்தனர். அடிகளது அமுதமொழிகளைக் கேட்ட பெற்றோர்களும், பிறரும் "ஈதென்ன அதிசயம்! மாண்டபிள்ளையை மீண்டும் அழைப்பித்தலென்பது மகிதலத்தில் எப்பொழுதும் நிகழாததொரு அற்புதம்! இம்மொழியை நம்பி நாம் எவ்வாறு இவர் பின்



முதலை பிள்ளையுண்ட தாமரைக்குளம்.



புக்கொளியூர் ஏரிக்கரையிலுள்ள ஸ்ரீசுந்தரமூர்த்தி சுவாமிகள் ஆலயம்.

தொடர்வது" என்று அவர்கள் யாரும் மாறுகூறாது, அடிக ளது தோற்றம், கருணைததும்பும் கண்கள், சொற்களில் கலந்து வெளிவரும் ஜீவசக்தி, எவரையும் ஏவல்கொள்ளும் முகவசீகரம் ஆதியவற்றால் மருண்டு, மந்திரசக்தியால் கட் டுண்ட பாம்பைப்போல் யாதும் கூறாது, அடிகளைப் புக் கொளியூர்க் குளத்திற்கு அழைத்துச்சென்று பிள்ளை நீரா டிய இடத்தைக் குறிப்பிட்டுக் காட்டினர்.

நாவலர் பெருந்தகை, ஆங்கு அவிநாசியப்பரை அகத் துள் நினைந்து, 'ஐயனே! ஆரருட்டுய்யனே! நாயேன் நமது மெய்யடியே தஞ்சமென்று முழுதும் நம்பி வாழும் இயல்பினன் என்பதும், நமது மெய்த்தொண்ட ஞக விளங்கும் பேறுபெற்றவன் என்பதும், நம் திருவுளம் அறிந்த செய்தி. இப்பொழுது எளியேனது நினைவையும், சங்கற்பத்தையும் உணர்ந்து, தேவர் திருவுளம் உவந்து அவற்றை நிறைவேற்றி அருளல்வேண்டும்' என்று உள்ளன் புடன் கோரி விண்ணப்பித்துத் தமிழ்மறை கமழும் தமது திருவாயால் குறிஞ்சிப் பண்ணில்,

"எற்றான் மறக்கேனெழுமைக்கு மெம்பெருமானையே
உற்றுயென் றன்னையே யுள்குகின் றேனுணர்ந் துள்ளத்
புற்று டரவா புக்கொளி யூரவி நாசியே [தாற்
பற்றாக வாழ்வேன் பசுபதியே! பர மேட்டியே"

என்று பாடத் தொடங்கி, "வழிபோவார் தம்மோடும்" "எங்கேனும் போகினும்" என்ற பாடல்களையும் பாடி, நான்கவதாகிய,

"உரைப்பா ருரையுகந் துள்கவல் லார்தங்க ளுச்சியாய்
அரைக்கா டரவா வாதியு மந்தமு மாயினுய்
புரைக்காடு சோலைப் புக்கொளி யூரவி நாசியே
கரைக்கான் முதலையைப் பிள்ளை தரச்சொல்லு காலனையே'

என்ற திருப்பாசுரத்தைப் பாடியதும், இறைவர், சிவஞானிகள் வேண்டியதை வேண்டியவாறே ஈந்தருளவேண்டிய கடப்பாட்டின்படி அவர் காலனை நினைக்க, காலாந்தகனுகிய நமன், மனோவேகத்தினும் மிக்க கதியில் முன்னர் முதலையால் விழுங்கப்பட்ட அப்பிள்ளையைக் கொடிய கராவின் வயிற்றிலே வளர்ந்திருந்தா னென்னும்படி அதன் வயிற்றிலே தோற்றுவிக்க, அந்தப் பருமுதலையும் கரையிலே யொதுங்கி, யாவருங்காணத் தனது விரிந்த வாயினின்றும் அந்தணச்சிறுவனை உமிழ்ந்து நீரினுள் மறைந்தது. சிறுவனும் விழித்தெழுந்தவனைப்போல் தன்னெதிரில் தன் பெற்றோர்களும், மற்றோர்களும் கூட்டமாகக்கூடி ஒரு பெரியாரைச்சூழ்ந்து தன் வரவின்பொருட்டு நின்றிருப்பதாகக் கருதினன். அந்நிலைமையில் தமது அருமைப்பிள்ளை யிருப்பதாகக் கருதிய அவனது தாய், விரைந்தோடிக் கண்ணிழந்தான் கண்ணைப்பெற்றது போலவும், வறுமையுற்ருன் புதையலெடுத்தது போலவும் மகிழ்ந்து பாலனை இருகையாலும் வாரியெடுத்துமார்புடன் அணைத்து உச்சிமோந்து உவகைக்கடலுள் ளாழ்ந்து, பின் தெளிவுற்று, உயிரளித்த வள்ளலாரது பொன்னுர்ந்த திருவடிகளில் தன் புதல்வனை வீழ்த்தித் தானுந் தன் தலைவரும் வீழ்ந்து பணிந்தாள்! இப்புதுமையை அங்குச் சூழ்ந்துநின்ருர் யாவருங்கண் டதிசயித்து இதற்கு இன்னது தான் உவமானங் கூறுவதென் றறியாது, உன்மத்தராய் ஊமர்நிலையி லிருந்தனர். இதனிடையில் தமிழ்நாதன் எஞ்சிய ஆறு திருப்பாசுரங்களையும் பாடத்தொடங்கினர். யாவரும் மௌனமாய் நின்று பக்திசிரத்தையுடன் அவைகளைக் கேட்டுக் களித்தனர். அப்பாடல்கள் —'**அரங்காவ தெல்லாம்**', '**நாத்தானு முன்னைப்பாட**', '**மந்திகடுவேனுக்கு**' '**பேணுதொழிந்தேன்**', '**ஈள்ளாறுதெள்ளாறு**' '**நீரேறவேறு**' என்பன. பின்னர்அங்கு குழும்மியிருந்தோரும் ஆரூர்தம் திரு

வடிகளில் தமது சென்னியுற வணங்கி அவரது பேராற்றலைப் பெரிதும்புகழ்ந்தனர். அங்ஙனம் புகழ்ந்தாருக்கு அடிகள், 'உங்களேயும், எம்மையும் ஆட்கொண்டருளும் ஆதிமுதல்வனும், அருட் கடலுமாகிய அவிநாசியப்பரின் திருப்பெருங்கருணைச் செயலால் இது நிகழ்ந்ததேயன்றி, எம்மால் நிகழ்ந்ததே யல்ல. நாம் அனைவரும் பிழைத்தெழுந்த இப்பாலனை அழைத்துக் கொண்டு, எக்காலத்திலும் விநாசமில்லாததால், அவிநாசி யென்று பெயருடைய தலத்தை அடைந்து, ஆங்கு ஆலயங் கொண்டருளும் பெருமானைத் தரிசித்து மகிழ்வோம் வாருங்கள்' என்று அவர்களை உடன் அழைத்துக்கொண்டு திருக் கோயிலடைந்து முறைப்படி வணங்கித் தரிசித்தனர். அடிகளார்மட்டும் குழைந்த அன்பில் மெய்சிலிர்ப்ப, நாக் குளற, உரைதடுமாற, கண்ணீர்வார, உச்சிமேல் கூப்பிய கையராய் நின்று, என்பும் உருகுமாறு, 'எந்தையே! என்னை யாட்கொண்டருளும் தேவனே! யான் குறையிரந்து வேண் டியவாறே நிறைவேறுமாறு அருள்புரிந்த நமது அருட் டகைமையை எவ்வாறு புகழ்ந்து கூறவல்லேன். நும் திரு வடி என்றும் வாழ்க'வென்று வாயார வாழ்த்திப் பெம்மான் எம்மானிடம் பிரியா விடைபெற்று அப்பிள்ளையின் மனைக்கு அவர்களோடு எழுந்தருளினர். அன்றே அப்பாலனுக்கும் பூணுநூலணிவிக்கும் திருச்சடங்கை முறைப்படி சிறப்பாக நிறைவேற்றி அப்பாலனுக்கு ஆசீர்வாதம்செய்து அவர்க ளிடம் அன்புடன் விடைபெற்று, சேரமான்பெருமாணய னைக்காணக் கொங்குநாடுநீங்கி வழியிலுள்ள கற்சுரங்களை யும் கான்யாறுகளையும், நெடுங்கானகங்களையும் கடந்து, சேர ரது திருநாட்டைச் சென்றடைந்தனர் என்பது வரலாறு.

இனிச் சுவாமிகள் நிகழ்த்திய அதிசய சம்பவத்தின் உண்மையை ஆராய்வாம்.

திருப்புக்கொளியூரில் ஸ்ரீ சுந்தரமூர்த்தி சுவாமிகள் முதலைவாயினின்றும் இறந்துபோன பிள்ளையைத் திருப்பதிகம் பாடி வரவழைத்த சம்பவம் இயற்கைக்கு விரோதமான தென்றும்; உடலினின்றும் பிரிந்த உயிர், ஒருவர் பாடிய பதிகத்தால் மீண்டும் உடம்போடுகூடி வருவதும், அதிலும் அன்றுவரை வயது நிரம்பி வருதல் இயலாதகாரியம் என்றும், அது நம்பமுடியாத செய்கை யென்றும், இக்காலத்து ஆங்கில நாகரிகத்தில் அழுந்தி அதன் மூலம் அறிவுநிரம்பப்பெற்ற ஆராய்ச்சிவல்லார்கள் சிலரும்; தங்கள் நாட்டுப் பழைய செய்திகள் எதிலும் பிழைகூறுவதே தாங்கள் கற்ற கல்வியின் முறை யென்று கருதிக் குற்றங்கடிந்து குறைபெய்து வாசித்தல் நல்லறி வாளர்கடன் என்பதையும் ஓராது, அங்ஙனம் உணர்ந்து நடப்பது தாங்கள்கொண்ட கொள்கைக்கு முரணுமென்றெண்ணி முதலை தன் ஆகாரத்தின்பொருட்டு ஓர் உயிரைக்கொன்று அதன் உடலைவிழுங்கிச் சீரணித்ததை, மூன்றுஆண்டுகள் கழித்து அதே முதலை வாயினின்றும் மீண்டும் உயிரும், உடம்புங்கொண்டு வெளி வருதல் இயற்கை முரணும், இயலாத காரியமுமா மென்று சிலரும்; பௌதிகசாத்திரம் கற்றவர்களும் பெருவழக்கிட்டு வாதம் புரிகின்றனர்.

நிறைமொழிச் செல்வரும், மெய்ப்புலமை வல்லாரும் இறைவன் திருவருள் சிறக்கப் பெற்றவரும், சிவாநுபூதி மகானும், சமயகுரவருள் ஒருவருமாகிய நமது ஸ்ரீவன்றொண்டர், ஏனையோரைப் போன்றவரல்லர். சீவன் முத்தராதலின் நினைத்ததை நினைத்தவாறே செய்யவல்ல பேராற்றல் வாய்ந்தவர். இவர்தம் பிற செயல்களால், இவர் பேராற்றல் வாய்ந்த பெரியார்தாமென்பதை எவரும் மறுக்க முந்தார். அடிகளுக்குரிய அகச்சான்று புறச்சான்றுகளை நன்கு ஆராய்கின்றவர்கள், அவர் மாபெருந் தொண்டர், அவர் எதனையும்

தட்டின்றிச் செய்யவல்ல தெய்வத்தன்மை வாய்ந்தவர் என்ற முடிவுக்கே வருவர். அவ்வகையில் அடிகள் நிகழ்த்திய அற்புதச் செயலையும் நம்பாதொழியார். 'கடவுள் உயிருக்குத் தோன்றி அருள் செய்யார்' என்னும் கொள்கையுடையாரே இதனை நம்பாதிருக்கலாம். இறைவன் உயிருக்குத் தோன்றி அருள்செய்வது உயிர்களின் பரிபக்குவத்திற்கேற்ற செயலேயாகும். இதனை மறுக்கத் துணிபவர்களே இச்சம்பவம் நம்பத் தகுந்ததல்ல வென்று நாட்டுதற்கு முந்துவர். இதனைக் கருதாவிடத்து ஸ்ரீ சுந்தரமூர்த்தி சுவாமிகள் நிகழ்த்திய சம்பவத்தை ஆராய்கின்றவர்கள் அவ்வடிகள் இறைவர் தந் திருவருள் சிறக்கப்பெற்றவர் என்பதை நம்பாதிருத்தற்கு வேறு ஏதுக் காட்டமுடியாத வர்களேயாவர்.

ஸ்ரீ திருநாவுக்கரசர், ஸ்ரீ ஞானசம்பந்தர், ஸ்ரீ மாணிக்கவாசகர் முதலிய பேரடியார்கள், தமது புகழ் நாட்டுதற்பொருட்டு அற்புதங்கள் செய்திலர். தமக்கு உயிர்கள்பாலுள்ள இயற்கையான பெருங்கருணையாலே பிறவுயிர்கட்குப் பேருதவி செய்யக் கருதியவிடத்து அவர்கள் கருதிய வண்ணமே கடவுளுடைய திருவருள் அவர்கட்குத் துணைநின்று அதிசயிக்கத்தக்க அற்புதங்களை நிகழ்த்திற்று. அற்புதங்களை இயற்கை விரோதம் என்பார் ஒடுங்கிய ஆராய்ச்சியுடையோராவர். உலகத்தையும், உயிர்களையும் ஆண்டருளும் ஒரு தனிமுதல்வனது திருவருளினலே நிகழக்கூடாதன யாவுள? பேரன்பினல் வழிபடும் மெய்யடியார்களுக்கு அவர்கள் வேண்டியவாறே கடவுள் வேண்டியதை அளிப்பர். உடலில் உயிர் நிற்பதும்; அதனை நீத்துப் பிரிதோரிடத்துக்குச் செல்வதும்; அங்கு நின்று மீழ்வதும் இறைவனது கட்டளைப்படியே ஆமென்று நம்புவோர் சென்ற உயிரை அவனது திருவருளால் மீட்பித்தல் முடியாத காரியமென்று கொள்ளமாட்டார். பேரன்பில்லாதவர்களுக்கு அவர்கள்

விரும்பியவாறு இறைவன் அருள் செய்யாத காரணத்தைக் கொண்டு, பேரன்பர் தம் திருவருட்பேற்றினை மறுத்தல் குற்றமாம்.

> ‘ஆட்பாலவற்கருளும் ஆதியும்; ஆதிமாண்பும்
> கேட்பான் புகில் அளவில்லை’

என்றவண்ணம் அவரவர் அன்பின் திறத்திற்குத்தக்கவாறே இறைவர் வெளிப்பட்டு அருள்செய்வர். பலமக்கட்குத் தந்தையாகிய ஒருவர், தம்மக்கள் எல்லாரிடத்தும் ஒத்த கருணையுடையார் எனினும், அவரவர் செயலுக்கும், அறிவிற்கும், ஆற்றலுக்கும்ஏற்ப அவர், அவர்கட்குவேண்டியவற்றை உதவுவதுபோல் இறைவரும், எல்லாவுயிர்களிடத்தும் ஒத்த கருணையுடையவராயினும், பக்குவத்திற்கேற்றவாறு வெவ்வேறு உயிர்கட்கு வெவ்வேறுமுறையாக அருளைச்செய்வர். உலகத்திலேசெல்வம், ஆயுள்: உடல்வலி முதலியவற்றை வெவ்வேறு உயிர்கட்கு வெவ்வேறுவிதமாக அளித்துள்ளார். அவைபோல், ஸ்ரீ சுந்தரமூர்த்தி சுவாமிகட்குச் சென்ற உயிரை மீட்பித்தல்; எண்ணியதை எண்ணியவாறு நிறைவேற்றுதல் ஆகிய அற்புத சக்தியை அளித்துள்ளார். இவ்வுண்மை யுணராது வன்றொண்டராகிய அடிகள், இறந்தபாலனை முதலைவாயினின்றும் மீட்கவில்லை யென்று சொல்வதும், எண்ணுவதும் நுண்ணறிவுடையார் செயலாகா.

இயற்கைச் சட்டங்கள் அனைத்தையும் தாம் அறிந்துவிட்டதாக எண்ணி, அச்சட்டங்களுக்கு மாறாக அற்புதம் நிகழமுடியாது என்று கூறுதல் ஆராய்ச்சிக் குறைவேயாம். தீ எந்த இடத்தில் இருந்தாலும் புகையிருக்கவேண்டுமென்றால், மின்சாரவிளக்குப் புகையாமைகண்டு அவ்வொளி தீயின் ஒளி அல்லவென்று கூறுதல் எவ்வாறு தவறிய கொள்கை ஆகுமோ அவ்வாறே இறந்தஉயிர் மீள்வதில்லையென்ற அநுபவத்தைக்

கைப்பற்றிக் கடவுள் திருவருள்கொண்டு இறந்த உயிரை மீட்பித்தல் கூடாதென்று கூறுதல் பிழைபட்ட கூற்றாகும். இக்காரணங்களால், ஸ்ரீ சுந்தரமூர்த்தி சுவாமிகளாகிய மெய்யடியார் அற்புதங்கள் நிகழ்த்தவில்லையென்று கூறுதலும் ஆராய்ச்சிக் குறைவேயாகும். இவ்வாறே அவர் வரலாற்றின் ஆராய்ச்சியால் எழும் தடைகட்கெல்லாம் விடைதேடிக்கொள்ள முயலாது விஷயத்தை வாசித்த அளவிலேயே தமக்குத் தவறு என்று தோன்றுவதை உண்மைத் தவறென்றே கொள்ளுதல் ஆராய்ச்சிக்காரர் தவறேயாம். இக்காலத்தில் ஆராய்ச்சியென்ற பெயரால், பலர் தத்தமக்குக் குற்றமாகத் தோன்றுவதையெல்லாம் உண்மையாகக் குற்றமென்றே சாதிக்க முயலுகின்றனர். உள்ளத்தெளிவோடு நுணுகி ஆராயும் முறையானது நாளடைவில் வளர்ந்தோங்குமாயின், இவ்வாராய்ச்சிக் குற்றங்கள் இல்லாதொழியும். இவ்வகை ஆராய்ச்சிக் குறைவினால் ஏற்படும் சமயப் பழிப்பும், பெரியாரைப் பழித்தலும் ஆராய்ச்சி இன்மையால் வரும் மூடநம்பிக்கையும், சரித்திரக் கண்ணின்றித் தவறாகப் பொருள் கொள்ளப்படும் முறையும், நடுநிலைபற்றிய உண்மையான ஆராய்ச்சி நிலைபெறுமாயின், நாம் நமது சமயப் பெரியார்கள் நிகழ்த்திய அற்புதங்களும், மெய்ப்புலமைவல்லார் தமது வசகவி சக்தியால் காட்டிய அதிசயங்களும் உண்மையென்றே கொள்ளக் கூடிய ஆஸ்திக புத்தி உரம் பெற்று விளங்கக்கூடும்.

மேற்காட்டியவையேயன்றி, சுவாமிகள் முதலைவாய்ப் பிள்ளையை அழைப்பித்த அரிய சம்பவத்தை மற்றொரு வகையாலும் உறுதிப்படுத்த சிறந்ததோர் ஆதாரமுள்ளது. அது, மாபெரும் புலவரும், சிவஞானச் செல்வருமாகிய துறைமங்கலம் **ஸ்ரீ சிவப்பிரகாச சுவாமிகள்,** திருவாய்மலர்ந்த '**நால்வர் நான்மணிமாலை**'யிலுள்ள திருப்பாட்டேயாகும். அப்பாட்டும், பாட்டுக்குரிய பொருளும் ஆழ்ந்ததோர் தத்து

வத்தைத் திறமையாக விவரிக்கும் உயர்வுடையன. அவ்வுண்மை ஊன்றி உணர்வார்க்குத் தெற்றெனப் புலனாகும். அவை வருமாறு :—

"வாங்குசிலை புரையுமுட லெனுங்குளத்தின் மூலமலமெனுமோர்
வெங்கரவின் பகுவாயி னின்றுந்
தீங்கிலுயி ரெனும்பனவக் குலமகனையாதி திரோதாயி யென்னு
மொரு வெந்திறற் கூற் றுவனா
லோங்குறுநா தாந்தமெனப் பெயரியவக் கரையி லுமிழ்வித்துச்
சிவமெனுமோர் தந்தையொடுங் கூட்டாய்
கோங்கமுகை கவற்றுமிள முலைப்பரவை மகிழக் குண்டையூர்
நென்மலைமுற் கொண்ட வருட்கடலே."

பொருள்

கோங்கின்மலரும் பருவதது அரும்புபோன்ற இளைய தனத்தையுடைய பரவையார் மனமகிழும்படி, குண்டையூர் கிழாரால் நென்மலையைப் பெற்று அளித்த அருட்கடலாகிய ஸ்ரீ சுந்தரமூர்த்தி சுவாமிகள், வில்லைப்போல் வளைந்து குற்ற முடைத்தான தேகம் என்னும் தடாகத்தில், மும்மலம் என்னும் வெவ்விய முதலையின் பேழ்வாயினின்றும், குற்றமற்ற சீவன் என்னும் அந்தணச் சிறுவனை 'ஆதித்திரோதாயி' என்னும் வெவ்விய வலிமைமிக்க நமனாலே, பெருமை பெற்ற நாதாந்தம் என்னும் குளக்கரையிலே உமிழ்வித்துச் சிவம் என்னும்அப்பிள்ளையின் தந்தையோடுசேர்ப்பித்தாரென்பது.

அதாவது, சற்குரு மூலமலத்தினால் இவ்வுடலில் பிணைக்கப்பட்ட ஆன்மாவைத் திரோதாயினால் விடுதலை செய்வித்துச் சிவத்தோடு கூட்டுவித்தருளினார் என்ற தத்துவார்த்தம் இதனில் தெளிவாகப் பெறப்படுதல் காண்க.

மற்றும், சிருஷ்டிக்காலத்திலே உலகமும், அதனுள்ளடங்கிய சகலபொருள்களும் ஒடுங்கியிருந்தவை உருப்பெற்

றுத் தோன்றுதலடையுமென்பது பௌதீக தர்க்கசாஸ்திரிகள் யாவரும் ஒப்புக்கொள்ளும் உண்மையாகும். வஸ்துக்கள் உருவழிந்தபோதிலும் நாசம் அடைவதில்லை யென்பது பௌதிகசாஸ்திர உண்மைகளில் ஒன்றாகும். ஆகவே, ஒரு காலத்தில் உருவழிந்து சென்றொடுங்கிய அந்தணச் சிறுவன் "மற்றொரு காலத்தில் ஏகதேசத்திலே சிருஷ்டிக்கிரம நியாயம் பற்றி மீண்டும் மாயையிலிருந்து உருப்பெற்று வரவும் முறைமையுண்டு. ஆகையால், அந்நிகழ்ச்சியை இந்த நியாயத்துடன் பொருந்திப் பார்ப்பது குற்றமாகமாட்டாது.

பின்னும், 'உலகில்தோன்றும் பருமை உடம்பிற்கு உள்ளீடாகச் சூக்குமதேகம் என்னும் நுண்ணுடம்பு உயிருடன் பிரியாதிருக்குமென்பது, இறந்தமக்கள் ஆவியைப்பற்றி ஆராய்ச்சி செய்யும் மேனாட்டுப் புலவர் பெருமக்கள் அறிந்த உண்மை.

நுண்ணுடம்பே பிறிதோருடம்பெடுத்துப் பிறத்தற்கு மூலமாயதென்பது மறுபிறப்புக்கொள்கை யுடையார் துணிபு.

பூதங்களின் சேர்க்கையினாலேயே நுண்ணுடம்பு பருவுடம்பாய்ப் பருணமிக்கும். ஆதலானும்; 'முனி கருப்பம் இராத்தங்காது' என்பதற்கிணங்கப் பொதுவாகப் பத்து மாதத்தில் உருவெடுத்தற்குரியன சிறப்பான இயற்கைச் சத்திகளின் வலிமையால் மூன்றேமுக்கால் நாழிகையில் உருவெடுத்தல்போல, பூதங்களின் சேர்க்கையால் இறைவன் ஆணையின்படி நிற்கும் அயன், பூத உடம்பினைப் படைத்தல் கூடுமாதலானும், முதலை முதலிய எவ்வுயிரும் இறைவன் கட்டளைக்கு அடங்கியதாகலான், முதலை பிள்ளைக்குத் தீமை செய்யாது உமிழ்தல் கூடுமாதலானும், முதலைவாய்ப் பிள்ளையை அழைத்தல் நிகழ்ந்திருத்தற்பாலதென்றே இறைவன் பேரருட்டிறமும், அடியார் பெருமையும் உணர்ந்தவர்கள் பெரிதும் நம்பத்துணிவர். இன்னுமொருவகையாலும் இச்

சம்பவம் உண்மைதானென்பதை நிலைநாட்டுதற்குரிய ஆதாரத்தையும் கவனிப்பாம். அது அணிமா, மகிமா, லகிமா, கரிமா, பிராப்தி, பிராகாமியம், வசித்துவம், ஈசத்துவம் என்னும் எண்வகைச் சத்திகளாம். இவற்றில் "ஈசத்துவம்" என்ற சித்தியின் தன்மையைப்பற்றிச் சிறிது கூறுவாம்:

ஈசத்துவம் என்பது கடவுட்டன்மைபெற்று ஆக்கல், அளித்தல், அழித்தல், மறைத்தல், அருளல் என்னும் ஐம்பெருஞ்செயல்களைப் புரிதலேயாம். எல்லாம் வல்ல இறைவன் எவ்வாறு உயிர்களை உடலிற்புகுத்தி அவரவர் இருவினையை அவரவர்கட்கு ஊட்டி, வினைநீக்கி, அடியவராக்கி அவர்களை முத்திக்கரையில் முன்னுறச் சேர்ப்பிப்பானோ, அவ்வாறே அவன் அருள்பெற்ற பேரடியார்களும் அவனுக்குரிய ஐம்பெருந்தொழிலையும் அவனருள்பெற்று இயற்ற வல்லவராவர். அவ்வைம்பெருந் தொழில்கள்:—

(1) ஆக்கல்

மூவாண்டிலே ஞானப்பாலுண்டு அருள்பெற்ற பெரியாராகிய திருஞானசம்பந்தப் பிள்ளையார், திருமயிலாப்பூரில் 'பூம்பாவை' என்னும் பெண்ணின் எலும்புக்கு உயிர் கொடுத்ததோடும் அமையாது, அவர் சிவபெருமான் திருவருளால் அப்பெண்மணியைச் சின்னாளளவும் அவ்வுடலோடு வாழச் செய்தனர் என்பது. இதுவே ஆக்கல்.

(2) அழித்தல்

ஒரு சமயம் ஞானசம்பந்தரே தமக்குரிய விருதுவரிசைகளோடு தெருவில் எழுந்தருளிவருகையில் 'புத்தன்' என்னும் பிறசமயத்தன் பொறுமையுள்ளத்தால் வெதும்பிச் சீற்றங்கொண்டு அப்பெரியாரது விருதுச்சின்னங்களைத் தடுத்து நின்றனன். அதுகண்டு பொறுத ஞானசம்பந்தர்,

இறைவனை நினைந்து புத்தன் தலையில் இடிவிழுமாறு பிரார்த்தித்தனர். அவர் பிரார்த்தனை பொய்யாதபடி இறைவன் புத்தன் தலையில் இடிவிழச்செய்தனர். அவன் உயிர்துறந்து மாண்டான். அதுவே அழித்தல் என்பது.

(3) படைத்தல்—காத்தல்

முதலையுண்ட பாலனை மூவாண்டிற்குப் பின் அழைப்பித்து அவனை நெடுநாள் உலகில் ஜீவித்திருக்கும்படி செய்த திருவிளையாடலே படைத்தலுக்கும் காத்தலுக்கும் போதிய சான்றும்.

(4) மறைத்தல்

ஞானத்தை மறைக்கும்படிசெய்து இருவினைப்பயனை நுகர்விப்பது மறைத்தலின் இலக்கணம். திருவாசகம் அருளிய மணிவாசகனார் திருப்பெருந்துறையை நண்ணி அருட்கடலாகிய ஐயன் திருவருள் நாடி ஆலயத்தை வலம்வரும்பொழுது குருந்த மரத்தடியிலே சிவபெருமான் தமது அடியார் கூட்டத்தின் நடுவில், ஞானசிரியராக எழுந்தருளியிருந்து, அவர்கட்கு அருள்மொழி கூறி ஆட்கொண்டு, 'மாணிக்கவாசகா!' என்று திருவாய்மலர்ந்தருளினரன்றோ! அப்போது மாணிக்கவாசகர் இறைவனிடத்து ஈடுபட்டு அன்புமயமாகித் தான் என்றும், இறைவன் என்றும், வேறுபாடுணராது, வீட்டின்பநுகர்ச்சியில் பூரித்திருந்தனர். இறைவர் மாணிக்கவாசகரை அந்நுகர்ச்சியினின்றும் நீக்கித் தக்ககாலம் வருமளவும் அவரை இருவினைப் பயனை அடையும்படி உலகில் புகுத்தினர். அதுவே மறைத்தல் என்பது.

(5) அருளல்

பாசத்தளையில் கட்டுண்டு இறைவன் அருள் நாடி நிற்கும் உயிர்களை அவ்விறைவனது திருவடி இன்பத்தைப்

பெறச் செய்தலாம். இதற்குச் சான்று ஸ்ரீ ஞானசம்பந்தப்
பெருந்தகையார் தமது திருமணம் காணவந்த அனைவரை
யும் திருப்பெருமணமாகிய திருக்கோயிலிலே தோன்றிய
பேரொளியினுள்ளே செலுத்தி அவர்கள் யாவரையும் வீட்
டின்பம் பெறும்படி அருள்செய்த திருவிளையாடலாம்.
இதுவே அருளல் என்பது.

இச்சித்திகள், இறைவன் திருவடிக்கு மெய்யன்பு
செலுத்துகின்ற உண்மை அடியவர்பால் தாமாகவே தோன்றி
விளங்கும். இறைவன், சிவஞானிகள் வேண்டியதை வேண்
டியவாறே ஈந்தருள்வன். சிவஞானிகள், தம் பொருட்டு எத
னையும்வேண்டார். புகழ்நாட்டுங் கருத்துடன் அவர்கள் அற்பு
தங்கள்செய்வதில்லை. திருவருள் வழிநின்று உயிர்களின்பால்
வைத்த பெருங் கருணையினாலே அவர்கள் அற்புதச் செயல்
களை நிகழ்த்துவர். 'முத்தர்', 'சித்தர்' என்ற இருவகை
யாருள், சிவஞானிகளென்பார் முத்தர்; சித்தரினும் முத்தர்
சிறந்தோராவர். அம்முத்தர்கள் ஏனைய ஜீவர்களிடத்து இயல்
பாகக் கொண்டுள்ள அருட்செய்கையினால் அவ்வப்போது
அவ்வுயிர்களைக் காப்பதற்கு இச்சித்திகள் பிறர்கண்டு அதி
சயிக்கும்படி விளைவிப்பார்கள். அங்ஙனம் பேரிரக்கத்
தால் நிகழ்ந்த அருட்பெருஞ் செயலே, திருப்புக்கொளியூரில்
முதலை வாய்ப் பிள்ளையை அடிகள் வரவழைத்ததாம்.

இறுதியாக இன்னுமோர் உதாரணத்தையுங்காட்டி இவ்
விஷயத்தை முடிப்பாம். அது, தெய்வத்தமிழுக்கே மாண்ட
உயிரை மீட்பிக்கும் பேராற்றல் உண்டென்பதை மெய்ப்பிப்
பது. இதற்குப் பல சான்றுகளிருக்கின்றன. அவற்றுள்
ஒன்றைமட்டும் இதன்கீழ்க் காட்டுவாம்:

"தொண்டர் நாதனைத் தூதிடைவிடுத்ததும்; முதலை
யுண்டபாலனை யழைத்ததும்; எலும்புபெண் ணுருவாக்

கண்டதும்; மறைக்கதவினைத் திறந்ததும்; கன்னித்
தண்டமிழ்ச் சொலோ! மறுபுலச்சொற்களோ! சாற்றீர்".

(திருவிளையாடற்புராணம்.)

இதுகாறுங் கூறியவாற்றால், முதலையுண்ட பாலனை வரவழைத்தது உயிர்கள்பாற்கொண்ட பேரிரக்கத்தால் நிகழ்ந்த அதிசயச்செயலென்றும்; சீவன்முத்தர்கள் இறைவரின் திருவருள்கொண்டு ஐம்பெருந்தொழிலையும் செய்யவல்ல பேராற்றலுடையவர்களென்றும்; திருத்தமிழ்ப் பாட்டுக்குச் சென்ற உயிரை மீட்பிக்கும் தெய்வத்தன்மை யுண்டென்றும்; ஜீவகாருண்யம் மிக்க சைவப் பெரியார்களுடைய அரும் பெரும் ஆற்றல்களை ஆராய்ந்துணராமலே மானிடசக்திக்கு மீறிய செயல்களைச் செய்ய அவர்களால் இயலாதென்று வாய்மதம்பேசுவது அறியாமையின்பாற் படுமென்றும் தெளியப்படும்.

இனி, அடிகளால் நிகழ்த்தப்பெற்ற அதிசய சம்பவத்தைப் பிற்காலத்துத் தோன்றிய நூலாசிரியர்கள் பலர் தத்தம் நூல்களில் எடுத்தாண் டிருக்கின்றனர். அவைகளை விரிக்கிற் பெருகும். விரும்புவோர் அடியிற் குறிப்பிடும் நூல்களிற் கண்டு கொள்க. அவை:—1 பெரியபுராணம். 2 திருவிளையாடற்புராணம், 3 பேரூர்ப் புராணம், 4 திருமுருகன் பூண்டிப் புராணம், 5 அவிநாசித்தலபுராணம், 6 திருத்துடிசைத் தலபுராணம், 7 காசிகாண்டம், 8 பதினொராந்திருமுறை, திருத்தொண்டர் திருவந்தாதி, 9 நால்வர் நான்மணிமாலை, 10 திருக்களிற்றுப்படியார், 11 திருப்புகழ், 12 திருவருட்பா அருண்மாலை, 13 சுந்தரமூர்த்திகள் தேவாரம், 14 அவிநாசிப் பெருங்கருணாம்பிகை பிள்ளைத்தமிழ் என்பன.

இப்பொழுது புக்கொளியூர் ஏதோ ஒரு துர்க்குறியால் அழிந்து போனதெனினும், முதலை பிள்ளையுண்ட ஏரிக்கரை

இன்றும் அழியாமலே யிருக்கிறது. இவ்வேரிக்கரையில், "புக்கொளியூரவிநாசியே! கரைக்கால் முதலையைப் பிள்ளை தரச்சொல்லு காலனையே" என்று திருப்பதிகம் பாடிய ஸ்ரீ சுந்தரமூர்த்தி சுவாமிகட்கு ஒரு சிற்றாலயம் இருக்கிறது. அவ்வாலயம் இன்றும் நல்ல நிலைமையிலே பரிபாலிக்கப்பட்டு வருகிறது. அவ்வாலயத்தில் ஸ்ரீ சுந்தரமூர்த்தி சுவாமிகளது திருவுருவம் பிரதிஷ்டிக்கப்பெற்று ஆராதனை நடைபெற்று வருகிறது. இக்கோயிலில் முதலையின் வடிவம் கல்லிலும், செம்பிலும் செய்து வைக்கப்பெற்றிருக்கின்றன. பங்குனி மாதம் மகநட்சத்திரத்தில் துவாதசித் திதியில், ஸ்ரீ சுந்தரமூர்த்தி சுவாமிகள் முதலைவாய்ப் பிள்ளையை அழைப்பித்த உற்சவம் ஒருவகை வேளாளச் செட்டியாருள், திருவாளர் மு. தர்மலிங்கஞ் செட்டியார் என்பவரால் ஆண்டுதோறும் அவர்தம் சொந்தச் செலவில் நடாத்தப்பட்டு வருகிறது.

இவ்வளவே, ஸ்ரீசுந்தரமூர்த்தி சுவாமிகள் புக்கொளியூர்க் குளத்தில் முதலைவாய்ப் பிள்ளை அழைப்பித்த இனியசெய்தி.

பிரம்மோற்சவமும், பிறவுற்சவங்களும்—அவை நிகழும் காலங்களும்.

சோழநாடு, பாண்டியநாடு, தொண்டைநாடுமுதலிய நாடுகளில் தொன்றுதொட்டு நடைபெற்றுவரும் பிரம்மோற்சவம் மாதோற்சவம், சைவசமயாசாரியார்கள், தனியடியார்களது திருநட்சத்திர விழாக்கள் முதலியன போலவே, கொங்கு நாட்டுள்ள பாடல்பெற்ற பழம்பதியாகிய அவிநாசித் திருத்தலத்தில் ஆலயங்கொண்டருளும் பெருங்கருணையச்செல்வி சமேத ஸ்ரீ அவிநாசியப்பருக்கும், வருடந்தோறும் நிகழும்

ஆண்டுவிழாவும், மாதந்தோறும் நடைபெறும் மாதவிழாவும், சீரும் சிறப்புமாக நடைபெற்று வருகின்றன. இவ்வாலயம் கோயமுத்தூர் தேவஸ்தானக் கமிட்டியார் அதிகாரத்தின்கீழ் இருந்துவருகிறது. இத் தேவஸ்தானத்திற்கு மூன்று தர்மகர்த்தாக்கள் இருக்கின்றனர். அம்மூவரும் பழங்குடிமக்களாகிய வேளாளப் பிரபுக்களே யாவர். இத்தேவாலயத்தின் நித்திய நைமித்தியச் செலவுகளுக்கும், பிரம்மோற்சவ மாதவுற்சவத் திருநட்சத்திர விழாக்களின் செலவுகளுக்கும், வருடம் ஒன்றிற்குச் சர்க்காரால் உதவப்பெற்றுவரும் தொகை ஆயிரத்து எண்ணூற்றுப் பத்தொன்பது ரூபாய் பதின்மூன்றணு ஆறுபைசா (1819 - 13-6.) இதுவன்றி, சுவாமிதரிசனுர்த்தவரும் பக்தகோடிகள் பல்வகைத் தருமங்களாகச் செய்துவரும் காணிக்கை வகையருவிலும், உண்டியல் மூலமாகவும் பெருந்தொகை வசூலாகின்றன. இவைகளேக்கொண்டு ஆலயபரிபாலனம் செவ்வையாக நடைபெற்று வருகின்றது. இவ்வாலய தர்மகர்த்தாக்களாகத் தற்காலம் விளங்கும் வேளாளச்செல்வர்கள், இப்போதிருப்பதைவிட தெய்வகாரியம் சீராகநடைபெறுவதில் கண்காணிப்பும், திருப்பணியாதியவைகளில் கவனமும், யாத்ரீகர்களில் நல்லறிஞர்கள் கூறும் சீர்திருத்தங்களுக்குச் செவிசாய்த்து அதன்படி செய்வதில் விருப்பமும் கொள்வார்களாகில், புண்ணியமும் புருஷார்த்தமும் எய்திப் பொன்றுப்புகழிற்குப் பாத்திரமாவார்கள். மற்றும் இவர்கள், நல்லனவற்றை ஆய்ந்துணர்ந்து இயன்றளவு முடிப்பதில் கருத்தும், பேரன்பும், இரங்குநெஞ்சமும், அறம்பலபுரிவதில் ஆசையும் மேற்கொள்வார்களாயின், பொன்மலர் நாற்றமுடைத்தற் கொப்பாவர். இப்பெரியார்கள், இவற்றைக் கவனிப்பார்களென்றே நம்புகின்ருேம். இனி, பிரம்மோற்சவ - மாதோற்சவங்கள் நிகழும் காலங்களேயும், அவ்வுற்சவங்களேச் சிறப்பாகநடாத்தி

வரும் தருமசீல புண்ணியபுருஷர்களின் பெயர்களையும், யாவரும் விவரமாக அறியும்பொருட்டு இதன்கீழ் குறித்திருக்கின்றோம். அவை:—

(1) பிரம்மோற்சவம்: ஒவ்வோராண்டு அதாவது தலைமைத்திருவிழா சித்திரைமாதங்களில் பதினொருநாட்கள் சீரும்சிறப்புமாக நடைபெறும். நாடோறும் காலை மாலைகளில் ஸ்ரீ பெருங்கருணைப்பிராட்டியாரும், ஸ்ரீ அவிநாசியப்பரும் வாகனங்களிலூர்ந்து விழாக்கொண்டருள்வர். அன்பர்கள் பெருங்கூட்டமாகக்கூடித் தரிசித்து மகிழ்வர். திருத்தேர் மிகப் பெரியது. கொங்குநாட்டில்எங்கணுமே இப்பெருந்தேரைப்போல் காணமுடியாது. சுமார் 30, 40 ஆயிரம்பேர்கள் இவ்வுற்சவத்தைக் கண்டு களிக்கக் கூடுவர். பெருத்த வியாபாரம் நடைபெறும்.

(2) வைகாசி மாதம் வசந்த உற்சவம்: இது ஒவ்வோர் ஆண்டு வைகாசித்திங்களில் மூன்றுநாளைக்குச் சிறப்பாக நடைபெறும். இம்மூன்றுநாள்வசந்தமும், விசாகத்தில் இடபவாகனக் காட்சியும் இன்பமாக நடைபெறும். இவ்வுற்சவம் அம்மையப்பருக்குத் திருப்புக்கொளியூரில் புது நந்தனவனத்தில் புதிதாக அமைத்துள்ள வசந்தமண்டபத்தில் ஸ்ரீமத். அ. சி. சுவாமிகருணாலய மூர்த்திகள் தலைமையிலும், கோபிசெட்டிபாளையத்தைச் சார்ந்த புதுப்பாளையத்து மிராசுதாரரும், சிவநேசரும், செல்வருமாகிய ஸ்ரீமான் பி. எம். முருகண்ணகவுண்டர் அவர்கள் பொருள்சகாயத்திலும் மேலான சிறப்பில் நிகழ்ந்தேறும். இவ்வசந்தவிழாவில் மூன்றுநாட்களிலும் தமிழறிஞர்கள் பலர், தக்கார் தலைமையில் சொற்பொழிவாற்றி அன்பர்செவிகட்கு இன்பவிருந்தூட்டுவர்.

(3) ஆனி நடராச அபிஷேகம்: ஆனிமாதம் ஸ்ரீ ஆனந்தநடராசருக்கு ஓர்நாள் விசேட அபிஷேகாலங்காரங்கள் செய்து விழாக்கொண்டாடுவர்.

(4) ஆடிப் பூர உற்சவம் : ஆடிமாதம் பெருங்கருணை லயச் செல்விக்கு ஆடிப்பூரம் ஐந்துநாள் உற்சவம். இவ்வுற்சவத்தைத் தமது பொறுப்பில் நடாத்துகின்ற புண்ணியர் ஸ்ரீமான். R. இரத்தினசபாபதி கவுண்டர் அவர்கள்.

(5) ஆவணிமூல உற்சவம் : இது ஆயிரம் தலைவர்களென்ற எண்ணெய் வாணியச் செட்டியார்களது ஆதரவில் நடைபெறுகிறது.

(6) புரட்டாசி நவராத்திரி உற்சவம் : தேவஸ்தானத்தாரால் நடைபெறுகிறது.

(7) ஐப்பசி மாதம் கந்தசஷ்டி சூரசம்மார உற்சவம். பஞ்சாங்கம் பிரம்மஸ்ரீ சங்கரய்யரவர்கள் தனசகாயத்தால் நடைபெறுகிறது.

(8) கார்த்திகை தீப உற்சவம் : தேவஸ்தானத்தாரால் நடைபெறுகிறது.

(9) மார்கழி மாதம் திருவெம்பாவை உற்சவம் : நடராஜர் தரிசனக்காட்சி. ஷை

(10) தை மாதம் புஷ்ய உற்சவம் : ஷை

(11) மாசிமாதம் சிவராத்திரி அபிஷேகம் : ஷை

(12) பங்குனி மாதம் முதலைவாய்ப்பிள்ளை அழைப்பித்த உற்சவம்: இது 4-நாள் உற்சவம். கோயமுத்தூர் ஸ்ரீமான் மு. தர்மலிங்கஞ் செட்டியாரவர்களால் நடத்தப்பட்டு வருகிறது.

இவ்வளவே, இத்திருத்தலத்தில் பன்னிரண்டு மாதங்களிலும் ஆண்டுதோறும் நிகழ்ந்துவரும் உற்சவங்கள். இடையில் சைவ சமயாசாரியர்களுடையவும், தனியடியார்களுடையவும் திருநக்ஷத்திரங்கள் வரும்போது அம்மூர்த்தங்களுக்கு அபிஷேக அலங்காரங்கள் நடாத்துவிக்கப்பெற்று அடியார்கள் விருப்பம் போலவும், தகுதிபோலவும் அவை நிகழப்பெறும்.

ஊரமைப்பும்—ஜனத்தொகையும்.

கொங்குநாட்டுச் சிவஸ்தலங்களுள் முதல்வைத்தெண்ணக்கூடிய பெருமை சிறந்ததும், சைவ சமயாசாரியர்களில் சிவபெருமானது பேரன்பிற்குப் பெரிதும் உரியரான ஸ்ரீ சுந்தரமூர்த்திசுவாமிகள் திருவடி வைக்கப் பெற்றதால், புனிதம்வாய்ந்து விளங்குவதும் திரு அவிநாசித்திருத்தலம். இத்தலம் யாத்திரைவாசிகள், கண்டுகளித்தற்குத் தகுதி வாய்ந்ததென்றே கூறலாம். ஆலயத்தைச்சுற்றிலும் குளிர்ந்த தென்னஞ்சோலைகளும், அடர்ந்த பனங்காடும், நறுமணம் நிரம்பிய பூங்காவும், செந்நெல் கழனிகளும், கரும்புப்பயிர்களும் மிகுதியாகவுள்ளன. ஸ்நானபானங்களுக்கு யோக்கியமான திருக்குளங்களும், கங்கைதீர்த்தமும் இருக்கின்றன. இத்தகைய நன்னலம்வாய்ந்த இத்திருப்பதி நாற்சதுரவடிவில் அமைந்து, அகலநீளம்வாய்ந்த நான்கு தேரோடும் திருவீதிகளையும், வடக்கில் சேவூர் செல்லும் பாதையில் நீண்டதெருவையும், கீழ்மேலில் பெருந்துறை, கோபிசெட்டிபாளையம், திருமுருகன்பூண்டி செல்லும் நெடுந்தெருவையும் தன்னுட்கொண்டதாய் அழகுபெற விளங்குகின்றது. கீழ்மேல் தெருவில் அவிநாசியப்பரும், பெருங்கருணைச்செல்வியாரும் திருவிழாக்கொண்டருளும் பெருந்தேர் நிலையமும்; லோகல் பண்டு சத்திரமும், பஞ்சாயத்துக்கோர்ட்டும், கிராமச்சாவடியும், கடைத்தெருவும், காப்பிக்கிளப்பு, சாப்பாட்டு விடுதிகளும், போலீஸ்டேஷனும்,போர்டு பாடசாலையும், பஞ்சறைக்கும் ஆலைகளும், மோட்டார் பஸ் ஸ்டாண்டும், நெல் அறைக்கும் இயந்திரசாலையும், வெள்ளி தங்கநகைகள் விற்கும் ஷராப்புக்கடைகளும், தனிவணிகச்செட்டிமார்கள் பண லேவாதேவி

செய்யும் பாங்குகளும், இரும்புக்கடை மரக்கடைகளும், சப் ரிஜிஸ்டர் ஆபீசும், புதன்கிழமைதோறும் கூடும் வாரச்சந்தையும் இருக்கின்றன. கிழக்கும் மேற்கும் வீடுகளுள்ள மேற்புறம் இரத வீதியில், ஐக்கியநாணயச் சங்கங்களும், பசுமடமும், தாசில்தார் கோர்ட்டும், தாலுகா போலீஸ் ஸ்டேஷனும், ஜில்லா போர்டார் ஆதரவில் நடைபெற்றுவரும் இலவசமருத்துவ விடுதியும், மெடிகல் ஆஸ்பத்திரியும், புதிதாக ஏற்பட்ட பல தெருக்களும் இருக்கின்றன. கீழ்புறம் இரதவீதியில், தபால் தந்தி ஆபீசும், பாத்திரக்கடைகளும் இருக்கின்றன. இவையேயன்றி பழமையாகவுள்ளதும், புதிதாக ஏற்பட்டதுமான வரதராஜப் பெருமாள் கோவிலும், ஆஞ்சநேயர் ஆலயமும், காசி விசுவநாதர் - விசாலாட்சியம்மையார் ஆலயமும், அழகுநாச்சியாரம்மன் கோவிலும், வடபத்திபரகாளி சந்நிதியும் அங்காளம்மன், மாரியம்மன் கோயில்களும், காரணப்பெருமாள் ஆலயமும், காமாட்சியம்மன் சந்நிதியும், முனியப்பன், மாகாளியம்மன் கோயில்களும், ஊருக்கு வெளியில் பரிவேட்டை மண்டபமும் நாற்புறங்களிலும் அமைந்து ஊரை அழகுபடுத்திக்கொண்டிருக்கின்றன. இங்ஙனம் அமைந்த இவ்வவிநாசித்திருத்தலம் கோயமுத்தூர் ஜில்லாவில் ஓர் தாலுகாவாக விளங்குகிறது. இவ்வூரின் ஜனத்தொகை 4836 நாலாயிரத்து எண்ணூற்றுமுப்பத்தாறு. பொதுவாக இதனை ஆரோக்கியமான சுகாதார ஸ்தலமென்றே சொல்லலாம். தற்காலநாகரீக முன்னேற்றத்தின் அடையாளமாக ஊர்முழுமையும், அவிநாசியப்பர் ஆலயத்திலும், மின்சாரவிளக்குகள் போடப்பட்டிருக்கின்றன.

திருமடங்களும், தர்மசத்திரங்களும்.

கொங்கேழ் சிவஸ்தலங்களில் முதலெண் பெற்று முந்து சிறப்புடன் விளங்குவது திருஅவிநாசி. இத் திருத்தலத்தின் நான்கு பக்கங்களிலுமுள்ள தேரோடும் திருவீதிகளில் பொது தர்ம சத்திரங்களும், பல சாதியார்களுக்குரிய திரு மடங்களும், பசுமடமும், உபநயனமடமும் இருக்கின்றன. பொது தர்மசத்திரங்களிலும், லோகல்பண்டு சத்திரத்திலும், யாத்திரைவாசிகள் வந்து தங்கி சுவாமிதரிசனஞ் செய்து போக வசதியாயிருக்கும்படி செய்யப் பெற்றிருக்கின்றன. இவைகள் பணம்படைத்த செல்வர்களால், 'உடலும் செல்வமும் நிலையற்றது; இன்றிருந்து நாளை அழியக்கூடியது, செய்யும் தருமங்களே தமக்கு உறுதுணையாய் உடன்வருவது' என்று ஆய்ந்து பரோபகாரமாகக் கட்டுவிக்கப்பட்டன. இவைகள் இன்றும் நல்லநிலைமையிலே இருக்கின்றன. பலசாதியார்களுக்குரிய மடங்களில் அந்தந்த மரபுக்குரியவர்களே சாதாரணகாலங்களிலும் உற்சவ சமயங்களிலும் உற்றார் உறவினர்களுடன் வந்து தங்கிச்செல்கின்றனர். பொதுதர்ம சத்திரங்களிலாவது பலசாதியார்களுக் குரிய திருமடங்களிலாவது வயிறுகாய்ந்த ஏழைகளுக்கு ஒரு பிடி உணவுக்கு வழிகிடையாது. அவிநாசித் திருத்தலத்தில், 'நம் மரபினோர்க்குத் திருவிழாக்காலத்திலும், பிறவிசேட நாட்களிலும் தங்குவதற்குமட்டும் வசதியாக ஒரு திருமடம் இருந்தால்போதும். அதுவே சாதிக்கொரு பெருமை' என்று எண்ணும் ஒருகூட்டத்தார் இருப்பார்களாயின், அவர்களைத் தர்மம் உணர்ந்தவர்களென்றாவது அறிஞர்களென்றாவது

கூறுவதெவ்விதம் ? "அவிநாசித்தல புராணம்" முகவுரைச் சருக்கம் 20-ஆம் கவியை அவர்கள் ஒருமுறைதாங்களாகவே ஓதியிருப்பினும், ஓதினோர்கள் வாய்மொழியைக் கேட்டிருப் பினும், இத்தலத்தில் எல்லாத் தானங்களிலும் சிறந்து முதன்மைத்தானமாக விளங்கும் அன்னதானத்தைத் தங்கள் திருமடங்களில் செய்வதற்குவேண்டியவாறு ஏற்பாடுசெய்யத் தவறியிருக்க மாட்டார்கள். இதனை ஓதியபின்னரேனும் அவ்வன்பர்கள் தத்தம் மரபிற்குரிய திருமடங்களில் ஏழை மக்கட்கு அற்ப உணவேனும் சாசுவதமாக அளிக்க முந்து வார்களென்றே நம்புகின்றோம். "அருட்சேறிந்த அவிநாசி, போய்க்கலிபோமாறு மெய்க்கருள்சீரான புக்கொளியூர்" என்று பெருமைக்குரியதாய் விளங்கும் இத்திருத்தலத்தில் அன்ன தானம் செய்வோர் அடையும் பயன் மேலானதென்றும், அளப்பரிய சிறப்புடையதென்றும் கூறப்பட்டுள்ளது. அதனை அன்பர்கள் அறியும்பொருட்டே இதன்கீழ்க் குறிக்கப்பட் டுள்ளது. அச்செய்யுள் வருமாறு:—

"குருமவுனர் மருங்காசி கூறுதல மருங்காசிக்
கொழுந்து மேவு
மருமைபெறு கனதான மதிலொருவர்க் கனதான
மளிக்க மேலாந்
தருமகவா னுறவிலகுஞ் சஞ்சிதங்களுற விலகுஞ்
சைவ மூவர்
பெருமொழியும் புக்கொளியும் பேசவுடம்புக் கொளியும்
பிணிகள் யாவும்" (20)

இனி, நாற்புறங்களிலுமுள்ள தர்மசத்திரங்களும், பல சாதியர் திருமடங்களும் இருக்கும் இடங்களை யாத்ரீகர்கள் தெளிவாக உணரும்பொருட்டு அடியில் கூறுகிறோம்.

கிழக்கு இரதவீதியில்

கிழக்கிலிருந்து மேற்குநோக்கியிருக்கும் திருமடங்கள் :

1 பன்னிரண்டாஞ் செட்டியார்கள் மடம், 2 வெற்றிலைக் காரர்மடம், 3 கன்னார்மடம், 4 வேளாளர்மடம், 5 வாணியர் மடம், 6 கைக்கோளர்மடம், 7 சக்கிலியர் மடம் (இம்மடம் இப்பொழுது மறைந்து காசிவிநாயகர் திருக்கோயிலாக மாறி யிருக்கிறது.)

மேற்கு இரதவீதியில்

மேற்கிலிருந்து கிழக்குநோக்கியுள்ள திருமடங்கள் :

1 குயவர்மடம், 2 அஞ்சாலியர் மடம், 3 முடவாண்டிகள் மடம், 4 ஐஞ்ஞூற்றுன் செட்டியார்கள் மடம். 5 பசு மடம், 6 வளையக்காரச்செட்டியார் மடம், 7 ஓதுவார் மடம், 8 இரும்புக்கொல்லர் மடம், 9 சான்றூர் மடம், (சாணூர்) 10 தேவாங்கர் மடம்.

வடக்கு இரதவீதியில்

வடக்கிலிருந்து தெற்குநோக்கியிருக்கும் திருமடங்கள்: 1 பள்ளர்மடம், 2 ஒட்டர் மடம், 3 ஸ்ரீ மாணிக்கவாசகர் மடம், 4 இலேஆண்டிகள் மடம் :

தெற்கு இரதவீதியில்

1 ஊருக்குக்கடைசியில் ஊமையன்செட்டியார் மடம், 2 ஆறுமுகக் கவுண்டர் தண்ணீர்ப்பந்தல். தேர்நிலைக்கு எதிரி லுள்ள காசி விசுவநாதர்கோயில் தெருவில் 3 சூலூர் சுப்பா ராவ் மடம் 4 ஆர்யவைசிய கோமுட்டிச்செட்டியார் கன்னி காபரமேஸ்வரி மடம், அவிநாசியப்பர் ஆலயத்திற்குச் சமீபத்

தில் 5 உபநயனமடம் 6 சேவூர் பாங்கர் வேங்கடராம முதலியார் மடம், 7 பழநிக்கவுண்டர் மடம், 8 ஊருக்கு வெளியில் வடகோடியில் பரிவேட்டைமண்டபமும் இருக்கின்றன.

அவிநாசியப்பரையும் பெருங்கருணையைச் செல்வியை யும் தரிசிக்கவரும் வெளியூர் யாத்திரைவாசிகள் மேற்காட்டிய மடங்களிலும், லோகல் பண்டு சத்திரம் முசாபரி பங்களா விலும், தர்மசத்திரங்களிலும் வசதியாய்த் தங்கியிருக்கலாம்.

இவையேயன்றி, புக்கொளியூர் தாமரைக் குளத்திற்குத் தென்பால் புக்கொளியூர் புதுநந்தனவனமும், ஸ்ரீ திருநாவுக் கரசு சுவாமிகள் திருமடாலயமும், புக்கொளியூர் பழைய நந் தனவனமும் இருக்கின்றன. இவற்றைத் தங்கள் மேற்பார் வையிலும் தங்கள் அதிகாரத்திலும் வைத்துக்கொண் டிருக் கும் பெரியோர்கள் கல்வி, சீலம், மெய்யன்பு, பரோபகாரம், கடவுட்பத்தி முதலியவற்றில் சிறந்து விளங்குகின்றனர். புதுநந்தனவனத்திலும், பழைய நந்தனவனத்திலும் மிகுதி யான பல்வகை மலர்கள் அருமையாக வளர்க்கப்பட்டு அவற்றை ஆசாரத்துடன் கொய்து நேர்த்தியான மாலைகளா கத்தொடுத்து காலைமாலைகளில் அவிநாசியப்பர், பெருங்கரு ணையச்செல்வி, ஆனந்தநடராசர் முதலியோருக்கும் மற்றும் தெய்வங்களுக்கும் அழகாகச் சாத்துபடிசெய்வித்துவரும் இந்நந்தனவனக் காப்பாளர்கள்தம் மெய்யன்பும், பெருமுயற் சியும், சலியாவூக்கமும் யாவராலும் பெரிதும் பாராட்டற் குரியன.

அவிநாசியும் அதனைப் பத்துமைல்சுற்றளவு சூழ்ந்துள்ள சிவதலங்களும்

ஸ்ரீ அவிநாசியப்பரையும், ஸ்ரீ பெருங்கருணைப் பிராட்டியாரையும் தரிசிக்கவரும் அன்பர்கள், அவிநாசித் திருத்தலத்தைச் சூழ்ந்துள்ள சிவதலங்களையும் தரிசிக்க விரும்புவார்கள். அவர்கள் விருப்பத்தையும், நலத்தையும் கருதி ஆங்காங்கமைந்துள்ள சிவ தலங்களையும், அத்தலங்களில் ஆலயங்கொண்டருளும் சிவமூர்த்தங்களின் திருப்பெயர்களையும், அத்தலங்களிருக்கும் திசைகளையும் மைல்கள் அளவுகளையும் சுருக்கமாக இதன்கீழ் விவரமாகக் குறித்திருக்கின்றோம் :

வடதிசை.

(1) சேவூர்:—வைப்புத்தலம். மாட்டூர் என்ற பெயரும் உண்டு. சுவாமி பெயர் **வாலீச்சுரர்**. தேவிபெயர் அறம் வளர்த்தசெல்வி (தர்மசம்வர்த்தனி). இது அவிநாசியினின்றும் ஐந்துமைல்தூரத்தி லிருக்கிறது. நல்ல ரோட்டு, ஜட்காவண்டியும், ஒத்தைமாட்டுவண்டியும், வாடகைக்குக் கிடைக்கும். மோட்டார் பஸ்ஸும் உண்டு.

(2) மோக்கணீச்சுரம்:—திருவாசக வைப்புத்தலம். **குடக்கோட்டூர்** என்றபெயரும் உண்டு. சுவாமிபெயரும், தேவிபெயரும் அறியக்கூடவில்லை. இப்பொழுது ஆலயம்பாழ்பட்டுக் கிடக்கிறது. இவ்வாலயம் சேவூரினின்று மூன்றுமைலில் தாழையூத்துப் பள்ளத்தில் ஓர் காட்டுக்குள் ளிருக்கிறது.

(3) நடுவச்சேரி:—சிவஸ்தலம். சுவாமிபெயர் கோதீச்சுரர். தேவிபெயர் கோமளவல்லி. இது அவிநாசியிலிருந்து அன்னூர் செல்லும் நடைபாதையில் எட்டாவது மைலி லிருக்கிறது. மோட்டார்பஸ்ஸில் போகலாம்.

(4) கருவலூர்:—சிவஸ்தலம். இராமநாதபுரம் என்ற பெயரும் வழங்கப்படுகிறது. சுவாமி பெயர் கங்காதர ஈச்சுரர். தேவிபெயர் பவானிசங்கரி. இது அவிநாசியிலிருந்து 6-கல்லி லிருக்கிறது : அன்னூர் செல்லும் ரோட்டில் இருக்கிறது. மோட்டார் பஸ்ஸில் செல்லலாம். இவ்வூர் மாரியம்மன் அவிநாசித் தாலூக்காவில் பிரசித்திபெற்ற தெய்வம். கண்ணொளியிழந்தவர்கள் இவ்வூரில்வந்து தேவியைப் பிரார்த்தித்து வழிபட்டால் கண்ணொளி பெறுகின்றனர்.

மேற்றிசை.

(5) அன்னியூர் சிவஸ்தலம். சங்கநூல்களில் பெயர்கூறப்படுகிற அன்னியென்னும் புரவலர் பெருமகன்வாழ்ந்த ஊரென்று கூறுகின்றனர். சுவாமி தேவியார்பெயர்கள் தெரியக்கூடவில்லை. இது அவிநாசியிலிருந்து மேற்கில் 12 மைலில் இருக்கிறது. பழைமையான கோவில் கர்ப்பக்கிரகத்தில் கல்வெட்டுக ளிருக்கின்றன.

(6) துறவலூர்:—சிவ தலம். இதற்கு அபிஷேகபுரம் என்ற பெயரும் வழங்கப்படுகிறது. சுவாமி பெயர் ஐராவத ஈச்சுரர். தேவி பெயர் தெரியக் கூடவில்லை. இது அவிநாசிக்கு வடகிழக்கில் எட்டு மைலில் இருக்கிறது.

(7) பெருமாநல்லூர்:—சிவதலம் சுவாமிபெயர் உத்தமலிங்கேச்சுரர். தேவி பெயர் ஆவுடைநாயகி. பழைமையான கோவில், கர்ப்பகிரகத்தில் கல்வெட்டுகளிருக்கின்றன. 'குண்டத்துக்காளி' என்ற தேவி ஆலயம் ஒன்று இங்கு பிரபல கீர்த்திபெற்று விளங்குகிறது. இதற்குப் பங்குனிமாதம் பிரம்மோற்சவம் சிறப்பாக நடைபெறுகிறது. நாட்டுப்புறத்து மக்கள் பெருந்தொகையினர் இவ்வுற்சவத்தைக் கண்டு களிக்கக்கூடுவர். இது, அவிநாசிக்கு நேர்கிழக்கில் 6-மைலிலிருக்கிறது.

(8) கஞ்சப்பள்ளி:—சிவதலம். சுவாமிபெயர் தேனீச்சுரர். தேவிபெயர் தேனும்பிகை.

(9) பழங்கரை:—சிவதலம். சுவாமிபெயர் சோளீச்சுரர்; தேவிபெயர் சூராளகேஸ்வரி. இது அவிநாசிக்குநேர் கிழக்கில் இரண்டரைமைலிலுள்ளது. நல்லரோட்டு.

(10) பூலுவபாளையம்:—சிவதலம். சுவாமி அம்மன் பெயர்கள் தெரியக்கூடவில்லை. அவிநாசிக்கு மேற்கில் ஒருமைலிலிருக்கிறது.

(11) தேக்கலூர்:—சிவதலம். தேவிபெயர் அழகுநாச்சியம்மன். அவிநாசிக்கு மேற்கில் ஐந்துமைல் தூரத்திலிருக்கிறது. சுவாமிபெயர் தெரியக்கூடவில்லை.

(12) திருப்பூர்:— சிவதலம். சுவாமிபெயர் விசுவநாதர். தேவிபெயர் விசாலாட்சி. பழைமையான கோவில். அவிநாசியி லிருந்து திருமுருகன்பூண்டி வழியில் ஆறுமைலிலிருக்கிறது. பஞ்சு வியாபாரத்தில் பெயர் சிறந்தது. முனிசிபாலிட்டியுடையது.

(13) குரக்குத்தளி:—சிவதலம். பெரியபாளையம் என்ற பெயரும் உண்டு. சுவாமிபெயர் சுக்ரீச்சுரர். தேவி

பெயர் கோவர்த்தனும்பிகை. தேவார வைப்புத் தலம். கொங்கேழ் சிவதலங்களில் ஒன்று. பாடல் பெற்றது.

(14) திருமுருகன்பூண்டி :—சுவாமி பெயர் முருகநாதீச்சுரர். தேவி பெயர் முயங்குபூண்முலையம்மையார். இது அவிநாசிக்கு நேர்கிழக்கில் மூன்று மைல் தூரத்தி லிருக்கிறது.

(15) கோயில்பாளையம் :—சிவ தலம். பழைமையானது. சுமாமி பெயர் காலகாலேச்சுரர், தேவி பெயர் கவைய காளியம்மை.

(16) வேலாயுதம்பாளையம் :— சுப்பிரமணியர் ஸ்தலம், தேவர் பெயர் ஸ்ரீ குழந்தைவேலாயுத சுவாமி. சிறிய குன்றின்மீது ஆலயங் கொண்டருள்கின்றனர்.

(17) ஆகாசராயன் கோவில் :—இது புக்கொளியூர் பழைய நந்தனவனத்திற்கு மேற்கில் இரண்டு மைல் தூரத்தி லிருக்கிறது. சக்தியுள்ள தெய்வம். பொய் வழக் கிட்டுச் சாதிப்பவர்களைச் சத்தியம் செய்யச் சொல்லி அழைத்துவந்து கற்பூரம் கொளுத்தி கோயில்முன் னின்று அணைக்கச்செய்வது இங்கு விசேடமாகக் கைக்கொள்ளப்பட்டு வருகிறது. பொய்ச் சத்தியம் செய்தவர், தெய்வத்தால் நன்றாகத் தண்டிக்கப்படு வது நாளைக்கும் இங்கு பிரத்யட்சமாய்க் காணலாம். இதுபற்றி இப்பக்கங்களில், அபிஷேக அலங்கா வைபவங்களுக்கு அவிநாசியப்பரும், ஆணை சத்தியத் திற்கு ஆகாசராயனும்" என்றபழமொழியும் வழங்கப் பட்டு வருகிறது.

இவ்வளவே, அவிநாசித் திருத்தலத்துக்குச் சுற்றுப் பக்கத்துள்ள சிவதலங்களும், பிறவும்.

6

பிரபந்தங்களும்—பாடினோர்களும்

இத்திருத்தலத்திற்குச் செய்யுள் வடிவில் ஒரு தமிழ்ப் புராணமும், இரண்டு பிள்ளைத் தமிழ்களும், கருணாகர மாலையும், கீர்த்தனங்களும், அவிநாசி நான்மணிமாலையும் இருக்கின்றன. இவைகள் அச்சேறியுள்ளன. அவிநாசித்தல புராணம் கோயமுத்தூர் வித்துவான் திருவாளர் கந்தசாமி முதலியார் அவர்களாலும், ஷியூர் டவுன் ஸ்கூல் தமிழ் வித்துவான் திருவாளர் நெகமம். முத்துநாகப்ப முதலியாரவர்களாலும் திருத்தப்பட்டு, திருப்பூர் ஸ்ரீமான் சு. சாமி செட்டியார் அவர்கள் சகோதரரும், அவிநாசி தேவஸ்தானக் கமிட்டி மெம்பரும், சாவுகாரருமான ஸ்ரீமான் நா. அங்கப்ப செட்டியாரவர்களால், சென்னை சி. அருணசல செட்டியார் அவர்களது ஸ்ரீதயாநிதி அச்சுக்கூடத்தில் விய வருஷம் பங்குனி மாதத்தில் பதிப்பிக்கப் பெற்றது. இப் புராணத்தைப் பாடிய பெரியார் அப்பிரமேயதல புராணம் பாடிய இளையான் கவிராயரென்று கூறப்படுகிறது. இரண்டு பிள்ளைத் தமிழ்களில் ஒன்றின் பெயர், புக்கொளியூர் அவிநாசி பெருங்கருணையம்மைப் பிள்ளைத்தமிழ் என்பது. இதனை இயற்றியவர் கோயமுத்தூர் வழக்கறிஞரும், சைவப் பெரியாரும், பெரிய புராண உரையாசிரியர்களில் ஒருவரும், தமிழ்ப்பெரும் புலவருமாகிய திருவாளர் C. K. சுப்பிரமணிய முதலியார் B. A. அவர்கள் ஆவர். இது 1926-ஆம் ஆண்டில் சென்னை சிவகாமி விலாச அச்சுக்கூடத்தில் பதிப்பிக்கப் பெற்றது. விலை 10-அணா. மற்றொரு பிள்ளைத்தமிழ் பாடிய ஆசிரியர் பெயர் தெரியக்கூடவில்லை. நூல் ஓலைச் சுவடியில் அவிநாசியில் ஸ்ரீ சிதம்பர ஓதுவா மூர்த்திகளிடம் இருக்கிறது. மாதிரிக்காக வேறோர் இடத்தில் அப் பிள்ளைத்தமிழ்ப் பாடல் ஒன்றைப் பிரசுரித்திருக்கிறோம். கருணாகரமாலை

யும்-கீர்த்தனைகளும் பாடிய பெரியார் பெயர் கருணைதாசர் என்பது. இது இவரது சிறப்புப் பெயர். இயற் பெயர் கரும்புலவரென்பது. இப் பெரியார் பிறப்பகம் திருநெல் வேலி ஜில்லா. வாசுதேவநல்லூரைச்சார்ந்த பனங்காட்டூர் என்ப. இவர் இன்றைக்கு 56-ஆண்டுகளுக்குமுன் ஜீவித் திருந்ததாக அறியப்படுகிறது. இச்சிறு நூல் 1929-ஆம் ஆண்டில் திருப்பூர் ஸ்ரீ கருணாம்பிகை அச்சுக்கூடத்தில் பதிப் பிக்கப் பெற்றிருக்கிறது. அவிநாசி நான்மணிமாலையின் ஆசிரியர் தாராபுரம் பஞ்சாயத்துக் கோர்ட்டுத் தலைவர் ஸ்ரீமான் தா. நா. ஆறுமுகம் பிள்ளை அவர்கள் ஆவர். வேறுபல பிரபந்தங்களும் இருப்பதாகக் கூறுகின்றனர். அவை இன்னவை என்று தெளிவாக அறியக்கூடாமல் இருக்கிறது.

தேவாரம் திருப்புகழ்களும், பிற நூற்களும்

சுந்தரமூர்த்தி சுவாமிகள்

அருளிச்செய்த

திருப்புக்கொளியூர் அவிநாசித்திருப்பதிகம்

பண் - குறிஞ்சி

எத்தான் மறக்கே னெழுமைக்கு மெம்பெரு மானையே
யுற்றுயென் றன்னையே யுள்குகின் றேனுணர்ந் துள்ளத்தால்
புற்று டரவா புக்கொளி யூரவி நாசியே
பற்றுக வாழ்வேன் பசுபதி யேபர மேட்டியே. (1)

வழிபோவார் தம்மோடும் வந்துடன் கூடிய மாமணியே
யொழிவ தழகோ சொல்லாய் அருளோங்கு சடையானே
பொழிலாருஞ் சோலைப் புக்கொளி யூரிற் குளத்திடை
யிழியாக் குளித்த மாணியென் னைக்கிறி செய்ததே. (2)

எங்கேனும் போகினும் எம்பெருமானை நினைந்தக்கால்
கொங்கே புகினும் கூறைகொண் டாறலைப் பாரில்லைப்
பொங்கா டரவா புக்கொளி யூரவி நாசியே
யெங்கோ னேயுனை வேண்டிக்கொள் வேன்பிற வாமையே. (3)

உரைப்பா ருரைப்பவை யுள்கவல் லார்தங்க ளுச்சியாய்
அரைக்கா டரவா வாதியு மந்தமு மாயினாய்
புரைக்காடு சோலைப் புக்கொளி யூரவி நாசியே
கரைக்கான் முதலையைப் பிள்ளை தரச்சொல்லு காலனையே. (4)

அரங்காவ தெல்லா மாயிடு காடது வன்றியுஞ்
சரங்கோலை வாங்கி வரிசிலை நாணியிற் சந்தித்துப்
புரங்கெட வெய்தாய் புக்கொளி யூரவி நாசியே
குரங்காடு சோலைக் கோயில் கொண்ட குழகனே. (5)

நாத்தானு முன்னைப் பாட லின்றிநவி லாதென்னாச்
சோத்தென்று தேவர் தொழநின்ற சுந்தரச் சோதியாய்
பூத்தாழ் சடையாய் புக்கொளி யூரவி நாசியே
கூத்தா வுனக்குநா னட்பட்ட குற்றமுங் குற்றமே. (6)

மந்தி கடுவனுக் குண்பழ நாடி மலைப்புறஞ்
சந்திக டோறுஞ் சலபுட்ப மிட்டு வழிபடப்
புந்தி யுறைவாய் புக்கொளி யூரவி நாசியே
நந்தி யுனைவேண்டிக் கொள்வே னரகம் புகாமையே. (7)

பேணா தொழிந்தேன் உன்னைய லாற்பிற தேவரைக்
காணா தொழிந்தேன் காட்டுதி யேலின்னங் காண்பனான்
பூணா ணரவா புக்கொளி யூரவி நாசியே
காணாத கண்கள் காட்ட வல்லகறைக் கண்டனே. (8)

நள்ளாறு தெள்ளா றரத்துறைவா யெங்க ளம்பனே
வெள்ளாடை வேண்டாய் வேங்கையின் றோலை விரும்பினாய்
புள்ளேறு சோலைப் புக்கொளி யூரிற் குளத்திடை
யுள்ளாடப் புக்க மாணி யென்னைக்கிறி செய்ததே. (9)

நீரேற வேறுநிமிர் புன்சடை நின்மல மூர்த்தியைப்
போரேற தேறியைப் புக்கொளி யூரவி நாசியைக்

காரேறு கண்டனைத் தொண்டனூரூரன் கருதிய
சீரேறு பாடல்கள் செப்பவல் லார்க்கில்லை துன்பமே. (10)

திருவாசகம் ஆனந்தமாலை.

நரியைக் குதிரைப் பரியாக்கி ஞாலமெல்லா நிகழ்வித்துப்
[துறையாய்
பெரிய தென்னன் மதுரையெல்லாம் பிச்சதேற்றும் பெருந்
அரிய பொருளே யவிநாசி யப்பா பாண்டி வெள்ளமே
தெரிய வரிய பரஞ்சோதி செய்வ தொன்று மறியேனே. (10)

திருமூலர் திருமந்திரம்

தலைவி தடமுலை மேனின்ற தையல்
தொலைவிற் றவஞ்செய்யும் தூய்நெறித் தோகை
கலைபல வென்றிடுங் கன்னியென் னுள்ள
நிலைபெற விங்கே நிறைந்துநின் றாளே.

பதினோராந் திருமுறை திருத்தொண்டர் திருவந்தாதி

கொடுத்தான் முதலைகொள் பிள்ளைக் குயிரன்று புக்கொளியூர்த்
தொடுத்தான் மதுர கவியவி நாசியை வேடர் சுற்றம்
படுத்தான் றிருமுருகன் பூண்டியினிற் பராபரத்தேன்
மடுத்தா வைனென்பர் வன்றொண்ட னாகின்ற மாதவனே.

பெரியபுராணம் வெள்ளானைச் சருக்கம்

மைந்தன் றன்னை யிழந்த துயர்
மறந்து நான்வந் தணைந்ததற்கே
சிந்தை மகிழ்ந்தார் மறையோனு
மனைவி தானுஞ் சிறுவனையான்
அந்த முதலை வாய்நின்று
மழைத்துக் கொடுத்தே யவிநாசி
யெந்தை பெருமான் கழல் பணிவே
னென்றார் சென்று ரிடர்களைவார். (9)

இவ்வா றருளிச் செய்தருளி
யிவர்கள் புதல்வன் றனைக்கொடிய
வெவ்வாய் முதலை விழுங்குமடு
வெங்கே யென்று வினவிக்கேட்
டவ்வாழ் பொய்கைக் கரையிலெழுந்
தருளி யவனை யன்றுகவர்
வைவ்வா றெயிற்று முதலைகொடு
வருதற் கெடுத்தார் திருப்பதிகம் (10)

உரைப்பா ருறையென் றெடுத்ததிருப்
பாட்டு முடியா முன்னுயர்ந்த
வரைப்பான் மையினீ டடம்புயத்து
மறலி மைந்தனுயிர் கொணர்ந்து
திரைப்பாய் புனலின் முதலைவயிற்
றுடலிற் சென்ற வாண்டுகளுந்
தரைப்பால் வளர்ந்த தெனநிரம்ப
முதலை வாயிற் றருவித்தான். (11)

பெருவாய் முதலை கரையின்கட்
கொடுவந் துமிழ்ந்த பிள்ளைதனை
யுருகா நின்ற தாயோடி
யெடுத்துக் கொடுவந் துயிரளித்த
திருவா ளன்றன் சேவடிக்கீழ்ச்
சில மறையோ னுடுவீழ்த்தாண்
மருவார் தருவின் மலர்மாரி
மொழிந்தார் விசும்பில் வானோர்கள். (12)

பெரிய-புரா-நமிநந்தியடிகள் நாயனார் புராணம்

நாட்டா ரறிய முன்னாளி
னந்நா ளிறந்த வைம்படையின்
பூட்டார் மரபிற் சிறியமறைப்
புதல்வன் றன்னைப் புக்கொளியூர்த்

தாட்டா மரைநீர் மடுவின்கட்
டனிமா முதலை வாய்நின்று
மீட்டார் கழலே நினைவாரை
மீளா வழியின் மீட்பனவே" (13)

அருணகிரிநாத சுவாமிகள் திருப்புகழ்

புக்கொளியூர்

மதப்பட்டவி சாலக போலமு
முகப்பிற்சன வாடையு மோடையு
மருக்கற்புர லேபல லாடமு மஞ்சையாரி

வயிற்றுக்கிடு சீகர பாணியு
மிதற் செக்கர்வி லோசன வேகமு
மணிச்சத்தக டோரபு ரோசமு மொன்றுகோல;

விதப்பட்டவெ ளானையி லேறியு
நிறைக்கற்பக நீழலி லாறியும்
விஷதுர்க்கன சூளிகை மாளிகை யிந்தரலோகம்

விளக்கச்சுரர் சூழ்தர வாழ்தரு
பிரபுத்வகு மாரசொ ரூபக
வெளிப்பட் டெனை யாள்வய லூரிலி ருந்தவாழ்வே;

இதப்பட்டிட வேகம லாலய
வொருத்திக்கிசை வானபொ னுயிர
மியற்றப்பதி தோறுமு லாவிய தொண்டர்தாள

இசைக்கொக்கவி ராசத பாவனை
யுளப் பெற்றெடு பாடிட வேடையி
லிளைப்புக்கிட வார்மறை யோனென வந்துகானிற்;

றிதப்பட்டெதி ரேபெர்தி சோறினை
யவிழ்த்திட்டவி நாசியி லேவரு
திசைக்குற்றச காயனு மாகிம றைந்துபோமுன்

செறிப்பித்தக ராவதின் வாய்மக
வழைப்பித்தபு ராணக்ரு பாகர
திருப்புக்கொளி யூருடை யார்புகழ் தம்பிரானே (2)

அவிநாசி

பந்தப்பொற் பாரப யோதர
முந்திச்சிற் றுடகை மேகலை
பண்புற்றுத் தாளொடு மேவிய துகிலோடே
பண்டெச்சிற் சேரியில் வீதியில்
கண்டிச்சிச் சாரொடு மேவியெ
பங்குக்கைக் காசுகொள் வேசியர் பனிநீர்தோய்;
கொந்துச்சிப் பூவணி கோதையர்
சந்தச்செந் தாமரை வாயினர்
கும்பிட்டுப் பாணியர் வீணிய ரனுராகங்
கொண்டுற்றுப் பாயலின் மூழ்கினு
மண்டிச்செச் சேயென வானவர்
கொஞ்சுற்றுத் தாழ்பத தாமரை மறவேனே;
அந்தத்தொக் காதியு மாதியும்
வந்திக்கத் தானவர் வாழ்வுறும்
அண்டத்துப் பாலுற மாமணி யொளிவீசி
அங்கத்தைப் பாவைசெய் தாமென
சங்கத்துற் றார்தமி ழோதவு
வந்துக்கிட் டார்கழு வேறிட வொருகோடிச்;
சந்தச்செக் காளநி சாசரர்
வெந்துக்கத் தூளிப டாமெழ
சண்டைக் கெய்த் தாரம ராபதி குடியேறத்
தங்கச்செக் கோலசை சேவக
கொங்கிற்றெருக் காரவி நாசியில்
தண்டைச்சிக் காரயில் வேல்விடு பெருமாளே.(2)

யாத்ரீகர்கள் பிரார்த்தனை யுடையவர்களாயின்,
அவிநாசியப்பர் ஆலயத்துக்கு செலுத்த வேண்டிய கட்டண
விவரங்களும், சாதாரணமான பூசைகளுக்குச் செலுத்த
வேண்டிய காணிக்கைகளும்.

		ரூ. அ. பை.
(1)	உபயாபிஷேகம் 3 சந்நிதிகளில் வெள்ளி கவாய் சாத்துபடிக்கு	11—8—0
(2)	அபிஷேகம் நடாத்த ரொக்கம்	6—4—0
(3)	அபிஷேகத்திற்கு	4—8—0
(4)	(i) வாகனருடம் உற்சவத்திற்கு	50—0—0
(2)	(ii) ஷை உற்சவத்திற்கு	30—0—0
(3)	(iii) ஷை உற்சவத்திற்கு	20—0—0

நைவேத்திய கட்டளை விவரம்.

வெண்பொங்கல்	2—4—0
சர்க்கரைப் பொங்கல்	5—0—0
புளியோதரை	3—0—0
தத்தியோதனம்	3—0—0
வடை, பாயஸம்	2—8—0
எள்ளோதனம்	1—8—0
அதிரசம்	5—0—0

மற்றுமுள்ள விவரங்களுக்குத் தேவஸ்தானம்
ஆபீஸில் மேனேஜரிடம் கேட்டுத் தெரிந்து
கொள்ளவும்.

சகஸ்ரநாமார்ச்சனை 1-க்கு நைவேத்திய சகிதம்	1—8—0
அஷ்டோத்திர அர்ச்சனை 1-க்கு	0—2—6

	ரூ: அ. பை.
சந்நிதி 1-க்கு தீபாராதனை தட்சணை	0—1—0
அபிமானிகள் பூஜைக்குகொண்டுவரும் தேங்காய் 1-க்கு உண்டிகையில் போடவேண்டியது	0—1—
மலைவடுகர் பூஜைக்கு தேவஸ்தானத்திற்கு	3—0—0
தம்பதிகள் தரிசனம்	1—0—0
முடி காணிக்கை உண்டிக்கு	0—4—0
ஷஷ்டி சுவாமி காணிக்கை	0—4—0
பேர் காணிக்கை	0—4—0
காசிக் கங்கையில் ஸ்நானம் செய்யும் அன்பர்கள் ஸ்தல குருக்களிடம் நபர் 1-க்கு	0—1—0
சங்கல்பஞ் சொல்லி ஸ்நானம் செய்வதற்கு	0—4—0

காலபைரவ சுவாமிக்கு வடைமாலை

1008 சாத்துப்படிக்கு	12—0—0
108 வடை சாத்துப்படிக்கு	1—8—0

இறுவாய்

இவ்வளவே, இத் திருத்தலத்தைப்பற்றி இப்பொழுது நாமுரைக்கத்தக்கவை. இவைகளை அன்பர்கள் ஊன்றிப் படித்து உளத்தில் அமைத்துச் 'செறிப்பித்தகராவதன் வாய் மகவழைப்பித்த புராணக் கிருபாகரனும், திருப்புக்கொளியூர் அவிநாசியைத் திருக்கோயிலாகக் கொண்டுறையும் நம்பனு' மான ஸ்ரீ அவிநாசியப்பர் பேரருளுக்குப் பாத்திரராகும்படி அவர்களை நாம் கேட்டுக் கொள்ளுகிறோம். நலம்.

முற்றிற்று. ௸ 6—0

கேசரி அச்சுக்கூடம், சென்னை.

விளம்பரம்.

ஸ்ரீ கிருஷ்ண விலாஸ சிற்றுண்டிச் சாலை

லோகல் பண்டு சத்திரம்,
போலீஸ் ஸ்டேஷன்களுக்கு எதிரில்
மெயின் ரோட், அவிநாசி

கனவான்களே!

எமது சிற்றுண்டிச் சாலையில் வாடிக்கையாக வருவார் தொகை மிகுதி. காரணம்: தகுந்த கவனத்துடனும், சுகாதார முறைப்படியும் கைபாகம், செய்பாகங்களில் தேர்ந்த வேலைக்காரர்களைக் கொண்டு நாவிற்கு ருசியும், மனத்திற்கு மகிழ்ச்சியும் தரும் சிற்றுண்டிகளைத் தயார்செய்து அவற்றைப் புசிக்க வருவோர் குறிப்பறிந்து அன்புடன் உபசரிப்பதினாலேயாம். "திருப்பூர் காப்பி கிளப்" என்று பெயர் சிறந்த எங்கள் சிற்றுண்டிச் சாலையில், சுத்தமான நெய்யிலும், கலப்பற்ற நல்லெண்ணையிலுமே பட்க்ஷணங்கள் தயாரித்து நீண்ட நாளாக விற்கப்பட்டு வருகிறது. அன்பர்கள் ஒரு முறை எங்கள் காப்பிக்கிளப்புக்கு வந்து காப்பி அருந்துவார்களாயின், வேறு கடைகளுக்கு ஓர் அடியெடுத்தும் வையார். ஆனதால், அன்பர்கள் யாவரும் தயவுசெய்து எங்கள் சிற்றுண்டிச் சாலைக்கே விஜயஞ்செய்ய விரும்புகின்றோம்.

நாகரீகமான போஜனமும் நாங்களே தயார் செய்து கனவான்களை உபசரித்து அவர்கள் அன்பையும் ஆதரவையும் பெற்று வருகிறோம். உற்சவ காலங்களில் சிறப்பான பட்சணங்கள் தயாரித்துக் கடையை அலங்காரம் செய்து வைப்போம்.

அவிநாசி
15-4-36.

இப்படிக்கு,
பி. கி. கிருஷ்ணமணி அய்யர்.